# பாப்பதிகாரம்

புலவர் குழந்தை

## புலவர் குழந்தையின் பிறநூல்கள்

1. இராவண காவியம் (அரசினரால் தடைசெய்யப்பட்டது)
2. திருக்குறள் - குழந்தையுரை
3. திருக்குறளும் பரிமேலழகரும்
4. நெருஞ்சிப்பழம் (செய்யுள்)
5. தமிழ் வாழ்க (நாடகம்)

திருநஞ்சைச் சிலேடைவெண்பா

ால் காப்பியர் காலத் தமிழர்

ெழுத்துச் சீர்திருத்தம்

ாங்கு நாடும் தமிழும்

கொங்குக் குலமணிகள்

1. தீரன் சின்னமலை

2. அருந்தமிழ் விருந்து

## விரைவில் வெளிவரும் நூல்கள்

1. சின்னமலை (நாடகம்)
2. நீதிக் களஞ்சியம்

# யாப்பதிகாரம்

புலவர் குழந்தை

பாரி நிலையம்
59, பிராட்வே - சென்னை 1.

முதற் பதிப்பு—1959
இரண்டாம் பதிப்பு—1961
உரிமை ஆசிரியருக்கு

விலை ரூ. 3

ஜெனரல் பிரிண்டர்ஸ், பெரியமெட், சென்னை-3

# முகவுரை

உலக மொழிகளுள் தமிழ் மொழியே முதன்மையான மொழியாகும். காரணம், இதன் இயல்பும் எளிமையும் இனிமையுமே யாகும். தமிழ்எழுத்துக்கள் எல்லாம் இயல்பான ஒலியுடையவை. அவ் வெழுத்துக்கள் தனித்தும் சொல்லின்கண்ணும் ஒரே தன்மையாக ஒலிக்கும் இ[illegible]புடையவை. தோன்றல் திரிதல் கெடுதல் என்னும் மூன்று வகையில் புணர்ந்து, சொன்னயமும் பொருணயமும் ஓசை நயமும் பயக்குந்தன்மை தமிழ் எழுத்துக்களுக்கே உரிய தனித்தன்மை யாகும். இவையே தமிழ்மொழியின் இயல்புக்கும் எளிமைக்கும் இனிமைக்கும் காரணமாகும்.

பேச எழுதப் படுதல், இலக்கியப் பரப்பும் இலக்கண வரம்பும் உடைமை, பழமையும் இளமையும் உடைமை என்னும் இம் முப்பண்பும் உடைய மொழி **உயர்தனிச் செம்மொழி** எனப்படும். உலக மொழிகளில் இன்று உயர்மொழிக்குரிய அம் முப்பண்பும் உடைய உயர்தனிச் செம்மொழி தமிழ்மொழி ஒன்றே யாகும்.

தமிழ்மொழி மிக எளிதில் பேசவும் எழுதவும் படுவது; நிரம்பிய இலக்கியச்செல்வ முடையது; முற்ற முடிந்த திண்ணிய இலக்கண வரம்புடையது; கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தின் முன்தோன்றி மூத்தது;

''பல்லுயிரும் பலவுலகும் படைத்தளித்துத்
துடைக்கினுமோர்
எல்லையறு பரம்பொருள்முன் இருந்தபடி யிருப்பதுபோல்
கன்னடமுங் களிதெலுங்குங் கவின்மலையா ளமுந்துளுவும்
உன்னுதரத் துதித்தெழுந்தே ஒன்றுபல வாயிடினும்
ஆரியம்போல் உலகவழக் கழிந்தொழிந்து சிதையாநின்
சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே''
—மனோன்மணீயம்

என, பேராசிரியர் சுந்தரம் பிள்ளை அவர்கள் வியக்கும் அத்தகு இளமைநல முடையது.

பேசுந் தமிழ் - **பேச்சு வழக்கு** எனவும், எழுதுந் தமிழ்—**செய்யுள் வழக்கு** எனவும் பெயர் பெறும். மக்கள் வாழும் வாழ்க்கை முறையினைச் சிறப்புறப் புனைந்து செய்யப்படுதலின் அது செய்யுள் வழக்கு எனப் பெயர் பெற்றது. முன்னர் இலக்கியம் இலக்கணம் இரண்டும் செய்யுள் நடையிலேயே செய்யப்பட்டமையால் எழுதுந் தமிழ் செய்யுள் வழக்கு எனப் பெயர் பெற்றது எனினுமாம்.

அச்செய்யுள் வழக்கு-செய்யுள்நடை, உரைநடைஎன இருவகைப்படும். பழங்காலத்திலிருந்தே இவ் விருவகை நடையும் எழுதுந் தமிழில் பயின்று வந்தன. 'பாட்டுரை நூலே' என்பது தொல்காப்பியம். 'உரை யிடையிட்ட பாட்டுடைச் செய்யுள்' என்பது சிலப்பதிகாரம். இவ் விருவகை நடையும் ஒரு மொழிக்கு இரு கண்போன்றவை.

இவ் விருவகை நடையில், சில்வகை எழுத்தில பல் வகைப் பொருளை, எண்வகைச் சுவையுந் ததும்ப, சொல்லணி பொருளணி என்னும் இருவகை அணிநலத் துடன், சுருங்கச் சொல்லல் விளங்க வைத்தல் ஆழ முடைத்தாதல் முதலிய அழகு மிளிர, கருத்தைக் கவ்வுங் கற்பனைச் செறிவுடன் அமைத்துக் கூற ஏற்ற இடம் செய்யுளே யாகும்.

எளிதில் மனப்பாடம் செய்யவும், வேண்டும்போது பிறர்க்கெடுத் துரைக்கவும், நெடுங்காலம் கல்மேல் எழுத்துப் போல் மனத்தில் நின்று நிலைபெறவும் ஏற்றது செய்யுளே யாகும்.

மோனை எதுகை முதலிய தொடையழகும் நடையழகும் பொருந்த, இனிய ஓசைநலத்தால் படிப்போர்க்கும் கேட்போர்க்கும் இன்பூட்டி, உள்ளக் கிளர்ச்சியை யுண்டாக்கி, கருத்துணர்ச்சியில் கருத்தைத் தோய்விக்க வல்லது செய்யுள்நடையே யாகும்.

திருப்பித் திருப்பிப் பன்முறை படித்துப் படித்துச் சுவைத்து இன்புறுதற்கேற்றது செய்யுள்நடையே யாகும். 'பாட்டும் பொருளும் பொருளால் பொருந்தும் பயனும் என்பால் கூட்டும்' என்பது குமரகுருபரர் பாட்டு.

இத்தகு சிறப்புடைமை நோக்கியே, நமது முன்னையோர் இலக்கியம் இலக்கணம் என்னும் இருவகை நூல்களையும் செய்யுள் நடையிலேயே செய்து வந்தனர். உரைநடை, 'பாட்டின் உரை' என்னும் அளவிலேயே பயன்படுத்தப்பட்டு வந்தது.

ஆனால், வரவர இந்நிலை மாறத் தலைப்பட்டது. 'உரை' என்னும் அளவில் இருந்து வந்த உரைநடை தனி நூல் வடிவை அடையத் தொடங்கியது. அதனால், தமிழ் வாணர்க்குத் தமிழ்ப் புலவர் என்னும் பெயர் போய், தமிழ் எழுத்தாளர் என்னும் பெயர் ஏற்படலானது. அன்று செய்யுள்நடை இலக்கியம் முதன்மையுற்று வளர்ந்து வந்தமைபோல, இன்று உரைநடை இலக்கியம் முதன்மையுற்று வளம்பெற வளர்ந்து வருகிறது. சிறுகதை, தொடர்கதை, ஆராய்ச்சிக் கட்டுரை, நாடகம் முதலியன எழுதித் தனிநூல் வடிவாகவும், வார மாத இதழ்கள், நாளிதழ்களின் வாரமலர்கள் வாயிலாகவும் வெளியிட்டுத்

தமிழ் எழுத்தாளர்கள் உரைநடை இலக்கியத்தை நன்கு வளர்த்து வருகிறார்கள்.

அவ்வாறே அன்னார், கவி அல்லது கவிதை என்னும் பெயரில் செய்யுட்கள் செய்து நூல் வடிவாகவும், அவ் விதழ்களின் வாயிலாகவும் வெளியிட்டுச் செய்யுள்நடை இலக்கியத்தை வளர்த்து வருகிறார்கள். தமிழ்மக்களுக்கு யாப்பிலக்கணப் பயிற்சியும், செய்யுட் செய்யுந் திறமும் குன்றி வரும் இக்காலத்தே, கவிதைகள் செய்து செய்யுள் நடை இலக்கியத்தை வளர்க்க முயன்று வரும் அன்னார்தம் முயற்சியையும் தாய்மொழிப் பற்றையும் மனமாரப் பாராட்டுகின்றனம்.

உரைநடை இலக்கியம்போலச் செய்யுள்நடை இலக்கியமும் நன்கு வளரவேண்டும். உரைநடை இலக்கியத்தையும் செய்யுள்நடை இலக்கியத்தையும் சரிநிகராக ஒருங்கு வளர்த்தால்தான் தமிழ்மொழி வளமுற வளரும்.

இன்று உரைநடை இலக்கியம் வளர்ந்துள்ளமை போலச் செய்யுள்நடை இலக்கியம் வளம்பெற வளர வில்லை. காரணம், செய்யுள்நடை இலக்கண வரம்புக் குட்பட்டது. யாப்பிலக்கணப் பயிற்சி நன்குடையவர்க்கே உரைநடை போல எளிதில் திருத்தமான செய்யுள்நடை எழுத இயலும். இன்று பெரும்பான்மையான தமிழ் எழுத்தாளரிடை இலக்கிய அறிவு வளர்ந்துள்ளமைபோல இலக்கண அறிவு, அதிலும் யாப்பிலக்கண அறிவு நன்கு வளரவில்லை. இதுவே இன்றையக் கவிஞர்கள் கவிகளில் பெரும்பான்மை யாப்பிலக்கணப்படி திருத்தமாக அமை யப் பெறாமைக்குக் காரணமாகும். ஒருசில கவிஞர்கள் கவிகளில் கவியின் இருகண் போன்ற மோனை எதுகையே சரியாக அமையப்பெறுவதில்லை.

மோனையும் எதுகையும் கவியின் இரு கண் போன்றவை மட்டுமல்ல; அவை கவியின் உயிர்நாடியே யாம் எனல் மிகையாகாது. ஒரு பாட்டில் எதுகை மோனை சிறிது தவறினும், 'இந்தப் பாட்டு எகனை மொகனை இல்லை; இந்தப் பாட்டு ஏனை மோனை இல்லை' எனக் கல்வியறிவில்லாத மக்களும் குறைகூறும் அத்தகு சிறப் புடையவை மோனையும் எதுகையும். 'எகனை மொகனை, ஏனை மோனை' என, அன்னார் எதுகைத் தொடை அமை யக் கூறுவதே எதுகை மோனைத் தொடைகளின் இன்றி யமையாச் சிறப்பினை வலியுறுத்தும். மோனையும் எதுகை யும் நன்கு அமையப்பெறாத பாட்டுக்களை நமது முன்னோர் கள் பாட்டுக்களாகவே கொள்ளவில்லை என்பது மேற் காட்டிய எடுத்துக்காட்டால் விளங்குகிற தல்லவா?

" மோனை முத்தமிழ் மும்மத மும்பொழி
யானை முன்வந் தெதிர்த்தவ னரடா "

என்பது ஒட்டக்கூத்தர் உரை. யானையின் பெருமைக்குக் காரணமான மதத்தினைப் பாட்டின் பெருமைக்குக் காரண மான மோனைத் தொடைக்கு உவமை கூறுதலை அறிக.

மோனையும் எதுகையும் பாட்டை எளிதில் மனப் பாடம் செய்தற்கு ஏற்ற கருவிகளாகும். மோனையால் ஓர் அடியும், எதுகையால் அடுத்த அடிகளும் நினைவுக்கு வரும்.

"காரிகை நன்னூல் இலக்கணங் கற்றுக்
கவிசொலு நாவலர் தங்கள்முனே
கல்லாதவ னில்லாதவன்
வல்லமையாய்ச் சொல்லும்பிழை
கற்றறிந் தோர்கள் பொறுப்பீரே"

என்னும் **முருகர் ஒயிற் கும்மி** ஆசிரியரின் அவையடக்கத்தால், கவிஞர்க்கு யாப்பிலக்கண அறிவின் இன்றியமையாச் சிறப்பு இனிது விளங்கும்.

கவியுள்ளம் இயல்பாக அமைவது. அது ஒரு தனிப் பண்பு. ஒவ்வொரு தொழிற்றிறமும் இவ்வாறு அமைவதே. கவியெழுதும் பழக்கம் உண்டானவர்கள், அதாவது கவியுள்ளம் பெற்றவர்கள் யாப்பிலக்கணம் கற்றுக்கொள்ள வேண்டும். கவிபாடுவதில் ஆர்வமும் அக்கறையும் உள்ளவர்கள் வல்லார்வாய்க் கேட்டு இரண்டே வாரங்களில் பொதுவான யாப்பறிவைப் பெற்றுக்கொள்ளலாம். அதன் பின்னர்த் தாமே முயன்று கற்றுச் சிறந்த யாப்பறிவுடையராகலாம்.

கவிபாடிப் பழகுவோர், பெரும்புலவர்கள் செய்து வைத்துள்ள பலவகையான செய்யுட்களையும் செய்யுளோசையுடன் படித்துப் பழகவேண்டும். அவ்வோசையைக் கடைப்பிடித்து அத்தகைய செய்யுட்கள் செய்து பழகவேண்டும். செய்த செய்யுட்களைப் பெரும்புலவர் ஒருவரிடம் காட்டித் திருத்தித் திருத்தம் பெறவேண்டும். அத் திருத்தங்களைப் பன்முறை ஊன்றிப் பார்த்துப் பின்னர் அத்தகைய குற்றங் குறைகள் நேராதபடி பார்த்துக்கொள்ள வேண்டும். ஒருவர் தாமெழுதிய ஆயிரக்கணக்கான கவிகள் குப்பைத்தொட்டிக் கிரையான பின்னரே தாமெழுதுங் கவியைக் கவியெனக் கருத வேண்டும். சங்ககாலப் புலவர்கள் முதல் எல்லாப் பிற்காலப் பெரும் புலவர்களும் இவ்வாறு பாடிப் பழகிப் பயின்று கவித்திறம் பெற்றவர்களே யாவர்.

பழந்தமிழ்ப் பாண்டிய மன்னர்கள் முதலிடைகடையென மூன்று தமிழ்ச்சங்கங்கள் நடத்தித் தமிழ் வளர்த்து வந்தார்களல்லவா? முற்கூறியவாறு பாடிப் பழகிச் சிறந்த

கவிஞர்களான பழந்தமிழ்ப் புலவர்கள், தாம் பாடிய பாட்டுக்களை அச் சங்கப்புலவர் முன்னிலையில் படித்துப் பொருள் கூறி, அப் புலவர்கள் கூறும் திருத்தங்களை ஏற்றுத் திருத்திக்கொள்வர். இது **கவியரங் கேற்றுதல்** எனப்படும். அரங்கேற்றிய பாட்டுக்களைத் தொகுத்து நூல்களாக வெளியிடுவர். அவ்வாறு தேர்ந்தெடுக்கப் பட்டவையே இன்று நாம் சங்க நூல்கள் என்று பெருமை யாகக் கூறிக்கொள்ளும் **பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண் கீழ்க்கணக்கு** என்னும் நூல்கள்.

இன்றும் சில ஆண்டுகளாக ஒருசில கவிஞர்கள் தாங்கள் பாடிய கவிகளை ஒருவர் தலைமையின்கீழ் அரங் கேற்றி வருகின்றனர். ஆனால், அக்கவிகளின் குற்றங் குறைகள் எடுத்துக் கூறப்படுவதில்லை. கவிகளைப் படிப்ப தோடு சரி, அரங்கேற்றம் முடிந்துவிடுகிறது. பழந்தமிழ்ப் புலவர்கள் அரங்கேற்றினதுபோல் அரங்கேற்றுதல் வேண்டும். பழைய கவியரங்கத்தை நினைப்பூட்டுதற்காக எழுதப்பட்டதே **கவியரங்கம்** என்னும் பகுதி. அதனை நன்கு படித்துப் பயன் பெறுக.

இனி, 'நாங்களாக எப்படி யாப்பிலக்கணங் கற்றுக் கொள்வது? ஓர் இலக்கணப் புலவரை அடுத்துக் கற்றுக் கொள்ளும் நிலையில் நாங்கள் இல்லை. தமிழாசிரியர்கூட இல்லாத ஊர்களில் உள்ள நாங்கள் எங்ஙனம் யாப்பிலக் கணங் கற்றுக்கொள்ள முடியும்?'' என்கின்றனர் ஒருசில இளங்கவிஞர்கள். அன்னாரின் குறைபாட்டை நீக்க எழுந்ததே **யாப்பதிகாரம்** என்னும் இந்நூல். சிறிது முயற்சி எடுத்தால் போதும், தாமாகவே கற்றுச் சிறந்த யாப்பறிவுடையராகலாம். ஆசிரியரின்றி யாப்பிலக்கணங் கற்றுக்கொள்வதற்காகவே இந்நூல் எழுதப்பட்டதாகும்.

இனிச் செய்யுள் செய்து பழகுவோர்க்கேயன்றித் தமிழ்ச் செய்யுட்களைப் படிப்போர்க்கும் யாப்பிலக்கண

அறிவு இன்றியமையாததாகும். யாப்பறிவிருந்தால்தான் செய்யுட்களை அதற்குரிய ஓசையுடனும் உணர்ச்சியுடனும் படிக்க முடியும். ஒரு செய்யுளின் பெயரும் தொடை நடை அமைப்பும் தெரியாது அச் செய்யுளைப் படிப்பது குருடனும் செவிடனும் கூத்துப் பார்ப்பது போன்றதேயாகும். எனவே, கவிபாடுவோர் அக் கவியைப் படிப்போர் ஆகிய இருவர்க்கும் யாப்பறிவு வேண்டும்.

ஒருகாலத்தே யாப்பிலக்கணத்திற்கு இருந்த பெருமையை – மதிப்பை – நோக்கினல், இன்றுள்ள இரங்கத்தக்க நிலைக்கு இம்மியளவு தமிழ்ப்பற்றுள்ள ஒரு தமிழனும் வருந்தாம விருக்கமுடியாது. பல புலவர்கள் போட்டி போட்டுக்கொண்டு யாப்பிலக்கணஞ் செய்திருக்கிருர்கள்.

நத்தத்தனர், நல்லாதனர், அவிநயனர், பல்காயனர், கையனர், மயேச்சுரனர், பேராசிரியர், பரிமாணனர், வாய்ப்பியனர், காக்கைபாடினியார், சிறுகாக்கைபாடினியார் முதலிய நல்லிசைப் புலவர்கள் தத்தம் பெயரால் யாப்பிலக்கணஞ் செய்து செய்யுள் மரபைப் போற்றி வளர்த்து வந்திருக்கின்றனர்.

இன்னும் சங்க யாப்பு, பெரிய பம்மம், நாலடி நாற்பது, செயன்முறை, செயிற்றியம் என்பனவும் யாப்பிலக்கணங் கூறும் நூல்களே. அப் பழந்தமிழ் நூல்களையெல்லாம் நாம் பெறமுடியாத பெருங்குறையுடையேமாயினேம். இன்றுள்ள நூல்கள் – தொல்காப்பியச் செய்யுளியல், யாப்பருங்கலம், யாப்பருங்கலக் காரிகை என்னும் மூன்றுமேயாம். அவற்றின் பயனை இந்நூல் பயக்கும் என்பது எமது நம்பிக்கை.

# பொருளடக்கம்

—:o:—

## முதற் பாகம்


| பொருள் | பக்கம் |
|---|---|
| 1. உறுப்பியல் | 1 |
| 2. செய்யுளியல் | 45 |
| 3. புதிய செய்யுட்கள் | 81 |
| 4. கவியரங்கம் | 101 |

**1. உறுப்பியல்** 1—44

| | |
|---|---|
| 1. எழுத்து | 1 |
| 2. அசை | 3 |
| 3. சீர் | 6 |
| *1. ஈரசைச்சீர்* | *6* |
| *2. மூவசைச்சீர்* | *8* |
| *3. அசைச்சீர்* | *10* |
| *4. காசு, பிறப்பு* | *11* |
| 4. தளை | 17 |
| *1. ஐகாரக் குறுக்கம்* | *24* |
| *2. ஒற்றுநீக்கி யலகிடல்* | *25* |
| 5. அடி | 29 |

6. தொடை 31

1. முதற்றொடை 31
2. உறழ்ச்சித்தொடை 37
3. செந்தொடை 42

2. செய்யுளியல் 45—80

1. வெண்பா 46

1. குறள்வெண்பா 48
2. சிந்தியல் வெண்பா 52
3. அளவியல் வெண்பா 52
4. ப∴றொடை வெண்பா 52
5. கலிவெண்பா 54
6. குறள்வெண் செந்துறை 56

2. ஆசிரியப்பா 58

1. நேரிசை யாசிரியப்பா 59
2. இணைக்குற ளாசிரியப்பா 59
3. நிலைமண்டில ஆசிரியப்பா 59
4. அடிமறிமண்டில ஆசிரியப்பா 59
5. ஆசிரிய விருத்தம் 61

3. கலிப்பா 66

1. கலிப்பாவின் உறுப்புக்கள் 67
2. கொச்சகக் கலிப்பா 69
3. கட்டளைக் கலிப்பா 69
4. கலித்தாழிசை 70
5. கலித்துறை 71
6. கட்டளைக் கலித்துறை 72
7. கலிவிருத்தம் 74

4. வஞ்சிப்பா 75

1. குறளடி வஞ்சிப்பா 76
2. சிந்தடி வஞ்சிப்பா 76

| | |
|---|---|
| *3. வஞ்சித் தாழிசை* | *77* |
| *4. வஞ்சித்துறை* | *78* |
| *5. வஞ்சி விருத்தம்.* | *78* |
| **3. புதிய செய்யுட்கள்** | **81—100** |
| *1. கும்மி* | *81* |
| *2. சிந்து* | *84* |
| *3. வண்ணம்* | *95* |
| *4. பண்ணத்தி* | *96* |
| **4. கவியரங்கம்** | **101—142** |


## இரண்டாம் பாகம்


| பொருள் | பக்கம் |
|---|---|
| **1. உறுப்பியல்** | **143** |
| **2. செய்யுளில்** | **150** |
| **1. உறுப்பியல்** | **143—150** |
| *1. நாலசைச்சீர்* | *143* |
| *2. குற்றியலிகரம்* | *146* |
| *3. அளபெடை* | *147* |
| *4. இனவெதுகை* | *148* |
| *5. ஆசெதுகை* | *149* |
| **2. செய்யுளியல்** | **150—172** |
| *1. வெண்டாழிசை* | *150* |
| *2. வெண்டுறை* | *151* |
| *3. வெளிவிருத்தம்* | *152* |
| *4. ஆசிரியத் தாழிசை* | *153* |
| *5. ஆசிரியத்துறை* | *154* |
| *6. தரவு தாழிசையின் அடியளவு* | *155* |

7. நேரிசை ஒத்தாழிசைக் கலிப்பா 156

8. அம்போதரங்க ஒத்தாழிசைக் கலிப்பா 157

9. வண்ணக வொத்தாழிசைக் கலிப்பா 159

10. வெண்கலிப்பா 162

11. தரவு கொச்சகக் கலிப்பா 163

12. தரவிணைக் கொச்சகக் கலிப்பா 164

13. சிஃறாழிசைக் கொச்சகக் கலிப்பா 165

14. பஃறாழிசைக் கொச்சகக் கலிப்பா 166

15. மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா 166

16. உறழ்கலிப்பா 169

17. கலித்தாழிசை 169

18. மருட்பா 171

# யாப்பதிகாரம்

**யா**ப்பதிகாரம் என்பது, யாப்பினது அதிகாரம் என, யாப்பிலக்கணம் கூறும் நூலுக்குப் பெயராயிற்று. யாப்பு - செய்யுள். அதிகாரம் - ஆட்சி. யாப்பிலக்கணம் - செய்யுளின் இலக்கணம் எனப் பொருள்படும். அது, உறுப்பியல், செய்யுளியல் என இருவகைப்படும்.

## 1. உறுப்பியல்

உறுப்பியலில் செய்யுள் உறுப்புக்களின் இலக்கணமும், செய்யுளியலில் பாவும், பாவினமும் ஆகிய செய்யுட்களின் இலக்கணமும் கூறப்படும். இயல் - இலக்கணம்.

### செய்யுள் உறுப்பு

| | |
|---|---|
| 1. எழுத்து | 4. தளை |
| 2. அசை | 5. அடி |
| 3. சீர் | 6. தொடை |

எனச் செய்யுள் உறுப்பு அறுவகைப்படும்.

**1. எழுத்தசை சீர்தளை அடிதொடை ஆறும்
செய்யுள் உறுப்பெனச் செப்பினர் புலவர்.**

இச் சூத்திரத்தை நன்கு மனப்பாடம் செய்து கொள்க. இனிவரும் சூத்திரங்களையும் அவ்வாறே மனப்பாடம் செய்து கொள்க.

## 1. எழுத்து

| | | |
|---|---|---|
| உயிரெழுத்து | அ—ஔ | 12 |
| மெய்யெழுத்து | க்—ன் | 18 |
| உயிர்மெய்யெழுத்து | க—னௌ | 216 |
| ஆய்தவெழுத்து | ஃ— | 1 |
| | | 247 |

ஆகத் தமிழ் எழுத்துக்கள் **இருநூற்று நாற்பத்தேழு.**

உயிர் பன்னிரண்டில்,

அ இ உ எ ஒ—இவை ஐந்தும் **குறில்.**
ஆ ஈ ஊ ஏ ஓ ஐ ஔ—இவை ஏழும் **நெடில்.**

18 மெய்யோடும் 5 உயிர்க்குறிலும் தனித்தனி சேர்வதால், (18×5=) 90 உயிர்மெய்க் குறில் ஆகும். இத்துடன் 5 உயிர்க் குறிலையும் சேர்த்தால் (90+5=) 95 ஆகும்.

18 மெய்யோடும் 7 உயிர்நெடிலும் தனித்தனி சேர்வதால், (18×7=) 126 உயிர்மெய்நெடில் ஆகும். இத்துடன் 7 உயிர் நெடிலையும் சேர்த்தால் (126+7=) 133 நெடில் ஆகும்.

க கி கு கெ கொ—உயிர்மெய்க் குறில்.
கா கீ கூ கே கை கோ கௌ—உயிர்மெய் நெடில்.

மற்ற உயிர்மெய் எழுத்துக்களையும் இவ்வாறே கொள்க.

மெய் 18, ஆய்தம் 1; ஆக 19. இப் பத்தொன்பதும் **ஒற்று** எனப்படும்.

**விளக்கம் :**

| | | |
|---|---|---|
| | குறில் | 95 |
| | நெடில் | 133 |
| | ஒற்று | 19 |
| | ஆக | 247 |

247 தமிழ் எழுத்துக்களும் யாப்பிலக்கணத்தில் குறில், நெடில், ஒற்று என மூவகையில் அடங்கும். இம் மூவகை எழுத்துக்களின் விளக்கத்தையும் நன்கு அறிந்து கொள்க.

## 2. அசை

முற்கூறிய குறில், நெடில், ஒற்று என்னும் மூவகை எழுத்துக்களால் ஆவது அசை. அவ்வசை **நேரசை, நிரையசை** என இருவகைப்படும்.

| வாய்பாடு | | எழுத்து | அசை |
| --- | --- | --- | --- |
| 1. | க | — குறில் | நேர் |
| 2. | கல் | — குற்றொற்று | நேர் |
| 3. | கா | — நெடில் | நேர் |
| 4. | கால் | — நெட்டொற்று | நேர் |
| 5. | கட | — குறிலிணை | நிரை |
| 6. | கடல் | — குறிலிணையொற்று | நிரை |
| 7. | கடா | — குறினெடில் | நிரை |
| 8. | கடாம் | — குறினெடிலொற்று | நிரை |

மேற்கூறிய குறில், நெடில், ஒற்று என்னும் மூவகை எழுத்துக்களால் ஆனவை குறில், குற்றொற்று முதலிய இவ்வெட்டெழுத்துக்களும். வாய்பாடு—குறியீடு.

க—குறில் 95-க்கும் எடுத்துக்காட்டு.
கா—நெடில் 133-க்கும் எடுத்துக்காட்டு.
ல்—ஒற்று 19-க்கும் எடுத்துக்காட்டு.

எடுத்துக்காட்டு, காட்டு, மேற்கோள், உதாரணம்—ஒருபொருட் சொற்கள்.

1. **விளக்கம் :** *புகைவண்டியிலும், மோட்டார் வண்டியிலும் சிறுவர்களுக்கு மதிப்பில்லாமைபோல – பணம் இல்லாமல் பயணம் செய்வதுபோல – யாப்பிலக்கணத்தில் ஒற்றெழுத்துக்கு மதிப்பில்லை. 'கல்' என்பதில் உள்ள, 'ல்' என்னும் ஒற்று மதிப்புப் பெறாததால், 'கல்' என்பதை ஓரெழுத்தாகவே கொள்ளவேண்டும். எனவே, நேரசைக் குரிய 'க' முதலிய நான்கும் ஓரெழுத்துக்களாகவும், நிரையசைக்குரிய 'கட' முதலிய நான்கும் ஓரெழுத்துக்களாகவும் கொள்ளப்படும்.*

*'ஈர்க்' என ஈரொற்று வரினும், 'கால்' என்பதுபோல, 'ஈர்க்' என்பது நெட்டொற்றே யாகும்.*

*ஓரெழுத்தால் ஆகிய அசை*—**நேரசை.**
*ஈரெழுத்தால் ஆகிய அசை*—**நிரையசை.**

*நேர் – தனி. நேரசை – தனியசை.*
*நிரை – இணை. நிரையசை – இணையசை.*

2. **குறிலே நெடிலே குறிலிணை குறினெடில்**
**தனித்துமொற் றடுத்தும் வரின்நேர் நிரையெனும்**
**அசையாம் ; அவைநாள் மலர்வாய் பாடே.**

**காட்டு :**

| அசை | வாய்பாடு |
|---|---|
| *நேர்* | *நாள்* |
| *நிரை* | *மலர்* |

**குறிப்பு :** *நேரசைக்குரிய நான்கெழுத்துக்களையும், நிரையசைக்குரிய நான்கெழுத்துக்களையும் விளக்கத்துடன் நன்கு மனப்பாடம் செய்துகொள்க.*

காட்டு : வா னம் வாழ் க
நேர் நேர் நேர் நேர்

பலா மரம் நிலாக் குறி
நிரை நிரை நிரை நிரை

வானம் வாழ்க, பலாமரம், நிலாக்குறி - என்னும் சொற்களை, நேர் நிரை என்னும் அசைகளுக்குரிய எழுத்துக்களாகப் பிரித்துள்ளமையைக் கூர்ந்து நோக்குக.

### பயிற்சி

1. மேற்காட்டிய எடுத்துக்காட்டி லிருந்து குறில் முதலிய எட்டெழுத்துக்களையும் சொல்லத் தெரிந்து கொள்க.

2. கீழ்வரும் சொற்களை அவ்வாறு அசைபிரித்து எழுதிப் பாருங்கள்.

திருக்குறள், நாலடியார், நற்றிணை, புறநானூறு, சிலப்பதிகாரம், மலைபடுகடாம், தொல்காப்பியம்.

**குறிப்பு** : க - என்னும் குறில் நேரசை எனப்படினும், தனிக் குறில் முதலில் நேரசை யாகாது; பின்வரும் குறிலோடு சேர்ந்து **குறிலிணையும்**, நெடிலோடு சேர்ந்து **குறினெடிலும்** ஆகும்.

காட்டு : பலகை : பல - குறிலிணை - நிரை
விடாமல் : விடா - குறினெடில் - நிரை.
அலுவலகம் : அலு வல கம்
நிரை நிரை நேர்

'பலகை' என்பதில், 'ப' என்னும் குறில் 'ல' என்னும் குறிலுடன் சேர்ந்து (இணைந்து) குறிலிணையும், 'விடாமல்' என்பதில், 'வி' என்னும் குறில், 'டா' என்னும் நெடிலுடன் சேர்ந்து குறினெடிலும் ஆயினமை காண்க.

நெடிலுக்குப் பின்வரும் தனிக்குறிலும், ஒற்றுக்குப் பின்வரும் தனிக்குறிலும் நேரசை யாகும்.

**காட்டு :** மாரி வாழ்க : மா ரி வாழ் க
நேர் நேர் நேர் நேர்

'மா' என்னும் நெடிலுக்குப் பின்னுள்ள 'ரி' என்னும் குறிலும், 'வாழ்' என்னும் நெட்டொற்றுக்குப் பின்னுள்ள 'க' என்னும் குறிலும் நேரசை ஆயினமை காண்க.

குறில், குற்றொற்று, நெடில், நெட்டொற்று என்னும் நான்கெழுத்தும் நேரசை ; குறிலிணை, குறிலிணையொற்று, குறினெடில்,குறினெடிலொற்று என்னும் நான்கெழுத்தும் நிரையசை என்பதை நன்கு அறிந்திருப்பீர்கள். இவற்றின் அறிவு மிக மிக இன்றியமையாததாகும். இது யாப்பென்னும் அணிமனையின் அடிப்படை யாகும்.

அசைபிரித்து எழுதிப் பார்க்கும்படி முன்னர்க் கொடுத்துள்ள சொற்களுக்கு நீங்கள் அசைபிரித்தது சரியா என்பதை ஒப்புநோக்குங்கள்.

திருக் குறள் நா லடி யார் நற் றிணை
நிரை நிரை நேர் நிரை நேர் நேர் நிரை

புற நா னூ று சிலப் பதி கா ரம்
நிரை நேர் நேர் நேர் நிரை நிரை நேர் நேர்

மலை படு கடாம் தொல் காப் பியம்
நிரை நிரை நிரை நேர் நேர் நிரை

## 3. சீர்

அசை இரண்டும் மூன்றும் சேர்ந்தது **சீர்** எனப்படும். அச் சீர் ஈரசைச் சீர், மூவசைச் சீர் என இருவகைப் படும்.

### 1. ஈரசைச்சீர் - 4

நேர், நிரை என்னும் அசை இரண்டினையும் பெருக்கினால் ($2\times2=4$) ஈரசைச்சீர் நான்காகும்.

காட்டு :

| அசை | | வாய்பாடு | |
|---|---|---|---|
| நேர்நேர் | — | தேமா | மாச்சீர் |
| நிரைநேர் | — | புளிமா | |
| நிரைநிரை | — | கருவிளம் | விளச்சீர் |
| நேர்நிரை | — | கூவிளம் | |

**3. நேர்நேர் தேமா, நிரைநேர் புளிமா**
**நிரைநிரை கருவிளம், நேர்நிரை கூவிளம்**
**எனுமிவை நான்கும் ஈரசைச் சீரே.**

இதை நன்கு மனப்பாடம் செய்துகொள்க.

இவ் வீரசைச்சீர் நான்கும் ஆசிரியப்பாவுக் குரியவை. இவை **இயற்சீர், ஆசிரியச்சீர்** எனவும் பெயர் பெறும். மாச்சீர் – நேரீற்று ஈரசைச்சீர். விளச் சீர் –நிரையீற்று ஈரசைச்சீர்.

## பயிற்சி

கல் விக் × கட லின் × கரை யினைக் × காண் குவீர்
நேர் நேர் × நிரை நேர் × நிரை நிரை × நேர் நிரை
தே மா × புளி மா × கரு விளம் × கூ விளம்

முறையே தேமா, புளிமா, கருவிளம், கூவிளம் என்னும் நான்கு ஈரசைச் சீர்களும் வந்தமை காண்க.

பின்வரும் அடிகளில் உள்ள சீர்களை இவ்வாறு அசை பிரித்து வாய்பாடு கூறிப் பழகுங்கள்.

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்"
"செந்தமிழ் கேளாச் செவியாற் பயனில"
"ஒழுக்க முயிரினு மோம்புதல் வேண்டும்"

## 2. மூவசைச்சீர் – 8

தேமா, புளிமா, கருவிளம், கூவிளம் என்னும் ஈரசைச் சீர் நான்கனோடும் நேரசை நிரையசை இரண்டினையும் தனித்தனி சேர்த்தால் மூவசைச்சீர் $(4\times2=8)$ எட்டாகும்.

காட்டு :

| அசை | | வாய்பாடு |
|---|---|---|
| நேர்நேர்நேர் | — | தேமாங்காய் |
| நிரைநேர்நேர் | — | புளிமாங்காய் |
| நிரைநிரைநேர் | — | கருவிளங்காய் |
| நேர்நிரைநேர் | — | கூவிளங்காய் |

இவை நான்கும் நேரீற்று மூவசைச்சீர். இவை **காய்ச்சீர், வெண்சீர்** எனப்படும். இவை வெண்பாவுக் குரியவை.

| அசை | | வாய்பாடு |
|---|---|---|
| நேர்நேர்நிரை | — | தேமாங்கனி |
| நிரைநேர்நிரை | — | புளிமாங்கனி |
| நிரைநிரைநிரை | — | கருவிளங்கனி |
| நேர்நிரைநிரை | — | கூவிளங்கனி |

இவை நான்கும் நிரையீற்று மூவசைச்சீர். இவை **கனிச்சீர், வஞ்சிச்சீர்** எனப்படும். இவை வஞ்சிப்பாவுக் குரியவை.

**4. மாவிள முன்னர்க் காய்கனி யடையின்**
**வெண்பா வஞ்சி யுரிச்சீ ராமே.**

**பயிற்சி**

கல் லா ம × லொரு நா ளைக்
நேர் நேர் நேர் × நிரை நேர் நேர்
தே மாங் காய் × புளி மாங் காய்

கழிப் பது வுந் × தீ தறி வீர்
நிரை நிரை நேர் × நேர் நிரை நேர்
கரு விளங் காய் × கூ விளங் காய்

முறையே காய்ச்சீர் நான்கும் வந்தமை காண்க.

இல் லா தவர்க் × கிரங் கா தவர்
நேர் நேர் நிரை × நிரை நேர் நிரை
தே மாங் கனி × புளி மாங் கனி

இருந் தென பயன் × இந் நில மதில்
நிரை நிரை நிரை × நேர் நிரை நிரை
கரு விளங் கனி × கூ விளங் கனி

முறையே கனிச்சீர் நான்கும் வந்தமை காண்க.

கீழ்வரும் அடிகளில் உள்ள சீர்களை இவ்வாறு அசை பிரித்து, வாய்பாடு கண்டு பழகுங்கள்.

"இல்லாரை யொருநாளும் இகழ்வதியல் பன்றறிவீர்"

"அருந்தமிழி லினியாரும் அயற்சொல்லைக் கலவாதீர்"

"செந்தமிழ்மொழித் திறமறிந்திலர்
தந்தொழில்வழித் தனிமயங்குவர்"

"நல்லோர்வழி நனிநாடிலர்
கல்லோர்பழி கடிதீகுவர்"

**விளக்கம் :**

| | |
|---|---|
| தேமா<br>புளிமா<br>கருவிளம்<br>கூவிளம் | இவை நான்கும் ஆசிரியப்பாவுக் குரியவை. |
| தேமாங்காய்<br>புளிமாங்காய்<br>கருவிளங்காய்<br>கூவிளங்காய் | இவை நான்கும் வெண்பாவுக் குரியவை. |

| | |
|---|---|
| தேமாங்கனி<br>புளிமாங்கனி<br>கருவிளங்கனி<br>கூவிளங்கனி | இவை நான்கும் வஞ்சிப்பாவுக் குரியவை. |

கலிப்பாவுக்குரிய சீர்கள் எவை ?

கலிப்பாவுக்கெனத் தனியாகச் சீர்கள் இல்லை. மேற் கூறிய சீர்களே கலிப்பாவுக்கும் உரியவையாகும்.

இன்ன பாவுக்கு இன்ன சீர், இன்ன தளை, இன்ன அடிதான் வரும் என்னும் வரையறை செய்யுளியலில், செய்யுட்களின் இலக்கணங் கூறுமிடத்துக் கூறப்படும்.

### 3. அசைச்சீர் – 2

நேர், நிரை என்னும் அசை இரண்டும் வெண்பாவின் ஈற்றில் சீராக வரும். அவை **அசைச்சீர்** எனப்படும்.

**காட்டு :**

| அசை | | வாய்பாடு |
|---|---|---|
| நேர் | — | நாள் |
| நிரை | — | மலர் |

"ஈன்ற பொழுதிற் பெரிதுவக்குந் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட **தாய்**"

தாய் – நேர் - நாள்

"கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா **தவர்**"

தவர் – நிரை - மலர்.

| | | | |
|---|---|---|---|
| க<br>கல்<br>கா<br>கால் | நேர்<br>நாள் | கட<br>கடல்<br>கடா<br>கடாம் | நிரை<br>மலர் |

நேரசை, நிரையசைக் குரிய இவ் வெட்டெழுத்துக்களும் வெண்பாவின் ஈற்றில் வரும்.

காட்டு : "கல்லார்சொற் றேறலொழி **க**"
"ஆரஞ ருற்றன **கண்**"
"இன்சொல் லினிதீனு **மே**"
"துன்னற்க தீவினைப் **பால்**"
"கோடாமை சான்றோர்க் **கணி**"
"இன்சொல் லினதே **யறம்**"
"வஞ்சிப்ப தோரு **மவா**"
"உற்றநாள் உள்ள **உளேன்**"

இவ்வெண்பா வடிகளின் ஈற்றில் முறையே குறில் முதலிய எட்டெழுத்துக்களும் வந்தமை காண்க.

ஈரசைச்சீர் நான்கு, மூவசைச்சீர் எட்டு, ஓரசைச்சீர் இரண்டு ஆகிய இப்பதினான்கும்,

| | | |
|---|---|---|
| மாச்சீர் | காய்ச்சீர் | அசைச்சீர் |
| விளச்சீர் | கனிச்சீர் | |

என ஐவகையாக வழங்கப்படும்.

மாச்சீர், விளச்சீர், காய்ச்சீர், அசைச்சீர்களைத் **திருக்குறளில்** கண்டறிக. கனிச்சீர்களைப் பட்டினப்பாலையில் காண்க.

### 4. காசு, பிறப்பு

வெண்பாவின் ஈற்றில் **நாள்**, **மலர்** என்னும் அசைச்சீர்களே யன்றி, **காசு, பிறப்பு** என்னும் வாய்பாட்டுச் சீர்களும் வரும்.

தனிக் குறில் (க) ஒழிந்த நேரசை எழுத்துக்கள் மூன்றனோடும் **'கு சு டு து பு று'** என்னும் வல்லின உகரம் சேர்தல் **காசு** எனப்படும். நிரையசை எழுத்துக்கள் நான்கனோடும் **'கு சு டு து பு று'** சேர்தல் **பிறப்பு** எனப்படும்.

பழந்தமிழ்ப் புலவர்கள் **காசு** என்னும் நேரசை யுகரத்தை **நேர்பு** எனவும், **பிறப்பு** என்னும் நிரையசை யுகரத்தை **நிரைபு** எனவும் கொண்டனர். நாமும் அவ்வாறு கொள்ளுதலே எளிதும் ஏற்றதுமாகும்.

நேரசை யுகரம் - நேரசையோடு 'கு சு டு து பு று' என்னும் வல்லின உகரம் சேர்ந்தது.

நிரையசை யுகரம் - நிரையசையோடு வல்லின உகரம் சேர்ந்தது.

**காட்டு :**

| | | | |
|---|---|---|---|
| கல் | — | பந்து | நேரசையுகரம் நேர்பு காசு |
| கா | — | மாடு | |
| கால் | — | காப்பு | |
| கட | — | விறகு | நிரையசையுகரம் நிரைபு பிறப்பு |
| கடல் | — | வடக்கு | |
| கடா | — | தகாது | |
| கடாம் | — | நடாத்து | |

**குறிப்பு :** தனிக் குறிலோடு கு சு டு து பு று சேரின் - 'தகு, கொசு, மடு, அது, தபு, பெறு' எனக் குறிலிணையாய் நிரையசையில் அடங்கும்.

**காட்டு :** "தாங்காட்ட யாங்கண் **டது**"

டது - நிரை - மலர்.

ட - குறில். து - வல்லின உகரம்.

நேர்பு, நிரைபு என்பவற்றுள், நேர் – நேரசைக் குரிய (கல், கா, கால்) எழுத்துக்களையும், நிரை – நிரை யசைக்குரிய (கட, கடல், கடா, கடாம்) எழுத்துக்களை யும் குறிக்கும்.

| | | | |
|---|---|---|---|
| நேர் | பு | நிரை | பு |
| கா | சு | பிறப் | பு |

காட்டு :

" வற்றல் மரந்தளிர்த் **தற்று** "—நேர்பு
" நன்கலம் நன்மக்கட் **பேறு** "—நேர்பு } காசு
" தானமிழ்த மென்றுணரற் **பாற்று** "—நேர்பு

" பசும்புற் றலைகாண் **பரிது** "—நிரைபு
" வானின் றமையா **தொழுக்கு** "—நிரைபு } பிறப்பு
" மறத்திற்கு முண்டோ **மலைவு** "—நிரைபு
" வீமன் நகர்க்கே **விரைந்து** "—நிரைபு

நேர்பு, நிரைபு என்பன குற்றியலுகர வாய்பாடு. சிறுபான்மை 'மலைவு' என்பதுபோல் முற்றியலுகரமும் வரும்.

நாள், மலர், காசு, பிறப்பு என்னும் வாய்பாடுகளைத் திருக்குறள், நாலடியார் முதலிய கீழ்க்கணக்கு நூல்கள், நளவெண்பா, வெண்பாமாலை முதலிய வெண்பா நூல்களிற் காண்க.

5. **நாள்மலர் காசு பிறப்பெனு நான்கும்**
**வெண்பா வீற்றின் மேவிடுஞ் சீரே.**

**நினைவுகூர்க :**

நேர்நேர்—தேமா
நிரைநேர்—புளிமா } மாச்சீர்

நிரைநிரை—கருவிளம்
நேர்நிரை—கூவிளம் } விளச்சீர்

நேர்நேர்நேர்—தேமாங்காய்
நிரைநேர்நேர்—புளிமாங்காய் } காய்ச்சீர்
நிரைநிரைநேர்—கருவிளங்காய்
நேர்நிரைநேர்—கூவிளங்காய்

| | |
|---|---|
| நேர்நேர்நிரை—தேமாங்கனி<br>நிரைநேர்நிரை—புளிமாங்கனி<br>நிரைநிரைநிரை—கருவிளங்கனி<br>நேர்நிரைநிரை—கூவிளங்கனி | கனிச்சீர் |
| நேர்—நாள்<br>நிரை—மலர் | அசைச்சீர் |
| நேர்பு—காசு<br>நிரைபு—பிறப்பு | வெள்ளீற்றுச்சீர் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தே<br>மா<br>கூ<br>காய்<br>நாள்<br>கா | நேர் | புளி<br>கரு<br>விளம்<br>கனி<br>மலர்<br>பிறப் | நிரை | சு<br>பு | உகர<br>வீறு |

என்பதனை நினைவில் வையுங்கள்.

**குறிப்பு :** காசு, பிறப்பு என்னும் சீர்கள், வெண்பாவின் ஈற்றிலன்றிச் செய்யுளின் மற்ற இடங்களில் வரின் தேமா, புளிமா என்னும் வாய்பாடு பெறும்.

**காட்டு:** "ஏறுபோற் **பீடு** நடை"

''வன்சொல் **வழங்கு** வது''

பீடு - நேர்நேர் - தேமா.
வழங்கு - நிரைநேர் - புளிமா.

நாள், மலர் என்பன வெண்பாவின் ஈற்றிலன்றி வேறிடங்களில் வாரா.

எழுத்து, அசை, சீர் என்னும் மூன்றுறுப்புக்களையும் நன்கு அறிந்துகொண்டீர்கள். இவை மூன்றும் யாப்பிலக்கணக் கட்டிடத்தின் அடிப்படையாகும். அடிப்படை மிகவும் உறுதியாக இருத்தல் வேண்டும். நன்கு உறுதிப்படுத்துங்கள்.

முன்னர், அசைபிரித்து வாய்பாடு கண்டு பழகும்படி கொடுத்துள்ள அடிகளுக்கு நீங்கள் கண்ட வாய்பாடு சரியா என்பதை ஒப்புநோக்குங்கள்.

**அந்த அடிகள்:**

கற் க × கச டறக் × கற் பவை × கற் றபின்
நேர் நேர் × நிரை நிரை × நேர் நிரை × நேர் நிரை
தே மா × கருவிளம் × கூ விளம் × கூ விளம்

செந் தமிழ் × கே ளாச் × செவி யாற் × பய னில
நேர் நிரை × நேர் நேர் × நிரை நேர் × நிரை நிரை
கூ விளம் × தே மா × புளி மா × கரு விளம்

ஒழுக் க × முயி ரினு × மோம் புதல் × வேண் டும்
நிரை நேர் × நிரை நிரை × நேர் நிரை × நேர் நேர்
புளி மா × கரு விளம் × கூ விளம் × தே மா

இல் லா ரை × யொரு நா ளும்
நேர் நேர் நேர் × நிரை நேர் நேர்
தே மாங் காய் × புளி மாங் காய்

இகழ் வதி யல் × பன் றறி வீர்
நிரை நிரை நேர் × நேர் நிரை நேர்
கரு விளங் காய் × கூ விளங் காய்

அருந் தமி ழி × லினி யா ரும்
நிரை நிரை நேர் × நிரை நேர் நேர்
கரு விளங் காய் × புளி மாங் காய்

அயற் சொல் லைக் × கல வா தீர்
நிரை நேர் நேர் × நிரை நேர் நேர்
புளி மாங் காய் × புளி மாங் காய்

செந் தமிழ் மொழித் × திற மறிந் திலர்
நேர் நிரை நிரை × நிரை நிரை நிரை
கூ விளங் கனி × கரு விளங் கனி

தந் தொழில் வழித் × தனி மயங் குவர்
நேர் நிரை நிரை × நிரை நிரை நிரை
கூ விளங் கனி × கரு விளங் கனி

நல் லோர் வழி × நனி நா டிலர்
நேர் நேர் நிரை × நிரை நேர் நிரை
தே மாங் கனி × புளி மாங் கனி

கல் லோர் பழி × கடி தீ குவர்
நேர் நேர் நிரை × நிரை நேர் நிரை
தே மாங் கனி × புளி மாங் கனி

### பயிற்சி

1. தமிழ் எழுத்துக்களின் வகையும் தொகையும் யாவை ?

2. அவை யாப்பிலக்கணத்தில் எவ்வாறு கொள்ளப்படும் ?

3. நேரசை, நிரையசைக் குரிய எழுத்துக்கள் யாவை ?

4. அசையில் ஒற்றெழுத்தின் நிலை என்ன ?

5. தனிக்குறில் எங்கெங்கு எவ்வாறு அசை கொள்ளப்படும் ?

6. ஈரசைச்சீர்கள் எத்தனை வகைப்படும் ?

7. மூவசைச்சீர்கள் எத்தனை வகைப்படும் ?

8. அசைச்சீர் என்பவை யாவை? அவை எங்கே வரும் ? எங்கே வாரா ?

9. காசு, பிறப்பு என்பன யாவை ? அவை தேமா, புளிமா எனப் பெயர்பெறும் இடம் எது ?

10. சீர்களின் தொகையும் வகையும் யாவை ?

11. மாச்சீர், விளச்சீர், காய்ச்சீர், கனிச்சீர்— இவை எவ்வெப் பாக்களுக்கு உரிய சீர்கள் ?

12. தனக்கெனச் சீர் இல்லாத பா எது? அது எங்ஙனம் நடைபெறும் ?

**குறிப்பு :** இக் கேள்விகளுக்குச் சரியான விடை தெரிந்துகொண்டு மேற்செல்லுங்கள்.

## 4. தளை-7

சீர்கள் ஒன்றோடொன்று கூடும் கூட்டத்திற்குத் **தளை** என்பது பெயர். தளைதல் – கட்டுதல். இரண்டு சீர்களை ஒன்றாகத் தளைதல். கன்று காளைகளின் கால்களைத் தளைதல் காண்க.

1. நேரொன் றாசிரியத்தளை
2. நிரையொன் றாசிரியத்தளை
3. இயற்சீர் வெண்டளை
4. வெண்சீர் வெண்டளை
5. கலித்தளை
6. ஒன்றிய வஞ்சித்தளை
7. ஒன்றாத வஞ்சித்தளை

எனத் தளை ஏழு வகைப்படும்.

தளைகொள்ளும்போது, நின்றசீர் இன்னசீர் என்றும், அதாவது மாச்சீரா, விளச்சீரா, காய்ச்சீரா, கனிச்சீரா என்றும், வருஞ்சீரின் முதலசை நேரசையா, நிரையசையா என்றும் பார்க்கவேண்டும். வருஞ்சீர் இன்னசீர் என்று பார்க்கவேண்டியதில்லை. நின்றசீர் - முதலில் உள்ள சீர். வருஞ்சீர் - அந் நின்றசீரோடு வந்து சேருஞ் சீர்.

**காட்டு :** கற்க × கசடற. கற்க — நின்றசீர்
கசடற — வருஞ்சீர்

நின்றசீரின் ஈற்றசையும், வருஞ்சீரின் முதலசையும் ஒன்றுதலும் ஒன்றாமையும் தளை எனப்படும். ஒன்றுதல் - நேருக்கு நேரும், நிரைக்கு நிரையும் வருதல். ஒன்றாமை - நேருக்கு நிரையும், நிரைக்கு நேரும் வருதல். ஒன்றுதல் – பொருந்துதல். ஒன்றாமை - பொருந்தாமை.

மாச்சீர், விளச்சீர், காய்ச்சீர், கனிச்சீர் என்னும் நின்ற சீர்களின் ஈற்றசையாகிய நேர், நிரையோடு, வருஞ் சீரின் முதலசையாகிய நேரும் நிரையும் ஒன்றுதலும் ஒன்றுமையும் தளை எனப்படும் என்பது கருத்து.

## 1, 2. ஆசிரியத்தளை

*மாச்சீர்முன் நேர்வருவது - நேரொன் றாசிரியத்தளை.*
*விளச்சீர்முன் நிரைவருவது - நிரையொன் றாசிரியத் தளை.*

**6. மாமுன் நேரும் விளமுன் நிரையும்**
**வருவ தாசிரி யத்தளை யாமே.**

**குறிப்பு :** *தேமா, புளிமா இரண்டும் நேரீற்று ஈரசைச்சீர் என்பதையும், கருவிளம், கூவிளம் இரண்டும் நிரையீற்று ஈரசைச்சீர் என்பதையும் நினைவுகூர்க.*

*மாமுன்நேர் - நேர்முன்நேர்.*
*விளமுன்நிரை - நிரைமுன்நிரை.*

**காட்டு :**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | **நே - ஆ** | | | **நி - ஆ** | | | |
| கல் | வி | × | கற் | றவர் | × | கருத் | து |
| நேர் | நேர் | × | நேர் | நிரை | × | நிரை | நேர் |
| தே | மா | × | கூ | விளம் | × | புளி | மா |

*நே-ஆ-நேரொன் றாசிரியத்தளை.*
*நி-ஆ-நிரையொன் றாசிரியத்தளை.*

*இவ் விருதளையும் ஆசிரியப்பாவுக் குரியவை.*

**குறிப்பு :** *இவ்வாறு சீர்களை அசை பிரித்து, வாய்பாடு கண்டு, தளை கொள்ளுதல்*—**அலகிடுதல்** *எனப் படும்.*

## 3. இயற்சீர் வெண்டளை

**7. மாமுன் நிரையும் விளமுன் நேரும்**
**வருவ தியற்சீர் வெண்டளை யாகும்.**

அதாவது, முற்கூறிய ஆசிரியத்தளையில் மாறி வருவது இயற்சீர் வெண்டளை எனப்படும். நின்றசீர் இயற்சீரானதால் இயற்சீர் வெண்டளை எனப்பட்டது. வருஞ்சீர் காய்ச்சீராகவும் இருக்கலாம். வருஞ்சீரின் முதலசை தானே நமக்கு வேண்டியது ?

இயற்சீர் - தேமா, புளிமா, கருவிளம், கூவிளம் என்னும் நான்கும்.

ஆசிரியத்தளை நேருக்கு நேரும், நிரைக்கு நிரையும் வருவது. இயற்சீர் வெண்டளை நேருக்கு நிரையும், நிரைக்கு நேரும் ஆக, ஆசிரியத்தளையின் மாறிவருவது. ஆசிரியத்தளையின் எதிரிடை இயற்சீர் வெண்டளை என்பது கருத்து.

**காட்டு :**

இ - வெ     இ - வெ
கற் க × கச டறக் × கற் பவை
நேர் நேர் × நிரை நிரை × நேர் நிரை
தே மா × கரு விளம் × கூ விளம்

இரு இயற்சீர் வெண்டளையும் வந்தமை காண்க.
இ-வெ-இயற்சீர் வெண்டளை.

## 4. வெண்சீர் வெண்டளை

**8. காய்முன்நேர் வருவது வெண்சீர் வெண்டளை.**

**காட்டு :**

வெ - வெ     வெ - வெ
யா மெய் யாக் × கண் டவற் று × ளில் லை
நேர் நேர் நேர் × நேர் நிரை நேர் × நேர் நேர்
தே மாங் காய் × கூ விளங் காய் × தே மா
வெ-வெ - வெண்சீர் வெண்டளை.

இயற்சீர் வெண்டளையும், வெண்சீர் வெண்டளையும் வெண்பாவுக் குரியவை.

## 5. கலித்தளை

**9. காய்முன் நிரைவரு வதுகலித் தளையே.**

அதாவது, வெண்சீர் வெண்டளைக்கு மாறுக வருவது கலித்தளையாகும். கலித்தளை கலிப்பாவுக்குரியது.

**காட்டு :**

**க - த**

பல் லுல கும் × பல வுயி ரும்
நேர் நிரை நேர் × நிரை நிரை நேர்
கூ விளங் காய் × கரு விளங் காய்
க-த - கலித்தளை.

## 6, 7. வஞ்சித்தளை

**10. கனிமுன் நிரையும் நேரும் வருதல்**
**ஒன்றிய ஒன்ரு வஞ்சித் தளையே.**

கனிச்சீர் - நிரையீற்று மூவசைச்சீர். கனிமுன் நிரை வருதல் – நிரைமுன் நிரை வருதல். கனிமுன் நேர் வருதல் - நிரைமுன் நேர் வருதல். நிரைமுன் நிரை வருதல் - ஒன்றுதல். நிரைமுன் நேர் வருதல் - ஒன்ருமை. ஒன்றுதல் - பொருந்துதல். ஒன்ருமை - பொருந்தாமை. இவ் விருதளையும் வஞ்சிப்பாவுக் குரியவை.

**காட்டு :**

**ஒன்றிய - வ**

தண் டா மரைத் × தனி மலர் மிசை
நேர் நேர் நிரை × நிரை நிரை நிரை
தே மாங் கனி × கரு விளங் கனி

### ஒன்றாத - வஞ்சி

வண் டோ லிடும் × வண் டமி ழகம்
நேர் நேர் நிரை × நேர் நிரை நிரை
தே மாங் கனி × கூ விளங் கனி

வ - வஞ்சித்தளை.

### பயிற்சி

1. மாமுன்×நேர்—நேரொன் றாசிரியத்தளை.
2. விளமுன்×நிரை—நிரையொன் றாசிரியத்தளை.
3. (1) மாமுன்×நிரை, (2) விளமுன்×நேர் —இயற்சீர் வெண்டளை.
4. காய்முன்×நேர்—வெண்சீர் வெண்டளை.
5. காய்முன்×நிரை—கலித்தளை.
6. கனிமுன்×நிரை—ஒன்றிய வஞ்சித்தளை.
7. கனிமுன்×நேர்—ஒன்றாத வஞ்சித்தளை.

**ஒப்புமை**

1—4 : நேர்முன்நேர்.
2—6 : நிரைமுன்நிரை.
3(1)—5 : நேர்முன்நிரை.
3(2)—7 : நிரைமுன்நேர்.

ஆனால், முன்னவை (1, 2, 3) நின்றசீர் ஈரசைச்சீர். பின்னவை (4, 5, 6, 7) நின்றசீர் மூவசைச்சீர்.

ஏழு தளைகளையும் நன்கு படித்தறிந்து மனப்பாடமானபின், கீழ்வரும் அடிகளை அலகிட்டுப் பாருங்கள். முன் அலகிட்டுக் காட்டியுள்ளபடியே சீர்களைத் தனித் தனியாகவும், அசைகட்கு நேராக வாய்பாடும் ஒழுங்காக எழுதிப் பழகுங்கள்.

" ஒண்பூங் காந்தள் வெண்பூஞ் சுள்ளி "

" தண்டமி ழகந்தனில் தனியர சியலுக "

" ஏமுற் றவரினு மேழை தமியனுய்ப்
பல்லார் பகைகொள் பவன் "

" வகையறிந்து தற்செய்து தற்காப்ப மாயும்
பகைவர்கட் பட்ட செருக்கு "

"கொடிபுரையு நுழைநுசுப்பிற் குழைக்கமர்ந்த
திருமுகத்தாள் "

" தனிச்செந்தமிழ் தனேக்கற்றவர்
மனக்கண்முன மினிப்பொன்றிடக்
கனித்தண்சுவை யெனப்பெய்குவர் "

" தமிழ்கற்றவர் தாமின்புறல்
அமிழ்தச்சுவை யாமென்குவர் "

இருவகை ஆசிரியத் தளைகளையும் அகநானூறு, புறநானூறு, சிலப்பதிகாரம், மணிமேகலை, பெருங்கதை முதலிய ஆசிரியப்பாக்களிலும், இருவகை வெண்டளைகளையும் திருக்குறள், நாலடியார், நளவெண்பா முதலிய வெண்பாக்களிலும், கலித்தளையைக் கலித்தொகைக் கலிப்பாக்களிலும், இருவகை வஞ்சித்தளைகளையும், மதுரைக்காஞ்சி, பட்டினப்பாலைகளில் உள்ள வஞ்சியடிகளிலும் அலகிட்டுப் பழகுங்கள். பயிற்சி மிகவும் வேண்டும்.

**விளக்கம் :** வெண்பா அடிகளை அலகிடும்போது, முதலடியின் ஈற்றுச்சீர்க்கும், அடுத்த அடியின் முதற்சீர்க்கும் தளை கொள்ளுதல் வேண்டும். இது இன்றியமையாதது.

**காட்டு :**

**இ - வெ வெ - வெ**

பல் லார் × பகை கொள லிற் ×
நேர் நேர் × நிரை நிரை நேர் ×
தே மா × கரு விளங் காய் ×

வெ - வெ　　வெ - வெ

பத் தடுத் த × தீ மைத் தே ×
நேர் நிரை நேர் × நேர் நேர் நேர் ×
கூ விளங் காய் × தே மாங் காய் ×

இ - வெ　　இ - வெ

நல் லார் × தொடர் கை × விடல்
நேர் நேர் × நிரை நேர் × நிரை
தே மா × புளி மா × மலர்

வெ - வெ

தீமைத்தே × நல்லார்—எனக் காண்க.

**குறிப்பு :** ஓர் அடியை அலகிடும்போது, முதற்சீரை அசைபிரித்து, வாய்பாடு கண்டு எழுதிய பின் அடுத்த சீரையும் அவ்வாறு எழுதி, அவ் விருசீர்க்குமுள்ள தளையை எழுதிவிட்டு, மூன்றுஞ் சீரையும் அவ்வாறு அலகிட்டு, இரண்டாஞ் சீர்க்கும் மூன்றுஞ் சீர்க்குமுள்ள தளையை எழுதவேண்டும். இவ்வாறே மற்ற சீர்களையும் அலகிடவேண்டும்.

இருசீர்களை அசைபிரித்து வாய்பாடு எழுதிய பின், நின்றசீர் இன்ன சீர் என்று பார்த்து, அதாவது மாச்சீரா விளச்சீரா காய்ச்சீரா கனிச்சீரா என்று பார்த்து, பின் வருஞ் சீரின் முதலசை நேரசையா நிரையசையா என்று பார்த்துத் தளைகண் டெழுதவேண்டும்.

**காட்டு :**

இ - வெ

எண் ணித் × துணி க
நேர் நேர் × நிரை நேர்
தே மா × புளி மா

மாமுன் × நிரை - இயற்சீர் வெண்டளை. இவ்வாறு காணவேண்டும்.

**2. தளை தட்டுதல் :** இயற்சீர் வெண்டளையும் வெண்சீர் வெண்டளையும் அல்லாத வேறு தளைகள் வெண்பாவில் வரக்கூடா என்பது வெண்பாவின் இலக்கணங் கூறுமிடத்துக் கூறப்படும். வெண்பாவில் பிற தளை வருவது **தளைதட்டுதல்** எனப்படும். தட்டுதல்-தவறுதல்-வேறு தளை வருதல்.

**ஐகாரக் குறுக்கம் :** ஐகாரம் (ஐ) நெடிலே யாயினும் அவ்வாறு தளைதட்டு மிடத்துத் தனிக் குறிலேபோல் பின் வரும் குறிலிேைடும் நெடிலிேைடும் கூடி நிரையசை யாகும். இது **ஐகாரக் குறுக்கம்** எனப்படும். தளை தட்டாதவிடத்துத் தனித்து நேரசையாகும்.

**காட்டு :**

"புன்னைப் பொழிலருகே போயினுள் பூங்கொம்பர்
தன்னையருங் காணத் தளர்ந்து"

இவ் வெண்பாவில் 'தன்னையரும்' என்னும் சீரை,

தன் னைய ரும்
நேர் நிரை நேர்
கூ விளங் காய்

என அலகிடவேண்டும்.

னைய – குறிலிணை - நிரை.

இவ்வாறு கொள்ளாக்கால்,

தன் னை யரும்
நேர் நேர் நிரை
தே மாங் கனி

எனத் 'தேமாங்கனி' யாகும். கனிச்சீர் வெண்பாவில் வரக்கூடாது.

தன் னை யருங் × கா ண
நேர் நேர் நிரை × நேர் நேர்
தே மாங் கனி × தே மா

எனக் கனிமுன் நேர் வந்து ஒன்றாத வஞ்சித்தளை யாதலுங் காண்க. வெண்பாவில் வஞ்சித்தளை வரக்கூடாது.

"அன்னையையா னேவ தவமா லணியிழாய்
புன்னையையா னேவன் புலந்து"

னையா - குறிலெனடில் – நிரை.

இங்ஙனம் கொள்ளாக்கால்,

அன் னை யை யா
நேர் நேர் நேர் நேர்

என நாலசை யாதலுங் காண்க.

"யானையைக் கண்டஞ்சி னாள்"

யா னை யை
நேர் நேர் நேர்
தே மாங் காய்

னை - நேர். யை - நேர்.

தளை தட்டாதவிடத்து ஐகாரம் நெடிலேபோல் நேரசையாதல் காண்க.

மேல் எடுத்துக்காட்டிய வெள்ளடிகளை அலகிட்டுப் பாருங்கள்.

**ஆய்தம் அலகு பெறுதல்:** தளை தட்டுமிடத்து, ஆய்தம் குறிலே போல அலகு பெறும்; தளை தட்டாத விடத்து ஒற்றுப் போலாம்.

காட்டு :

"அற்ற ரழிபசி தீர்த்தல் அஃதொருவன்
பெற்றான் பொருள்வைப் புழி" (குறள்)

தீர்த் தல் × அஃ தொரு வன்
நேர் நேர் × நேர் நிரை நேர்
தே மா × கூ விளங் காய்

என, ஆய்தத்தை ஒற்றுப்போல் அலகிடின், மாமுன் நேர் வந்து நேரொன் றாசிரியத் தளை ஆகிறது. வெண்பாவில் ஆசிரியத் தளை வருதல் கூடாது. எனவே, ஆய்தத்தைக் குறிலாகக் கொள்ளின், **'அஃ'** என்பது, **'அகு'** என்பது போலக் குறிலிணையாய் நிரையசையாகி,

தீர்த் தல் × அஃ தொரு வன்
நேர் நேர் × நிரை நிரை நேர்
தே மா × கரு விளங் காய்

என, மாமுன் நிரை வந்து இயற்சீர் வெண்டளையாகும். 363, 414, 943, 1166 குறள்களில் வரும் ஆய்தங்களையும் இவ்வாறே கொள்க.

"நடுவின்றி நன்பொருள் வெஃகின்" (குறள்–171) எனத் தளை தட்டாமையான் ஆய்தம் ஒற்றுப் போல நின்றது. அலகிட்டறிக.

**ஒற்றுநீக்கி அலகிடல் :**

" மக்கள்மனம் மாறியுயர் வானமனம் வந்தன்றித்
தக்கநலம் வாய்க்குமோ தான் "

இக் குறள்வெண்பாவில்,

**ஒன்றுத - வ**

மக் கள் மனம் × மா றியு யர்
நேர் நேர் நிரை × நேர் நிரை நேர்
தே மாங் கனி × கூ விளங் காய்

'மக்கள்மனம்' என்னும் கனிச்சீரும், ஒன்றுத வஞ்சித் தளையும் வருகின்றன. வெண்பாவில் கனிச்சீரும் வஞ்சித் தளையும் வருதல் கூடா.

யாப்பிலக்கணத்தில் ஒற்றெழுத்துக்கு மதிப்பில்லை என்பதை முன்னர் அறிந்துள்ளீர்கள். எனவே, 'மக்கள் மனம்' என்னும் சீரில் கனிக்கு (மனம்) முன்னுள்ள 'ள்' என்னும் ஒற்றை நீக்கிவிட்டு,

**வெ - வெ**

மக் கம னம் × மா றியு யர்
நேர் நிரை நேர் × நேர் நிரை நேர்
கூ விளங் காய் × கூ விளங் காய்

என அலகிடவேண்டும். இவ்வாறு அலகிட, அது கூவிளங்காய்ச்சீராகித் தளை தட்டாமை காண்க. இது **ஒற்றுநீக்கி அலகிடல்** எனப்படும்.

**குறிப்பு** : இவ்வாறு வெண்பாவில் கனிச்சீர் வரின், அச்சீர், கனியாகிய நிரையசைக்குமுன் ஒற்றும், அவ்வொற்றுக்குமுன் குறிலும் உடையதாகவே இருக்கும்.

**காட்டு** : " **திங்கள்முகம்** கண்டானச் சேய் "
" இறைவா கச்சி **ஏகம்பனே** "

திங்கள்முகம், ஏகம்பனே — எனக் காண்க.

எழுத்து, அசை, சீர், தளை என்னும் செய்யுள் உறுப்புக்கள் நான்கினையும் நன்கு அறிந்துகொண்டீர்கள். அடிக்கடி ஏதாவதொரு செய்யுளை அலகிட்டுப் பாருங்கள். அலகிடுவதால் எழுத்து, அசை, சீர், தளை என்னும் நான்

குறுப்பும் நன்கு பழக்கத்திற்கு வரும். இப்பயிற்சி யாப்பறிவிற்கு மிகமிக இன்றியமையாததாகும்.

முன்னர் அலகிட்டுப் பார்க்கும்படி கொடுத்துள்ள அடிகட்கு நீங்கள் அலகிட்டது சரியா என்பதை ஒப்பு நோக்குங்கள்.

**அவ் வடிகள் :**

**நே - ஆ நே - ஆ நே - ஆ**

ஒண் பூங் × காந் தள் × வெண் பூஞ் × சுள் ளி
நேர் நேர் × நேர் நேர் × நேர் நேர் × நேர் நேர்
தே மா × தே மா × தே மா × தே மா

**நி - ஆ நி - ஆ நி - ஆ**

தண் டமி × ழகந் தனில் × தனி யர × சிய லுக
நேர் நிரை × நிரை நிரை × நிரை நிரை × நிரை நிரை
கூ விளம் × கரு விளம் × கரு விளம் × கரு விளம்

**இ-வெ இ-வெ இ-வெ இ-வெ**

ஏ முற் × றவ ரினு × மே மை × தமி யனுப் ×
நேர் நேர் × நிரை நிரை × நேர் நேர் × நிரை நிரை ×
தே மா × கரு விளம் × தே மா × கரு விளம் ×

**இ - வெ இ - வெ**

பல் லார் × பகை கொள் × பவன்
நேர் நேர் × நிரை நேர் × நிரை
தே மா × தே மா × மலர்

**வெ - வெ வெ - வெ**

வகை யறிந் து × தற் செய் து ×
நிரை நிரை நேர் × நேர் நேர் நேர் ×
கரு விளங் காய் × தே மாங் காய் ×

வெ - வெ இ - வெ

தற் காப் ப × மா யும் ×
நேர் நேர் நேர் × நேர் நேர் ×
தே மாங் காய் × தே மா ×

வெ - வெ இ - வெ

பகை வர் கட் × பட் ட × செருக்கு
நிரை நேர் நேர் × நேர் நேர் × நிரைபு
புளி மாங் காய் × தே மா × பிறப்பு

க - த க - த

கொடி புரை யு × நுழை நுசுப் பிற் ×
நிரை நிரை நேர் × நிரை நிரை நேர் ×
கரு விளங் காய் × கரு விளங் காய் ×

க - த

குழைக் கமர்ந் த × திரு முகத் தாள்
நிரை நிரை நேர் × நிரை நிரை நேர்
கரு விளங் காய் × கரு விளங் காய்

ஒன்றிய - வ

தனிச் செந் தமிழ் × தனைக் கற் றவர்
நிரை நேர் நிரை × நிரை நேர் நிரை
புளி மாங் கனி × புளி மாங் கனி

ஒன்றிய - வ

மனக் கண் முன × மினிப் பொன் றிட
நிரை நேர் நிரை × நிரை நேர் நிரை
புளி மாங் கனி × புளி மாங் கனி

ஒன்றிய-வ

கனித் தண் சுவை × யெனப் பெய் குவர்
நிரை நேர் நிரை × நிரை நேர் நிரை
புளி மாங் கனி × புளி மாங் கனி

ஒன்றாத - வ

தமிழ் கற் றவர் × தா மின் புறல்
நிரை நேர் நிரை × நேர் நேர் நிரை
புளி மாங் கனி × தே மாங் கனி

ஒன்றாத - வ

அமிழ் தச் சுவை × யா மென் குவர்
நிரை நேர் நிரை × நேர் நேர் நிரை
புளி மாங் கனி × தே மாங் கனி

## 5. அடி-5

சீர்கள் இரண்டு முதலாக இணைந்து - தொடர்ந்து - நடப்பது **அடி** எனப்படும். அது,

1. குறளடி 3. அளவடி 5. கழிநெடிலடி
2. சிந்தடி 4. நெடிலடி

என ஐந்து வகைப்படும்.

**11. இருசீர் குறளடி, முச்சீர் சிந்தடி**
**நாற்சீர் அளவடி, ஐஞ்சீர் நெடிலடி**
**அறுசீர் முதலன கழிநெடி லடியே.**

அளவடி - **நேரடி** எனவும் பெயர் பெறும். கழிநெடிலடி - அவ் வடியிலுள்ள சீர்களின் தொகைப் பெயரோடு சேர்ந்து, அறுசீர்க்கழிநெடிலடி, எழுசீர்க்கழிநெடிலடி...... என வழங்கும்.

**காட்டு :**

1. ஒண்பூங் காந்தள்—குறளடி.
2. பல்லார் பகைகொள் பவன்—சிந்தடி.

3. கற்க கசடறக் கற்பவை கற்றபின்—அளவடி.
4. வையம் ஏழுடை மன்னவன் அவ்வுரை வழங்க
—நெடிலடி.

5. உலகிடை மொழிக ளெல்லாம்
உயர்தமிழ்க் கிணைய வாமோ
—அறுசீர்க்கழிநெடிலடி.

வஞ்சியே யுனைநான் வஞ்சியேன் தமிழர்
வழக்கமும் பழக்கமு மன்றே
—எழுசீர்க்கழிநெடிலடி

வெண்ணந் துரறி வயிறுளைந்து
வீற்று வீற்றுக் கருவுயிர்த்த
வெண்ணித் திலத்தை யரித்தெடுத்து
வெள்வாய்க் களமர் கரைகுவிக்க
—பன்னிருசீர்க்கழிநெடிலடி

**குறிப்பு:** செய்யுட்களைப் படிக்கும்போது இவ்வடிகளைப் பார்த்துப் பழகுங்கள்.

## 6. தொடை

அடிகளை ஒன்றோடொன்று தொடுப்பது **தொடை** எனப்படும். இரண்டு அடிகளிலே யன்றி, ஓரடியிலுள்ள சீர்களிலும் இத்தொடை வரும்.

செய்யுளின் ஓசைக்கும் இனிமைக்கும் சிறப்புக்கும் இத் தொடையுறுப்பு இன்றியமையாததாகும். 'தொடையற்ற பாட்டு நடையற்றுப் போகும்' என்பது பழமொழி.

அத்தொடை - **முதற்றொடை, உறழ்ச்சித்தொடை** என இருவகைப்படும்.

அடிகளில் வருவது முதற்றொடை. ஓரடியிலுள்ள சீர்களில் வருவது உறழ்ச்சித்தொடை.

## 1. முதற்றொடை

1. மோனைத்தொடை 4. இயைபுத்தொடை
2. எதுகைத்தொடை 5. அளபெடைத்தொடை
3. முரண்டொடை

என முதற்றொடை ஐந்து வகைப்படும்.

**12. மோனை யெதுகை முரணியை யளபெடை**
**எனுமிவை யைந்தும் முதற்றொடை யாமே.**

### 1. மோனை

இரண்டு அடிகளின் முதற்சீரின் முதலெழுத்து, அல்லது ஓரடியிலுள்ள சீர்களின் முதலெழுத்து ஒன்றே வருதல் மோனை எனப்படும். அடிகளில் மோனை வருதல் **அடிமோனை** எனவும், சீர்களில் மோனை வருதல் **சீர்மோனை** எனவும் பெயர்பெறும். ஏனை எதுகை முதலிய தொடைகட்கும் இஃதொக்கும்.

**13. முதலெழுத் தொன்றுதல் மோனை யாகும்.**

ஒன்றுதல் - ஒரே எழுத்து வருதல்.

காட்டு : ''செந்தமிழைக் கற்றுத் தெளியா மகனொருவன்
செந்தமிழ னவனோ தேமொழீ''

இவ்வடிகளின் முதற்சீரின் முதலெழுத்து **'செ'** ஒன்றே வந்திருத்தல் **அடிமோனை** யாகும்.

'' மக்களைமுன் காணு மனநடுங்கா வெய்துயிரா''

இவ்வடியின் முதற்சீரிலும் மூன்றுஞ்சீரிலும் முதலெழுத்து **'ம'** ஒன்றே வந்திருத்தல் **சீர்மோனை** யாகும்.

### 2. எதுகை

**14. இரண்டாமெழுத் தொன்றுதல் எதுகை யாகும்.**

காட்டு: ''கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்''

• இவ்வடிகளின் முதற்சீரில் இரண்டாவதெழுத்து **'ண்'** ஒன்றே வந்திருத்தல் எதுகை.

"துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்கு"

இவ்வடியின் நான்கு சீர்களிலும் முதலெழுத்து **'து'** வந்திருத்தல் மோனை; இரண்டாவதெழுத்து **'ப்'** வந்திருத்தல் எதுகை.

## 3. முரண்

**15. முரணத் தொடுப்பது முரண்டொடை யாகும்.**

முரணுதல்-மாறுபடுதல். மாறுபட்ட சொற்கள் வருதல்-முரண்தொடை.

**காட்டு :** "முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்"

முன் × பின்—முரண்.

"வெண்பற் கருங்குழலார் மேலிருந்து கீழ்நோக்கி"

வெண்மை × கருமை
மேல் × கீழ் } முரண்டொடை.

## 4. இயைபுத்தொடை

**16. இறுவா யொத்தல் இயைபெனப் படுமே.**

இரண்டடிகளின் இறுதி ஒன்றாக வருதல் இயைபுத் தொடை யாகும். இறுவாய் – இறுதி - கடைசி.

**காட்டு :**

"வானரங்கள் கனிகொடுத்து மந்தியொடு **கொஞ்சும்**
மந்திசிந்து கனிகளுக்கு வான்கவிகள் **கெஞ்சும்**"

'கொஞ்சும் – கெஞ்சும்' என்பது இயைபுத்தொடை. இத் தொடை **பெரும்பாலும் இசைப்பாடல்களில் வரும்.**

## 5. அளபெடைத்தொடை

**17. அளபெடுத் தொன்றுதல் அளபெடைத் தொடையே.**

காட்டு :

''ஓஒதல் வேண்டும் ஒளிமாழ்குஞ் செய்வினை
ஆஅது மென்னு மவர்''

'ஓஒ - ஆஅ' என அளபெடுத்ததால் இது அளபெடைத்தொடை.

மோனை, எதுகை, முரண், இயைபு, அளபெடை என்னும் தொடை ஐந்தில், மோனையும் எதுகையும் மிகவும் இன்றியமையாதவை.

### பயிற்சி

கீழ்வரும் அடிகளிலுள்ள மோனை முதலிய தொடைகளைக் கண்டறியுங்கள்.

1. ''நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கந் தீயொழுக்கம்
என்று மிடும்பை தரும்''
2. ''இன்னுமை யின்ப மெனக்கொளின் ஆகுந்தன்
ஒன்னார் விழையுஞ் சிறப்பு''
3. ''கருங்குழலார் செங்கையினுல்
வெண்கவரிப் பைங்கால்''
4. ''செந்தேன் மொழியாள் செறியளக பந்தியின்கீழ்
இந்து முறியென் றியம்புவார்''
5. ''பரீஇ யுயிர்செகுக்கும் பாம்பொடு மின்னு
மரீஇப் பின்னைப் பிரிவு''
6. ''இருந்தெ ழுந்து நடந்து திரும்பினுன்
இல்லை யுண்டெனப் போந்த திரும்பினுன்''

### தொடைச் சிறப்பு

### 1. மோனை

முதலெழுத்து ஒன்றி வருதலாகிய மோனைக்கு, முதலெழுத்து வந்த எழுத்தே வருதலன்றி, இனவெழுத்தும் வரும். அது **இனமோனை**, அல்லது **கிளைமோனை** எனப்படும். இனம், கிளை – ஒருபொருட்சொற்கள்.

## இனவெழுத்துக்கள்

உயிர் : 1. அ ஆ ஐ ஔ—ஓரினம்
2. இ ஈ எ ஏ —ஓரினம்
3. உ ஊ ஒ ஓ —ஓரினம்

மெய் : 1. ஞ் ந்—ஓரினம்
2. ம் வ்—ஓரினம்
3. த் ச்—ஓரினம்

அகரமோ டாகாரம் ஐகாரம் ஔகான்
இகரமோ டீகாரம் எஏ,—உகரமோ
டூகாரம் ஒஓ, ஞநமவ தச்சகரம்
தோகாய் கிளையெழுத்தாச் சொல்.

இவ் வெண்பாவை நன்கு மனப்பாடம் செய்க.

மொழிக்கு முதலில் மெய் தனித்து வாராதாகை யால், ஞ் ந் ம் வ் த் ச் என்னும் மெய்களை ஞ ஞா ஞி ஞீ முதலிய உயிர்மெய்யாகக் கொள்க. தசக்கரம் - தகரம் சகரம்.

ஞ ந, ம வ, த ச—என்னும் ஆறும் அல்லாத மற்ற மெய்கள் அதற்கதுவே மோனையாக வரும். ஞ ந ம வ த ச என்பவையும் அதற்கதுவேயும் வரும்.

மெய்யெழுத்துக்கள் இவ்வாறு இனமாக வருவ தோடு, அம் மெய்களின்மேல் ஏறிய உயிர்களும் 'அ ஆ ஐ ஔ' என இனமாகவே வரவேண்டும். 'அ-ஏ, இ-உ' என மாறி வருதல் கூடா.

'யா-இ ஈ எ ஏ' - ஓரினமாகும். புதியன புகுதலாக 'யா—அ ஆ ஐ ஔ' – ஓரினமாதலுங் கொள்க.

கீழ்வரும் எடுத்துக்காட்டுகளை நன்கு கவனித்துப் பார்த்து, மோனை, இனமோனைகளைக் கண்டுகொள்க.

**காட்டு :**

''அன்புக்கு முண்டோ அடைக்குந்தாழ்'' அ-அ

''ஐந்தவித்தான் ஆற்றல் அகல்விசும்பு ளார்கோமான்''
[ஐ-ஆ-அ

''இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்''
[இ-எ-இ

''உரனென்னும் தோட்டியால் ஓரைந்துங் காப்பான்'' உ-ஓ

உயிர் தனித்து மோனையாக வந்தது. 'அ–அ'–தனி மோனை. மற்றவை இனமோனை.

''ஞாலத் துயிர்தளிர்ப்ப நல்குமே'' ஞா-ந
''நீலச் சுனையில் ஞிமிருர்ப்ப'' நீ-ஞி
''மையுற்ற கண்ணருவி வார வளைசோர'' மை-வா-வ
''வெஞ்சிலையே கோடுவன மென்குழலே சோருவன''
[வெ-மெ

''துடியா நெடிதுயிராச் சோர்ந்து'' து-சோ
''சாரு மிடவற்றுத் தானில்லை'' சா-தா

ஞந, மவ, தச என்பன உயிரோடு கூடி இனமோனை யாக வந்தன.

''ஞாயிறு போய்ப்பட்ட ஞாட்பினுள்'' ஞா-ஞா
''நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து'' நி-நி
''மங்கல மென்ப மனைமாட்சி'' ம-ம
''வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்'' வை-வா-வா
''துன்னியார் குற்றமுந் தூற்று மரபினர்'' து-தூ
''சிறப்பீனும் செல்வமும் ஈனும்'' சி-செ

ஞந மவ தச என்பன அதற்கதுவே மோனையாக வந்தன.

''பற்றற்ற கண்ணும் பழமைபா ராட்டுதல்'' ப-ப
''குன்றன்னார் குன்ற மதிப்பிற் குடியொடு'' கு-கு-கு
''கொடையளி செங்கோல் குடியோம்பல் நான்கும்''
[கொ-கு

பிற மெய்கள் அதற்கதுவே மோனையாக வந்தன.

''யாமெய்யாக் கண்டவற்றுள் இல்லை எனைத்தொன்றும்''
யா-இ-எ–மோனை.

''யானையெர்டு வீழ்ந்தான் அவன்''

யா-அ-மோனை.

**குறிப்பு :** நீங்கள் படிக்கும் செய்யுட்களில் இவ்வின மோனைகளைக் கண்டறிக.

## 2. எதுகை

எதுகைக்கு மெய்யெழுத்து வந்ததே வரவேண்டும். உயிர்மெய்யெழுத்தாயின் வெவ்வேறு உயிரும் வரலாம். இனவெழுத்து வரவேண்டுமென்பதில்லை. ஆனால், நெடிலுக்கு நெடிலும் குறிலுக்குக் குறிலும் வருதல் சிறப்பு.

**காட்டு :** ''குஞ்சி யழகுங் கொடுந்தானைக் கோட்டழகும்
மஞ்ச ளழகும் அழகல்ல''

குஞ்-மஞ்-என வந்த மெய்யே வந்தது.

''பொறிவாயி லைந்தவித்தான் பொய்தீ ரொழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வார்''

பொறி-நெறி-என வந்த உயிரே வந்தது. றி: ற்+இ.

''ஆயிடை யின்னனம் வருந்தி யன்புகூர்
வேயுறழ் தோளியைப் பிரிந்து வெஞ்சின
மாயவெங் கொடுங்கலி வயத்த னாகினான்''

ஆயி-வேயு-மாய. யி-யு-ய—எதுகை.

**குறிப்பு :** நீங்கள் படிக்கும் செய்யுட்களில் வரும் எதுகைகளைக் கண்டறிக.

## 2. உறழ்ச்சித்தொடை

இரண்டடிகளில் மோனை முதலிய தொடைகள் வருதல் – **முதற்றொடை** எனப்படும். ஓரடியில் உள்ள சீர்களில் மோனை முதலிய தொடைகள் வருதல்– **உறழ்ச்சித்தொடை** எனப்படும். அவ் வுறழ்ச்சித் தொடை அளவடியிலேயே கொள்ளப்படும். அளவடி–நாற்சீரடி.

அடிகளின் முதற்சீரில் மோனை முதலியன வருவது,

1. அடிமோனை 3. அடிமுரண் 5. அடியளபெடை
2. அடியெதுகை 4. அடியியைபு

எனப்படும். **இயைபுத்தொடை இறுதிச்சீர்களில் கொள்ளப்படும்.**

ஓரடியின் சீர்களில் வரும் உறழ்ச்சித்தொடை,

1. இணை
2. பொழிப்பு
3. ஒரூஉ
4. கூழை
5. மேற்கதுவாய்
6. கீழ்க்கதுவாய்
7. முற்று
8. கடையிணை
9. கடைக்கூழை
10. இடைப்புணர்
11. பின்

எனப் பதினொரு வகைப்படும்.

இப் பதினொன்றையும் மோனை முதலிய முதற்றொடை ஐந்தனோடும் உறழ்ந்தால் ($5 \times 11 = 55$) அவ் வுறழ்ச்சித் தொடை **ஐம்பத்தைந்தாகும்.** உறழ்தல்-பெருக்குதல்.

**வரலாறு**

1 2 3 4
---——×———×———×———

இது அளவடிக்கு எடுத்துக்காட்டு. எண்கள் ஓரடியிலுள்ள சீர்களைக் குறிக்கும்.

1. இணைமோனை (1, 2) - முதல் இருசீர்களில் மோனை வருவது.

2. பொழிப்பு மோனை (1, 3) - முதற்சீரிலும் மூன்றுஞ் சீரிலும் மோனை வருவது.

3. ஒரூஉ மோனை (1, 4) - முதற்சீரினும் நான்காஞ் சீரினும் மோனை வருவது.

4. கூழைமோனை (1, 2, 3) - முதல் மூன்று சீர்களில் மோனை வருவது.

5. மேற்கதுவாய் மோனை (1, 3, 4) – இரண்டாஞ்சீ ரொழிந்த ஏனை மூன்று சீரினும் மோனை வருவது.

6. கீழ்க்கதுவாய் மோனை (1, 2, 4) – மூன்றுஞ்சீ ரொழிந்த ஏனை மூன்று சீரினும் மோனை வருவது.

7. முற்றுமோனை (1, 2, 3, 4) – நான்கு சீரினும் மோனை வருவது.

இவை ஏழும் முதலிலிருந்து எண்ணப்படும்.

8. கடையிணைமோனை (3, 4) – கடையிரு சீர்களில் மோனை வருவது.

9. கடைக்கூழை மோனை (2, 3, 4)–முதற்சீ ரொழிந்த ஏனை மூன்று சீரினும் மோனை வருவது.

10. இடைப்புணர் மோனை (2, 3) – இடையிரு சீரினும் மோனை வருவது.

11. பின் மோனை (2, 4) - இரண்டாஞ்சீரினும் நான் காஞ் சீரினும் மோனை வருவது.

இவை நான்கும் கடையிலிருந்து எண்ணப்படும். இடைப்புணர் முதலிலிருந்தும் எண்ணலாம்.

இவ்வாறே ஏனை எதுகை முதலிய நான்கு தொடை கட்குங் கொள்க.

**18.** **முதலிரு சீரிணை முதலிருந் தொன்றிரண்**
**டிடையீடு பொழிப்பொரூஉ ஈறிலி கூழை**
**முதலீ றயலில மேல்கீழ்க் கதுவாய்**
**முழுவது முற்றே கடையிரு சீரிணை**
**கடைமூன்று கூழை இடையிரண் டிடைப்புணர்**
**இரண்டும் நான்கும் பின்னெனப் படுமே.**

பொழிப்பு-ஒன்றுவிட்டது. ஒரூஉ—இரண்டுவிட்டது. கூழை – குட்டை; அளவில் குறைந்தது. கதுவாய் - பொக்கவாய். வாய் மழுங்கிய அரிவாளை, ' அரிவாள்

கதுவாயாய்க் கிடக்கிறது' என்பது வழக்கு. இடையீடு–இடையில் இல்லாதது – இடைவிட்டது. ஒன்று இடையீடு - ஒன்றுவிட்டது.

8, 9, 11 முறையே 1, 4, 2 தொடைகளைக் கடையிலிருந்து கொண்டனவாகும்.

1. இணை (1, 2)—8. கடையிணை (4, 3)
4. கூழை (1, 2, 3)—9. கடைக்கூழை (4, 3, 2)
2. பொழிப்பு (1, 3)—11. பின் (4, 2)

இடைப்புணர், இவ்விரண்டு வகையினும் சேராத தனி.

பெரும்பாலும் மோனையிலேயே இத் தொடைகள் வரும். சிறுபான்மை முரணில் வரும். இவற்றுள் பொழிப்பு மோனையே சிறந்ததாகும். அடுத்தது ஒரூஉ மோனை. நீங்கள் படிக்கும் செய்யுளடிகளில் இத் தொடைவகைகளைக் கண்டறியுங்கள். இவை அளவடிக் கண்ணே கொள்ளப்படும் என்பதை நினைவில் வையுங்கள்.

**குறிப்பு :** மோனை சீர்மோனையாகவே வரும். அதாவது ஓரடியிலுள்ள சீர்களில் மோனை வருதல்-முதலெழுத் தொன்றி வருதல்.

எதுகை அடியெதுகையாகவே வரும். அதாவது இரண்டடிகளின் முதற்சீரில் எதுகை வருதல் – இரண்டாமெழுத்தொன்றி வருதல்.

நேரிசை வெண்பாவின் இரண்டாமடியில் ஒரூஉ எதுகை வரும். ஏனையடிகளிலும் பாக்களிலும் ஒரூஉ வெதுகை அருகி வரும். அருகி வருதல் – மிகச் சிறுபான்மை வருதல்.

**காட்டு :**

" மன்னர் விழித்தா மரைபூத்த மண்டபத்தே
பொன்னின் மடப்பாவை போய்ப்புக்காள்—மின்னிறத்துச்
செய்யதாள் வெள்ளைச் சிறையன்னஞ் செங்கமலப்
பொய்கைவாய்ப் போவதே போன்று "

இவ் வெண்பாவின்,

முதலடியில் 1, 3, 4 சீர்களில் 'ம, ம, ம' - மோனை.
இரண்டாமடியில் 1, 3 சீர்களில்
'பொ, போ' – மோனை.
மூன்றுமடியில் 1, 3, 4 சீர்களில் 'செ, சி, செ'-மோனை.
நான்காமடியில் 1, 2, 3 சீர்களில் 'பொ, போ, போ'–மோனை.

**குறிப்பு** : நான்காமடி சிந்தடி. அதன் மூன்று சீரிலும் மோனை வந்திருக்கிறது. அளவடியின் நான்கு சீரினும் மோனை வருவதே முற்றுமோனை யாதலான் இது முற்று மோனையுமன்று. அளவடியில் ஈற்றுச்சீ ரொழிந்த ஏனை மூன்று சீரினும், அதாவது முதன் மூன்று சீரினும் மோனை வருதலான் இது கூழைமோனையுமன்று.

" பண்பில்சொல் பல்லா ரகத்து "

எனச் சிந்தடியில் 'ப-ப'-என முதலிருசீரிலும் மோனை வரின் இணைமோனை எனவும்,

" திறனறிந் தாங்கே திரு "

'தி–தி'–என முதற்சீரிலும் மூன்றுஞ்சீரிலும் மோனை வரின் பொழிப்புமோனை எனவுங் கொள்ளலாம்.

'மன்–பொன்'- எனவும், 'செய்–பொய்' – எனவும் அடியெதுகைகள் வந்திருத்தல் காண்க.

இரண்டாமடியில் 'பொன்-மின்' - ஒரூஉவெதுகை.

" கொலைமேற்கொண் டாரிற் கொடிதே அலைமேற்கொண்
டல்லவை செய்தொழுகும் வேந்து "

'கொலை–அலை' என இரண்டாவதடி யல்லாத ஏனையடியில் ஒரூஉவெதுகை வந்துள்ளது.

அளவடி யுள்ள செய்யுட்களில் பொழிப்புமோனை அமையப் பாடுவதே சிறப்புடைத்தாகும். சிறுபான்மை ஒரூஉமோனை வரலாம்.

காட்டு :

''கேட்ட செவிவழியே கேளா துணர்வோட''
'கே–கே' - பொழிப்புமோனை.

''வீமன் மடந்தை மணத்தின் விரைதொடுத்த''
'வீ-வி' - ஒரூஉமோனை.

3. **முரண் :** முரண்டொடை-அடிமுரண், சீர்முரண் இரண்டும் வரும்.

4. **இயைபு :** இயைபுத் தொடை பெரும்பாலும் இசைப்பாடல்களுக்கே உரியதாகும். இசைப்பாடல்கள் மோனை எதுகையோடு, ஈற்றில் இயைபுத் தொடை நன்கு அமையப் பாடவேண்டும்.

காட்டு:

மனமே மயங்காதே—மதி—தியங்காதே
மனமே மயங்காதே.

முனமே அறவோர் முதுநூல் பிறவோர்
மொழிதே றுதல்முறையோ—தமிழ்—முதுநெறியோ

இல்லறம் என்பதோர் இனிமையின் எல்லை
இதைவிட மக்களுக் கின்பமும் இல்லை
நல்லறம் பிறவென நவிலுவோர் சொல்லை
நம்பிநீ தனிமையை நாடுதல் தொல்லை

இவ் விசைப்பாடல் மோனை எதுகையோடு, 'காதே' அறவோர் - பிறவோர், முறையோ - நெறியோ, எல்லை — இல்லை - என இயைபுத்தொடை அமைந்திருத்தல் காண்க.

செந்தொடை : மோனை எதுகை முதலிய முதற் றொடையும், உறழ்ச்சித்தொடையும் பொருந்த வருவது செந்தொடை எனப்படும். செந்தொடை - சொற்களை

இயல்பாகத் தொடுப்பது. பழந்தமிழ்ப் புலவர்கள் செய்யுட்களில் இச் செந்தொடை இயல்பாக அமைந்துள்ளமை கண்டு இன்புறற்பாலது. சீரிய நடையின்பம் படத்தொடுப்பதே செந்தொடையாகும். இத் தொடை பெரும்பாலும் ஆசிரியப்பாவின்கண்ணே வரும். சீரிய செந்தொடை யமையப் பாடுதல் எளிதன்று.

**காட்டு:** "பூத்த வேங்கை வியன்சினை யேறி
மயிலினம் அகவு நாடன்
நன்னுதற் கொடிச்சி மனத்தகத் தோனே"

இந் நேரிசை யாசிரியப்பாவில் மோனை முதலிய தொடைகள் அமையாவிடினும், அகவலோசையுடன் செந்தொடை நன்கு அமைந்திருத்தல் காண்க.

'முதலடியில் 'வே-வி' - என இடைப்புணர்மோனை அமையினும் ஏனை இரண்டடியினும் யாதொரு தொடையும் அமையாமை காண்க.

### பயிற்சி

**1.** முன்னர், தொடைகள் கண்டறியும்படி கொடுத்துள்ள அடிகட்கு நீங்கள் கண்டறிந்த தொடைகள் சரியா என்பதை ஒப்புநோக்குவதோடு, உறழ்ச்சித்தொடைகளையும் அறிந்துகொள்ளுங்கள்.

1. முதலடியில் 'ந-ந' - பொழிப்புமோனை. நல்லொழுக்கம் X தீயொழுக்கம் - கடையிணை முரண்.

இரண்டாமடியில் 'எ-இ' - இணைமோனை.

2. முதலடியில் 'இ-இ-எ' - கூழைமோனை. 'இன்-இன்'- இணையெதுகை.

3. முற்றுமுரண். 'செங்-பைங்'-பின்னெதுகை.

4. முதலடியில் 'செ-செ'-பொழிப்புமோனை. 'செங் X பங்' - ஒரூஉ வெதுகை.

இரண்டாவதடியில் 'இ-இ'–பொழிப்புமோனை.

5. முதலடியில் 'ப-பா'-பொழிப்புமோனை.

இரண்டாமடியில் 'பி - பி' - கடையிணைமோனை எனலாம். 'மரீஇ-பிரிவு'–பொழிப்புமுரண்.

இப் பாட்டு அடியளபெடை.

6. முதலடியில் 'இருந்து×எழுந்து×நடந்து'-முரண்டொடை.

இரண்டாமடியில் 'இல்லை–உண்டு'-முரண்டொடை.

இப் பாட்டின் ஈற்றில் அடியியைபுத் தொடை.

1, 2, 4, 5 பாட்டுக்கள் அடியெதுகை.

**2.** கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. 3, 4 சீர்களில் மோனை வருவது———.
2. 1, 3, 4 சீர்களில் மோனை வருவது———.
3. இடைப்புணர்மோனை———

**3.** பொழிப்புமோனை போன்ற தொடைவகை எது ?

# செய்யுளியல்

**செ**ய்யுள் இயல் என்பது–செய்யுளின் இலக்கணங் கூறுவது என்பது பொருள். உறுப்பியலில் கூறிய எழுத்து அசை முதலிய அறுவகை உறுப்புக்களினால், சொற்செறிவும் பொருட்செறிவும் பொருந்த, சொல்லணியும் பொருளணியும் அமைய, தொடையின்பமும் நடையின்பமும் துன்ற, ஓசைநலத்துடன் செய்வது செய்யுள் ஆகும்.

யாப்பிலக்கணத்தில் செய்யுளைப் **'பா'** என வழங்குதல் மரபு. **பாவும் பாவினமும்** எனச் செய்யுள் இருவகைப்படும். இவை **பாப்பாவினம்** எனப்படும்.

**பா** : வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா எனப் பா நான்கு வகைப்படும். ஆசிரியப்பா **அகவற்பா** எனவும் பெயர்பெறும். கடைச்சங்க காலத்தும், அச்சங்க முற்காலத்தும் இந் நால்வகைப் பாக்களே பாடலில் பயின்று வந்தன.

**பாவினம்** : தாழிசை, துறை, விருத்தம் எனப் பாவினம் மூன்று வகைப்படும். பா இனம் – பாவினது இனம் ; ஆறும் வேற்றுமைத்தொகை. இவை மூன்றையும் பா நான்குடனும் உறழப் பாவினம் $(4 \times 3 = 12)$ பன்னிரண்டாகும்.

**அவையாவன :**

| | | | |
|---|---|---|---|
| 1. | வெண்டாழிசை | 7. | கலித்தாழிசை |
| 2. | வெண்டுறை | 8. | கலித்துறை |
| 3. | வெளி விருத்தம் | 9. | கலிவிருத்தம் |
| 4. | ஆசிரியத் தாழிசை | 10. | வஞ்சித்தாழிசை |
| 5. | ஆசிரியத்துறை | 11. | வஞ்சித்துறை |
| 6. | ஆசிரிய விருத்தம் | 12. | வஞ்சி விருத்தம் |

**குறிப்பு :** உறுப்பியலில் கூறிய அறுவகை உறுப்புக்களில் எழுத்து, அசை, தொடை என்னும் மூன்றும் எல்லாப் பாக்களுக்கும் பாவினங்கட்கும் பொது. **சீர், தளை, அடி** என்னும் மூன்றுறுப்பினைக் கொண்டே பா வேறுபாடு அமைவதாகும். இதனை நன்கு மனத்தில் இருத்துங்கள்.

**ஓசை :** பழந்தமிழ்ப் புலவர்கள் ஓசை வேறுபாடு கொண்டே பா வேறுபாடு கண்டனர். செப்பலோசை, அகவலோசை, துள்ளலோசை, தூங்கலோசை எனச் செய்யுளோசை நான்கு வகைப்படும்.

1. செப்பலோசை-இருவர் உரையாடல் போன்ற ஓசை.

2. அகவலோசை-ஒருவர் பேசுதல் போன்ற—சொற்பொழிவாற்றுதல் போன்ற ஓசை.

3. துள்ளலோசை—கன்று துள்ளினாற்போலச் சீர் தோறுந் துள்ளிவரு மோசை. அதாவது தாழ்ந்துயர்ந்து வருவது.

4. தூங்கலோசை—சீர்தோறுந் துள்ளாது தூங்கிவரு மோசை. தாழ்ந்தே வருவது.

வெண்பா-செப்பலோசை யுடையது.
ஆசிரியப்பா-அகவலோசை யுடையது.
கலிப்பா-துள்ளலோசை யுடையது.
வஞ்சிப்பா-தூங்கலோசை யுடையது.

இருவகை வெண்டளையானும் வருவது செப்பலோசை.
இருவகை ஆசிரியத்தளையானும் வருவது அகவலோசை.
கலித்தளையான் வருவது துள்ளலோசை.
இருவகை வஞ்சித்தளையானும் வருவது தூங்கலோசை.

### வெண்பாவும் அதன் இனமும்

வெண்பா : 1. குறள் வெண்பா
2. சிந்தியல் வெண்பா

3. அளவியல் வெண்பா
4. பஃறொடை வெண்பா
5. கலிவெண்பா

என வெண்பா ஐந்து வகைப்படும்.

**வெண்பாவின் இனம்**

1. வெண்டாழிசை
2. வெண்டுறை
3. வெளி விருத்தம்

என வெண்பாவின் இனம் மூன்று வகைப்படும்.

**குறள் வெண்பாவின் இனம்**

1. குறட்டாழிசை
2. குறள்வெண் செந்துறை

எனக் குறள்வெண்பாவின் இனம் இரண்டு வகைப்படும்.

**வெண்பாவின் இலக்கணம்**

வெண்பாவில் இயற்சீர் நான்கும் வெண்சீர் நான்கும் வரும் ; இயற்சீர் வெண்டளையும் வெண்சீர் வெண்டளையும் மட்டும் வரும் ; ஈற்றடி சிந்தடியாகவும், ஏனையடி அளவடியாகவும் வரும். வெண்பா-நாள், மலர், காசு, பிறப்பு என்னும் வாய்பாட்டால் இறும். இவ் விலக்கணப்படி அமைவதே வெண்பாவாகும். இறும்-முடியும்.

வெண்பாவில் கனிச்சீர் நான்கும் வரக்கூடா. இயற்சீர் வெண்டளை வெண்சீர்வெண்டளை யன்றி வேறு தளைகளும் வருதல் கூடா. அளவடி சிந்தடி யன்றி வேறு அடிகளும் வரப்பெறா. நினைவில் வையுங்கள்.

**குறிப்பு :** பாவுக்கே இந்த வரையறை. பாவினத்திற்கு இவ் வரையறையில்லை. ஏனைப் பாக்களுக்கும், பாவினங்கட்கும் இஃதொக்கும்.

**வெண்பாவின் வகை**

1. ஈரடி வெண்பா குறள்வெண்பா.
2. மூவடி வெண்பா சிந்தியல் வெண்பா.
3. நாலடி வெண்பா அளவியல் வெண்பா.
4. பலவடி வெண்பா பஃறொடை வெண்பா.
5. பன்னீரடியின் மிக்கது கலிவெண்பா.

நான்கிற்கு மேற்பட்ட அடிகளையுடைய வெண்பா பஃறொடைவெண்பா. பல்+தொடை=பஃறொடை. **பஃறொடை வெண்பாப் பன்னிரண்டடிக்குமேற் போகக் கூடாது.**

அடி என்பது நாற்சீரடியையே குறிக்கும்.

"நாற்சீர் கொண்ட தடியெனப் படுமே"

என்பது தொல்காப்பியம். நாற்சீரடியான அளவடியில் முக்கால் ஆனதால், சிந்தடி - **முக்கால்** எனப்படும். எனவே, குறள், சிந்து, அளவு, பஃறொடை, கலிவெண் பாக்கள்,

ஓரடி முக்கால் குறள்வெண் பாவே,
ஈரடி முக்கால் சிந்தியல் வெண்பா,
மூவடி முக்கால் அளவியல் வெண்பா,
பலவடி முக்கால் பஃறொடை வெண்பா,
பஃறொடை மிக்கது கலிவெண் பாவே.

என வழங்கும்.

**காட்டு :** "உள்ளத்தால் பொய்யா தொழுகின் உலகத்தார்
உள்ளத்து ளெல்லா முளன்"

இது குறள்வெண்பா. குறள்வெண்பாவைத் திருக்குறளில் கண்டுகொள்க. திருக்குறள் குறள்வெண்பாவால் ஆன நூல்.

**குறிப்பு :** வெண்பாவின் அளவடிகளில் பொழிப்பு மோனை வரவேண்டும். சிறுபான்மை ஒரூஉமோனையும்

வரலாம். சிந்தடியாகிய ஈற்றடியிலும் பொழிப்புமோனை வரவேண்டும். அதாவது முச்சீரடியாகிய அதன் முதற் சீரிலும் ஈற்றுச்சீரிலும் மோனை வரவேண்டும்.

குறள்வெண்பா, இரண்டடி யல்லது எழுசீருடைய தாகையால், குறள்வெண்பாவின் ஈற்றடியில் பொழிப்பு மோனையமையப் பாடின் பொருட்செறிவு குன்ற ஏது வாகும். ஆகையால், அவ் வீற்றடியின் முதற்சீரினும் மூன் ருஞ்சீரினும் மோனை அமையாது செந்தொடையாகப் பாடினும் இழுக்கின்று. இதனுல், பொழிப்புமோனை யின்றியே பாட வேண்டுமென்பதில்லை. பொருட்செறிவு குன்ற வலிந்து மோனை யமைக்க வேண்டியதில்லை என் பதே. ஆனல், வெண்டளை பிழையாது, செப்பலோசை யுடன் அமையவேண்டும். திருக்குறள் வெண்பாக்களில் பெரும்பாலும் இவ்வாறு அமைந்திருத்தல் இக்காரணம் பற்றியே யாகும்.

**காட்டு :**

''ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்
பேரறி வாளன் திரு''

இது முதலடி ஒரூஉ மோனை பெற்று, ஈற்றடி பொழிப்பு மோனை பெருது வந்த குறள்வெண்பா.

''ஒருபொழுதும் வாழ்வ தறியார் கருதுப
கோடியு மல்ல பல''

இது முதலடி ஒரூஉ வெதுகை பெற்று, ஈற்றடி பொழிப்பு மோனை பெருது வந்த குறள்வெண்பா.

''அற்ருரைத் தேறுத லோம்புக மற்றவர்
பற்றிலர் நாணுர் பழி''

இது முதலடி ஒரூஉவெதுகையும், ஈற்றடி பொழிப்பு மோனையும் பெற்றுவந்த குறள்வெண்பா.

## நேரிசை, இன்னிசை வெண்பா

நாலடி வெண்பாவில், முதல் இரண்டடியின் எதுகை பெற்ற தனிச்சீரை இரண்டாவதடியின் ஈற்றில் பெற்று வருவது – **நேரிசை வெண்பா** எனப்படும். அத்தகைய தனிச்சீர் பெறாது வருவது – **இன்னிசை வெண்பா** எனப்படும். தனிச்சீர் – **தனிச்சொல்** எனவும்படும்.

**காட்டு :**

''ஒன்று கரும்பினடி ஓங்குநுனி யேயிரண்டு
துன்றுபுளிப் பேமூன்று தோகாய்வேம்—
பொன்றதன்மேல்
பின்னும் பலபிள்ளைப் பேறுடையா ரின்விருப்புக்
கென்னுவகை சொல்வே னினி''

இது இரண்டாமடியின் ஈற்றில் முதல் இரண்டடியின் எதுகை பெற்ற தனிச்சொல் பெற்று வந்ததால் நேரிசை வெண்பா. ஒன்று-துன்று-பொன்ற—எதுகை.

**இன்னிசை வெண்பா :**

1. நாலடியும் ஒரே எதுகை பெற்றும்,
2. பல எதுகை பெற்றும்,
3. அடிதோறும் தனிச்சொற் பெற்றும்,
4. இரண்டாமடியிலும் மூன்றாமடியிலும் தனிச் சொற் பெற்றும்,
5. மூன்றாமடியில் தனிச்சொல் பெற்றும்,

இன்னும் பலவகையில் வரும்.

**காட்டு :**

''துகடீர் பெருஞ்செல்வந் தோன்றியக்காற் றொட்டுப்
பகடு நடந்தகூழ்ப் பல்லாரோ டுண்க;
அகடுற யார்மட்டும் நில்லாது செல்வம்
சகடக்கால் போல வரும்''

இது நாலடியும் 'துக–பக–அக–சக' என ஒரெதுகையாய் வந்த இன்னிசை வெண்பா.

''கள்ளமென் பார்க்குத் துயிலில்லை; காதலிமாட்
டுள்ளம்வைப் பார்க்குந் துயிலில்லை; ஒண்பொருள்
செய்வமென் பார்க்குந் துயிலில்லை; அப்பொருள்
காப்பார்க்கு மில்லை துயில்''

இது பலவெதுகையாய் வந்த இன்னிசை வெண்பா. 'கள்-டுள்' என முதல் இரண்டடி எதுகை பெற்று, பின்னிரண்டடி எதுகை பெறாமை காண்க.

''இன்னாமை வேண்டின் இரவெழுக—இந்நிலத்து
மன்னுதல் வேண்டின் இசைநடுக—தன்னொடு
செல்வது வேண்டின் அறஞ்செய்க—வெல்வது
வேண்டின் வெகுளி விடல்''

இது அடிதோறும் தனிச்சொற் பெற்று வந்த இன்னிசை வெண்பா. முதல் இரண்டடி ஒரெதுகை. 'இன்–இந்' மெல்லின வெதுகை.

''கடற்குட்டம் போழ்வர் கலவர்—படைக்குட்டம்
பாய்மா வுடையான் உடைக்கிற்கும்—தோமில்
தவக்குட்டம் தன்னுடையான் நீந்தும்—அவைக்குட்டம்
கற்றான் கடந்து விடும்''

இது அடிதோறும் தனிச் சொற் பெற்று, அடியெதுகையின்றி வந்த இன்னிசை வெண்பா. 'பாய்மா-தோமில், பாய்மா-யகர ஆசெதுகை. பாமா-தோமி—எதுகை.

'' மலிதேரான் கச்சியும் மாகடலுந் தம்முள்
ஒலியும் பெருமையும் ஒக்கும்—மலிதேரான்
கச்சி படுவ கடல்படா—கச்சி
கடல்படுவ எல்லாம் படும்''

இது இரண்டாமடியிலும் மூன்றாமடியிலும் தனிச் சொற் பெற்று வந்த இன்னிசை வெண்பா. முதல் இரண்டடி ஒரெதுகை.

"வளம்பட வேண்டாதார் யார்யாரு மில்லை
அளந்தன போகம் அவரவ ராற்றல்
விளங்காய் திரட்டினா ரில்லை—களங்கனியைக்
காரெனச் செய்தாரு மில் "

இது மூன்றாமடியில் தனிச்சொற் பெற்று வந்த இன்னிசை வெண்பா. முதல் மூன்றடி ஓரெதுகை.

இன்னும் வேறுபட வரும் இன்னிசை வெண்பாக் களை நாலடியார், நான்மணிக்கடிகை முதலிய கீழ்க் கணக்கு நூல்களிற் காண்க. நளவெண்பா முற்றும் நேரிசை வெண்பாக்களே.

## சிந்தியல் வெண்பா

சிந்தியல் வெண்பாவும் நேரிசைச் சிந்தியல் வெண்பா, இன்னிசைச் சிந்தியல் வெண்பா என இரு வகைப்படும்.

**காட்டு :**

"நல்லார் உறவால் நலம்பெருகும் நாடோறும்
அல்லார் உறவால் அறந்தேயும்—பொல்லார்
தொடர்விடுதல் மேலாந் துணை "

இது இரண்டாமடியில் தனிச்சொற் பெற்று வந்த தால், நேரிசைச் சிந்தியல் வெண்பா.

"அன்புற் றெவர்க்கும் அறனல்ல செய்யாது
தென்புற்று நன்குணற்றுஞ் செம்மைத் திருவுடையார்
இன்புற்று வாழ்வ ரினிது "

இது தனிச்சொல் இன்றி, மூன்றடியும் ஓரெதுகை பெற்றுவந்த இன்னிசைச் சிந்தியல் வெண்பா.

## பஃறொடை வெண்பா

பஃறொடை வெண்பாவும் நேரிசைப் பஃறொடை வெண்பா, இன்னிசைப் பஃறொடை வெண்பா என இருவகைப்படும்.

காட்டு :

" ஆய்ந்தறிந்து கல்லாதான் கல்வியும், ஆறறிவில்
தோய்ந்தறிந்து சொல்லாதான் சொற்பெருக்கும்—
தீந்தமிழின்
சொல்லிருக்க வன்கடுஞ்சொற் சொல்வதூஉம்
தன்னனையாள்
இல்லிருக்க வேறில் லிரப்பதூஉம்—நெல்லிருக்கக்
கற்கறித்து மண்டின்று காய்த்துக் களத்தடித்த
புற்கறித்து வாழ்வதனைப் போன்ம் "

இது இரண்டடிக் கொருமுறை தனிச்சீர் பெற்று வந்த ஆறடி நேரிசைப் பஃறொடை வெண்பா.

' செவ்வரைச் சென்னி யரிமானோ—டவ்வரை
ஒல்கி யுருமிற் குடைந்தற்றான்—மல்கிக்
கரைகொன் றிழிதரூஉங் காவிரி நாடன்
உரைசா லுடம்பிடி மூழ்க—அரசோ
டரசுவா வீழ்த்த களத்து "

இது முதல் இரண்டடியினும் தனிச்சொற் பெற்று, வேறெதுகையாய், பின் மூன்றடியும் ஓரெதுகையாகி நான்காமடியில் தனிச்சொற் பெற்று வந்த ஐந்தடி இன்னிசைப் பஃறொடை வெண்பா.

" வையக மெல்லாங் கழனியாய்—வையகத்துச்
செய்யகமே நாற்றிசையின் தேயங்கள்—செய்யகத்து
வான்கரும்பே தொண்டை வளநாடு—வான்கரும்பின்
சாறேயந் நாட்டுத் தலையூர்கள்—சாறட்ட
கட்டியே கச்சிப் புறமெல்லாம்—கட்டியுள்
தானேற்ற மான சருக்கரை மாமணியே
ஆனேற்றான் கச்சி யகம் ",

இது அடிதோறும் தனிச்சொற் பெற்று வந்த ஏழடி இன்னிசைப் பஃறொடை வெண்பா.

" அன்றொருநாள் மாலை யழகு நிலவொளியில்
சென்றுலவி வீடு திரும்பிவந்து முப்பாலை
உண்டு களித்தின்ப மூற்றெடுப்ப வேக்கழுத்தங்
கொண்டு பழந்தமிழர் கூம்பாநல் வாழ்வஃதும்
மற்றொருகால் நம்மவர்க்கு வாய்க்குமோ
வென்றெண்ணிச்
சற்றொருகால் அப்படியே தானிருக்க வென்மகவும்
வாய்க்கு மெனமகிழ்ந்து வாரி யெடுத்துமுத்தம்
தாய்க்கு மிகக்கொடுத்தேன் தான் "

இது தனிச்சொல் இன்றி, இவ் விரண்டடி ஓர் எதுகை பெற்று வந்த எட்டடி இன்னிசைப் பஃறொடை வெண்பா.

**குறிப்பு**: நேரிசைப் பஃறொடை வெண்பா—இவ் விரண்டடி ஓரெதுகையாய் இரண்டடிக் கொருமுறை அவ் விரண்டடியின் எதுகையுடைய தனிச்சொற் பெற்று வரும். இவ்வாறு வராதன வெல்லாம் இன்னிசைப் பஃறொடை வெண்பாவாகும் என அறிக.

**கலிவெண்பா**

இதுவும் நேரிசைக் கலிவெண்பா, இன்னிசைக் கலி வெண்பா என இரண்டு வகைப்படும். இது பன்னீரடிக்கு மேல், அகவலேபோல் எத்தனை அடி வேண்டுமானாலும் வரலாம்.

**நேரிசைக் கலிவெண்பா**: இது பஃறொடை வெண் பாவே போல், இரண்டிரண்டடி ஓரெதுகையாய், அவ் வெதுகை பெற்ற தனிச்சீரை அவ் விரண்டாமடியின் ஈற்றில் பெற்று வரும். அவ்வாறு தனிச்சொற் பெறாது வருவது இன்னிசைக் கலிவெண்பா. இது இன்னிசைப் பஃறொடை வெண்பாப் போன்றது.

**காட்டு**:

" உள்ள முவந்தாள் ஒருவனை யன்றொருநாட்
கள்ள முவந்த கருங்கண்ணாள்—பள்ள

வயல்பாயு நீர்போல மானன்னாள் மைக்கட்
கயல்பாயு முள்ளப்புட் காயும் - செயல்பாயும்

*      *      *

காதற் கருங்குவளை கண்டு மலரவிருள்
போதப் புகுந்த புதுமதிபோல் - மேதக்கான்
நோயிடைய வேயுதவி நோக்கியெதிர் நின்றாளை
ஆயிடைகண் டுள்ளமுவந் தான் ''

—நெருஞ்சிப்பழம்

இது 86 அடிகளையுடைய நேரிசைக் கலிவெண்பா. தூது, உலா முதலிய தமிழ்ப் பனுவல்கள் நேரிசைக் கலிவெண்பாவால் ஆனவை; படித்தறிக. தமிழ் விடு தூது, மூவருலா முதலியவற்றைப் படித்துப் பயிற்சி பெறுக.

'' குயில்கூவிக் கொண்டிருக்கும் கோலம் மிகுந்த
மயிலாடிக் கொண்டிருக்கும் வாச முடையநற்
காற்றுக் குளிர்ந்தடிக்கும் கண்ணாடி போன்றநீர்
ஊற்றுக்கள் உண்டு கனிமரங்கள் மிக்கவுண்டு

*      *      *

அன்பு மிகுந்த அழகிருக்கும் நாயகரே
இன்பமும் நாமும் இனி ''

—சஞ்சீவி பர்வதத்தின் சாரல்

இது தனிச்சொல் இன்றி வந்ததால் இன்னிசைக் கலிவெண்பா. இது பல நூறடிகளை யுடையது. இன்னிசைக் கலிவெண்பாக்களைக் கலித்தொகையில் பயின்றறிக.

**குறிப்பு:** இருவகைக் கலிவெண்பாவும், ஏனை வெண்பாக்கள் போல ஈற்றடி சிந்தடியாகவும் ஏனையடி அளவடியாகவும் வரும். நாள், மலர், காசு, பிறப்பு என்னும் வாய்பாட்டால் இறும் என்பதை நினைவுகூர்க.

மேலே எடுத்துக்காட்டிய வெண்பாக்களின் மோனை எதுகைகளையும், இருவகை வெண்டளைகளையும் கண்டறிக. வெண்பாவின் இலக்கணத்தையும் நினைவுகூர்க.

## குறள்வெண் செந்துறை

அளவொத்த இரண்டடி வருவது **குறள்வெண் செந்துறை** எனப்படும். இது **வெண்செந்துறை** எனவும் வழங்கும். அளவொத்தல்—ஓரடியில் எத்தனை சீர் உளதோ அத்தனை சீரே அடுத்த அடியிலும் இருத்தல். அதாவது அளவடிக்கு அளவடியே வருதல்.

**காட்டு :**

"ஆத்தி சூடி அமர்ந்த தேவனை
ஏத்தி யேத்தித் தொழுவோ மியாமே"

இது அளவடி இரண்டு வந்த குறள்வெண் செந்துறை.

"வாழியநின் மலரடிகள் மவுனதவ முனிவ
மனமிரங்கி யருள்புரிந்தோர் வார்த்தையெனக் கீயிற்
பாழடவி யிதிற்சுழன்று பாதைவிடுத் தலையும்
பாவியொரு வனையளித்த பயனுறுவை பெரிதே"
--மனோன்மணீயம்

இது எண்சீர்க்கழி நெடிலடி இரண்டு வந்த குறள் வெண் செந்துறை.

பாரதியாரின் **கண்ணன் என் சேவகன்** முதலிய கண்ணன் பாட்டுக்கள் குறள்வெண் செந்துறைகளே யாகும்.

இனி, அளவொத்த இரண்டடியேயன்றிப் பொழிப்பு மோனையுடைய அளவடி தனித்துப் பொருட்டொடர்புடையதாய் வருவதும் குறள்வெண் செந்துறையே யாகும்.

**காட்டு :**

"தேன்பெருகுஞ் சோலை தென்னன் வளநாடு,
வாழை வடக்கீனும் வான்கமுகு தெற்கீனும்,

கட்டுக் கலங்காணும் கதிருழக்கு நெற்காணும்,
பஞ்சங் கிடையாது பாண்டி வளநாட்டில் ''
—அல்லியரசாணிமாலை

அல்லியரசாணிமாலை, பவளக்கொடிமாலை, அபிமன்னன் சுந்தரிமாலை, பஞ்சபாண்டவர் வனவாசம், நல்லதங்காள் கதை முதலிய அம்மானைப் பாடல்கள் தனித்து வந்த குறள்வெண் செந்துறைகளே.

'' ஆனைகட்டுந் தூராகும் வானமுட்டும் போராகும்
எட்டுத் திசைகளையும் கட்டியரசாள்வாளாம் ''

எனச் சிறுபான்மை மொழிப்பெதுகை பெற்ற அளவடியும் தனித்து வரும்.

'' ஆர்கலி யுலகத்து மக்கட் கெல்லாம் ''

எனத் தொடங்கும் முதுமொழிக்காஞ்சி அடிகளெல்லாம் தனித்து வந்த குறள்வெண் செந்துறைகளே.

**குறிப்பு** : வெண்டாழிசை முதலிய வெண்பாவின் மற்ற இனங்களை இரண்டாம் பாகத்தில் காண்க.

## பயிற்சி

1. வெண்பாவில் வரும் வாராச் சீர், தளை, அடிகள் யாவை ?

2. நேரிசை, இன்னிசை வெண்பா — வேறுபாடென்ன ?

3. பஃறொடை வெண்பா, கலிவெண்பா – ஒற்றுமை வேற்றுமை என்ன ?

4. வெண்பா விலக்கணத்தில் குறள்வெண்பாவுக் குரிய விலக்கென்ன ? அவ் விலக்குக்குக் காரணம் என்ன ?

5. குறள்வெண் செந்துறையின் வகை யாவை ?

6. தனிச்சீரின் இலக்கணம் என்ன? தனிச்சீர் வரும் வெண்பாக்கள் யாவை ?

7. வெண்பாவால் ஆகிய தமிழ் நூல்கள் பத்தின் பெயர் கூறுக.

8. தூது அல்லது உலா எந்தப் பாவினால் பாட வேண்டும்?

## ஆசிரியப்பாவும் அதன் இனமும்

ஆசிரியப்பா: 1. நேரிசை யாசிரியப்பா
2. இணைக்குற ளாசிரியப்பா
3. நிலைமண்டில ஆசிரியப்பா
4. அடிமறிமண்டில ஆசிரியப்பா

என ஆசிரியப்பா நான்கு வகைபடும்.

இனம்: 1. ஆசிரியத் தாழிசை
2. ஆசிரியத் துறை
3. ஆசிரிய விருத்தம்

என ஆசிரியப்பாவின் இனம் மூன்று வகைப்படும்.

### ஆசிரியப்பாவின் இலக்கணம்

ஆசிரியப்பாவில் கனிச்சீர் ஒழிந்த ஏனை எட்டுச்சீரும் வரும். இருவகை வஞ்சித்தளையும் அல்லாத ஏனை ஐந்து தளையும் வரும். நெடிலடியும் கழிநெடிலடியும் அல்லாத ஏனை மூன்றடியும் வரும். ஆசிரியப்பா ஏகாரத்தால் இறும்.

காய்ச்சீரும், வெண்சீர் வெண்டளையும், கலித்தளையும் சிறுபான்மை வரும். சிலப்பதிகாரம், மணிமேகலை, பெருங்கதை ஆகியவற்றின் ஆசிரியப்பாக்கள் 'என்' என்னும் அசையால் முடிகின்றன.

ஆசிரியப்பா மூன்றடிமுதல் ஆயிரம் அடிகாறும் நடைபெறும். அதற்குமேல் வரினும் இழுக்கின்று.

**ஆசிரியப்பாவின் வகை**

1. **நேரிசை யாசிரியப்பா:** *எல்லா அடியும் அளவடியாக வந்து, ஈற்றயலடி சிந்தடியாக வருவது நேரிசை ஆசிரியப்பா. ஈற்றயலடி-ஈற்றடிக்கு முன்னுள்ள அடி.*

2. **இணைக்குற ளாசிரியப்பா:** *நேரிசை யாசிரியப்பாவின் இடையிடையே குறளடியும் சிந்தடியும் வருவது. நேரிசை யாசிரியப்பாவில் சிந்தடி வருகிறது. அதோடு, இடையிடையே குறளடி இணைந்து வருவதால் இணைக்குற ளாசிரியப்பா எனப் பெயர்பெற்றது. இணைக்குற ளாசிரியப்பாவின் முதலடியும் ஈற்றடியும் அளவடியாகவே வரும்.*

3. **நிலைமண்டில ஆசிரியப்பா:** *எல்லா அடியும் அளவடியாக வருவது.*

4. **அடிமறிமண்டில ஆசிரியப்பா:** *நிலைமண்டில ஆசிரியப்பாவில் எந்த அடியை முதலில் வைத்துப் பொருள் கொள்ளினும் பொருள் மாறுபடாமல் இருப்பது. அதாவது ஒவ்வோரடியிலும் பொருள் முற்றுப்பெறுவது. அடியை முன்னும் பின்னும் மறித்துப் (மாற்றி) பொருள் கொள்ளுமாறு நிற்றலால் இப்பெயர் பெற்றது.*

**குறிப்பு:** *ஆசிரியப்பாவின் அளவடிகள் பொழிப்பு மோனை பெறவேண்டும். சிந்தடிகள் முதற்சீரினும் மூன்றுஞ் சீரினும் மோனை பெறுதல் சிறப்புடைத்து.*

*ஆசிரியப்பா அடியெதுகை பெற்று வருதல் சிறப்புடைத்து; தனித்தும் வரலாம். ஒவ்வோரடியும் பொழிப்பெதுகை பெற்றுத் தனித்தனியும் வரலாம். அடியெதுகை இரண்டடியின் முதற்சீர் ஓரெதுகை பெறுதல்.*

*1. இரண்டடி ஓரெதுகை பெறுதல், 2. ஓரடி பொழிப்பெதுகை பெறுதல், 3. ஓரடி பொழிப்பு மோனை பெறுதல் என மூன்று வகையில் வரும். பொழிப்பெதுகை பெற்றுத் தனித்து வருதலே சிறப்புடைத்து.*

காட்டு :

1. " பன்னூ லாய்ந்து பழுநிய வுளத்து
நன்னூற் புலவர் நாளவை யிருத்தலின்
உயரிய இன்பம் உண்டெனின்
இயலிய முறையில் யாமடை குதுமே "

இது ஈற்றயலடி சிந்தடியாக வந்தமையின் நேரிசை யாசிரியப்பா. இதில் பொழிப்பு மோனை பெற்ற இரண்டடிகள் ஓரெதுகையாக வந்தன. 'குதுமே' என ஏகாரத்தால் முடிந்தது.

2. " நீரின் றண்மையுந் தீயின் வெம்மையும்
சாரச் சார்ந்து
தீரத் தீரும்
சாரல் நாடன் கேண்மை
சாரச் சாரச் சார்ந்து
தீரத் தீரத் தீர்பொல் லாதே "

இது இடையிடையே குறளடியும் சிந்தடியும் வந்தமையின் இணைக்குற ளாசிரியப்பா.

3. " வள்ளுவன் மொழிந்த வாய்மொழிப் படியாம்
உள்ளுவ வுள்ளி உவர்ப்ப வுவர்த்துக்
கற்றறிந் தாங்கு முற்றுற நின்றே
யாமுறு மின்பம் யாவரு முறவே
நன்கினி துரைத்துப் பொன்கனி போல
இருநிலம் புகழ இனிதுவாழ் குவமே "

இது எல்லா அடியும் அளவடியாக வந்ததால் நிலைமண்டில ஆசிரியப்பா. இதில் 3, 5 அடிகள் பொழிப்பெதுகை பெற்றன. 4, 6 அடிகள் பொழிப்பு மோனை பெற்றுத் தனித்து வந்தன.

4. " தாய்மொழி வளர்த்தல் தமிழர்தங் கடனே
வாய்மொழி புரத்தல் மற்றவர் கடனே
காய்மொழி தவிர்த்தல் கற்றவர் கடனே
ஆய்மொழி யுரைத்தல் அறிஞர்தங் கடனே ".

இது எல்லா அடியும் அளவடியாக வந்து, எவ்வடியை முதலில் வைத்துப் பொருள்கொள்ளினும் பொருள் மாறுபடாதாகையால் அடிமறிமண்டில ஆசிரியப்பா.

எல்லா அடியும் அளவடியான் வருதல், அவ்வாறு வந்து பொருள் மாறுபடாமை, ஈற்றயலடி சிந்தடியாக வருதல், இடையிடையே குறளடி வருதல் என்னும் இலக்கணத்தால்,

1. நிலைமண்டில ஆசிரியப்பா
2. அடிமறிமண்டில ஆசிரியப்பா
3. நேரிசை யாசிரியப்பா
4. இணைக்குற ளாசிரியப்பா

எனலே நேரிய வைப்புமுறை யாகும்.

### பயிற்சி

1. மேற்காட்டிய ஆசிரியப்பாக்களில் உள்ள மோனை எதுகைகளையும், தளைகளையும் கண்டறிக.

2. சங்க நூல்களில் உள்ள ஆசிரியப்பாக்களைப் படித்து வகையை உணர்க.

## ஆசிரியப்பாவின் இனம்

**ஆசிரிய விருத்தம் :** கழிநெடிலடி நான்கு கொண்டது ஆசிரிய விருத்தம். நான்கடியும் அளவொத்து வர வேண்டும்.

காட்டு :

"வருமலை யளவிக் கானல் மணலிடை யுலவிக் காற்றிற்
சுரிகுழ லுலர்த்துந் தும்பி தொடர்மரை முகத்தர் தோற்றம்
இருபெரு விசும்பிற் செல்லும் இளமைதீர் மதியந் தன்னைக்
கருமுகில் தொடர்ந்து செல்லுங் காட்சிபோற்
றென்று மாதோ "

இது அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம். முதற்சீரிலும் நான்காஞ்சீரிலும் மோனை அமைந்துள்ளமை காண்க.

" உண்ணென்று படைப்பீர்மன் உடுத்தென்று விரிப்பீர்மன்
உடன்றே யுள்ளம்
கண்ணின்று காயீர்மன் கல்லென்று சொல்லீர்மன்
கனிதேன் பாகின்
விண்ணின்று நாட்பெய்யு மழையென்று வந்தீர்மன்
வெறியே மேங்க
மண்ணொன்றி நின்றீர்மன் கல்லொன்றி னெவ்வாறு
வாழ்வே மன்னே "

இது முதற்சீரினும் ஐந்தாஞ்சீரினும் மோனை வந்த அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம். ஒன்று மூன்று ஐந்து சீர்களில் மோனை வருதலுமாம். முதலடியில் காண்க.

" சொற்றொறும் பொருளின் சிறப்புமப் பொருளிற்
சொற்பொருந் துறவமை சிறப்பும்
சொற்றொட ரமைவின் சிறப்புமத் தொடரிற்
சொற்பொரு ளமைதியின் சிறப்பும்
கற்றொறு முள்ளங் களிக்கவத் தொடரிற்
கருத்தமைந் திருக்குநற் சிறப்பும்
பெற்றுள தமிழ்த்தாய்க் கினியொரு சிறப்புப்
பேசுவ தெனதுபே ரவாவே "

இது முதற்சீரினும் ஐந்தாஞ்சீரினும் மோனை வந்த எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.

" செங்கதிரோன் போய்மறையச் செவ்வா னேகத்
திங்களிளம் பிறைநுதலைத் தெரியக் காட்டிக்
கங்குலென்ப் புலவர்சொலும் இரவுப் பெண்ணும்
காரிருளாம் குழல்விரித்துக் களிக்கை வீசிப்.
பொங்கொளிவிண் மீன்களெனும் [illegible]த்துப் பற்கள்
புறந்தோன்ற வேசிரித்துப் பே[illegible]ள் போத
மங்கையவள் புன்னகையால் மயங்[illegible]
வையகமே ஆழ்துயிலில் வைகிற் றம்மா "

இது முதற்சீரினும் ஐந்தாஞ்சீரினும் மோனை வந்த எண்சீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம். 1, 3, 5, 7 சீர்களில் மோனை வரின் செவிக்கின்பந் தரும். 1, 4 அடிகளைக் காண்க.

" கற்றோரை யினிதுவர வேற்றுமுக மன்செய்து
கல்வியை வளர்க்கவேண்டும்
கசடறக் கற்பவை கற்றுமே நாடொறும்
கற்றபடி நிற்கவேண்டும்
பெற்றோரை முதுமையிற் போற்றவேண் டும்பெற்ற
பெண்ணையாண் பிள்ளைபோலப்
பெரியோர்கள் மெச்சுவகை பிச்சைபுக் காயினும்
பேரறிவி யாக்கவேண்டும்
உற்றோரை யொருநாளுங் கைவிடுதல் செய்யாமல்
உதவியது செய்யவேண்டும்
உலகத்தி னோடொட்ட வொழுகவேண் டுஞ்செல்வர்
ஒப்புரவு செய்யவேண்டும்
அற்றோரை யினிதுவந் தோம்பவெண் டும்பகுத்
தறிவினைப் போற்றவேண்டும்
ஆராயி னிவையுலக மக்கள்கைக் கொண்டொழுகும்
அறமெனத் தெளிகுவீரே "

இது 1, 5, 7, 11 சீர்களில் மோனை வந்த பன்னிரு சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.

" சாதகப் பறவைக் கிரும்புயற் றுளியுஞ்
சகோரத்தி னுக்கு திக்கும்
சந்திரன் விடுங்கரமு மம்புயத் திற்கேழு
தாம்பரித் தேரி ரவியும்
மேதக வுறுந்தவத் திற்கருளு மவ்வருள்
விளக்கத்தி னுக்கு ழுவலும்
மேவருங் கல்விக்கு நுண்ணறிவு நுண்ணறிவு
வீக்கத்தி னுக்கொ ழுக்கும்
நோதகவி லாதமைந் தங்கருள் வழிச்செலீஇ
நோய்ப்பிறவி போக்கு வார்க்கு
நோற்றவர் புராணமில் லாதமை தராதாம்
நுவன்றெம்மை யாண்ட பெம்மான்
தீதக மதித்திடாச் சேவையர் குலாதிபன்
சிறுதே ருருட்டி யருளே
சிறுகோ லெடுத்தரசு செங்கோல் நிறுத்தினேன்
சிறுதே ருருட்டி யருளே "

இது 1, 5, 8, 12 சீர்களில் மோனை வந்த பதினான்கு சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.

**குறிப்பு:** பதினான்குசீர்க் கழிநெடிலடிக்குமேல் வாரா. பன்னிருசீர்க் கழிநெடிலடியும் பதினான்குசீர்க் கழிநெடிலடியும் அறுசீரடியும் எழுசீரடியும் இரண்டு ஒரு மோனைப்பட வந்த இரண்டடிகளே யாகும்.

ஒன்பது, பத்துச்சீர்க் கழிநெடிலடிகள் இனிய ஓசை பெறா.

**காட்டு :**

" இடங்கை வெஞ்சிலை வலங்கை வாளியின்
எதிர்ந்த தானையை யிலங்கு மாழியின் விலங்கியாள்
முடங்கு வாலுளை மடங்கல் மீமிசை
முனைந்து சென்றுடன் முரண்ட ராசனை முருக்கியாள் "

இவ் வொன்பதின்சீர்க் கழிநெடிலடிகளில் முடு கோசை தட்டுதல் காண்க.

" இடங்கை வெஞ்சிலை வலங்கை வாளியின்
எதிர்ந்த தானையை விலங்கியாள் "

என்பதே சரியான அடி. 'இலங்கு மாழியின்' என்னும் இருசீரும் **இடைப்பிறவரல்** ஆகும். அல்லது,

" இடங்கை வெஞ்சிலை வலங்கை வாளியின்
இலங்கு மாழியின் விலங்கியாள் "

எனக்கொளின், 'எதிர்ந்த தானையை'என்பது இடைப்பிற வரல். எழுசீரடியுடன் இருசீர் கொண்டதே யாகும் இவ் வடி.

" கொங்கு தங்கு கோதை யோதி மாத ரோடு
கூடு நீடு மோடை நெற்றி
வெங்கண் யானை வேந்தர் போந்து வேத கீத
நாத வென்று நின்று தாழ "

இவை பதின்சீர்க் கழிநெடிலடிகள். இவையும் அவ்வாறே ஓசை தட்டுதலைப் படித்தறிக.

" கொங்கு தங்கு கோதை யோதி மாத ரோடு கூடியே
வெங்கண் யானை வேந்தர் போந்து வேத கீத மோதியே "

என எழுசீர்க் கழிநெடிலடியாகக் கொள்வதே ஏற் புடைத்து.

**6, 7, 8, 12, 14 சீர்க்கழிநெடிலடிகளே கொள்ளத் தக்கவை.**

## பயிற்சி

1. ஆசிரியப்பாவில் வாராத சீர், அடிகள் யாவை?
2. ஆசிரியப்பா எத்தனை வகைப்படும்?
3. ஆசிரியப்பா என்ன ஓசையை யுடையது?

4. அடிமறிமண்டில ஆசிரியப்பா, இணைக்குறளாசிரியப்பா—இவற்றின் இலக்கணம் என்ன?

5. எதன் இலக்கணந் தெரிந்த பின்னர் இணைக்குறளாசிரியப்பாவின் இலக்கணந் தெரிதல் வேண்டும்?

6. ஆசிரியப்பாவின் அடியும் முடிவும் என்ன?

7. ஆசிரிய விருத்தத்தின் இலக்கணம் யாது?

## கலிப்பாவும் அதன் இனமும்

**கலிப்பா :**

1. ஒத்தாழிசைக் கலிப்பா
2. வெண்கலிப்பா
3. கொச்சகக் கலிப்பா
4. உறழ் கலிப்பா

எனக் கலிப்பா நான்கு வகைப்படும்.

**ஒத்தாழிசைக் கலிப்பா :**

1. நேரிசை யொத்தாழிசைக் கலிப்பா
2. அம்போதரங்க ஒத்தாழிசைக் கலிப்பா
3. வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பா

என மூவகைப்படும்.

4. வெண் கலிப்பா—ஒருவகையே.

**கொச்சகக் கலிப்பா :**

5. தரவு கொச்சகக் கலிப்பா
6. தரவிணைக் கொச்சகக் கலிப்பா
7. சிஃறாழிசைக் கொச்சகக் கலிப்பா
8. பஃறாழிசைக் கொச்சகக் கலிப்பா
9. மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா

என ஐந்து வகைப்படும்.

10. உழற் கலிப்பா—ஒருவகையே.

எனக் கலிப்பாப் பத்து வகைப்படும்.

இனம் : 1. கலித்தாழிசை
2. கலித்துறை
3. கலிவிருத்தம்

எனக் கலிப்பாவின் இனம் மூன்று வகைப்படும்.

**கலிப்பாவின் இலக்கணம்**

கலிப்பாவில், தேமா, புளிமா என்னும் மாச்சீர் இரண்டும், கருவிளங்கனி, கூவிளங்கனி என்னும் விளங் கனிச்சீர் இரண்டும் அல்லாத ஏனை எட்டுச் சீரும் வரும். ஏழு தளைகளும் வரும். எனினும், பெரும்பாலும் கலித் தளையே வரும். அளவடியே பெரும்பான்மை வரும்.

**கலிப்பாவின் உறுப்புக்கள் :**

1. தரவு
2. தாழிசை
3. அராகம்
4. அம்போதரங்கம்
5. தனிச்சொல்
6. சுரிதகம்

என்னும் ஆறும் கலிப்பாவின் உறுப்புக்கள் ஆகும்.

### 1. தரவு

இது கலிப்பாவின் முதலுறுப்பு. தரவு, எருத்து என்பன ஒருபொருட் சொற்கள். எருத்து – பிடரி; இங்கு தலை.

### 2. தாழிசை

இது பாட்டின் இரண்டாவது உறுப்பு. தாழம்பட்ட ஓசையை உடையது – தாழிசை. தாழிசை, இடைநிலைப் பாட்டு என்பன ஒருபொருட் சொற்கள்.

### 3. அராகம்

அராகம் - இசை. இது முடுகி வரும். **அராகம்** என்னும் தனித் தமிழ்ச் சொல்லே முதலெழுத்தை இழந்து, **ராகம்** என வடசொல் வடிவு பெற்றுப் பின் **இராகம்** என வழங்கி வருகிறது. அராகம், வண்ணகம், முடுகியல், அடுக்கியல் என்பன ஒருபொருட் சொற்கள்.

### 4. அம்போதரங்கம்

தரங்கம் - கடலலை. அலைபோல் சுருங்கி வருவதால் இப் பெயர் பெற்றது. அம்போதரங்கம், அசையடி, பிரிந்திசைக்குறள், சொற்சீரடி, எண் என்பன ஒரு பொருட் சொற்கள்.

| | | | |
|---|---|---|---|
| எண் : | ஈரடி யிரண்டு | — பேரெண் | — தலையெண் |
| | ஓரடி நான்கு | — அளவெண் | — இடையெண் |
| | முச்சீர் எட்டு | — இடையெண் | |
| | இருசீர் பதினாறு | — சிற்றெண் | |
| | இருசீ ரெட்டு | — | கடையெண் |
| | ஒருசீர் பதினாறு | — | சிற்றெண் |

இவ்விரு வகையிலும் வழங்கும். அடி - அளவடி.

### 5. தனிச்சொல்

பொருட் டொடர்புடையதாய், ஓர் அசை அல்லது சீர் தனித்து வருவதால் **தனிச்சொல்** எனப்பட்டது. தனிச்சொல், விட்டிசை, கூன், தனிநிலை, அடைநிலை என்பன ஒருபொருட் சொற்கள்.

### 6. சுரிதகம்

இது பாட்டினை முடிக்கும் உறுப்பு. சுரிதகம், அடக்கியல், வாரம், வைப்பு, போக்கு, போக்கியல் என்பன ஒருபொருட் சொற்கள். **சுரிதகம் - வெண்பாவாகவும், ஆசிரியமாகவும் வரும்.**

இப் பெயர்வேறுபாடுகள் பழந்தமிழ் நூல்களில் பயில்வன. இவற்றை மனப்பாடஞ் செய்க. இவ்வுறுப்புக்களின் இயல்பினை எடுத்துக்காட்டிற் கண்டு தெளிக.

### கொச்சகக் கலிப்பா

அளவடி நான்கு கலியோசை பெற்று வருவது கொச்சகக் கலிப்பா எனப்படும். இது **கொச்சகம்** எனவும் வழங்கும். நான்கடியும் ஓரெதுகையாய் வரவேண்டும்

**காட்டு :**

'' செல்வப்போர்க் கதக்கண்ணன் செயிர்த்தெறிந்த சினவாழி
முல்லைத்தார் மறமன்னர் முடித்தலையை முருக்கிப்போய்
எல்லைநீர் வியன்கொண்மூ இடைநுழையு மதியம்போல்
மல்லலோங் கெழில்யானை மருமம்பாய்ந் தொளித்ததே ''

இவ் வளவடிகள் நான்கும் பொழிப்பு மோனை பெற்றுள்ளமை காண்க. முதல் இரண்டடிகள் மேற்கதுவாய் மோனை பெற்றுள்ளன எனினும், பொழிப்புமோனை கொள்ளுதலே கொச்சகத்திற்குச் சிறப்பு.

### கட்டளைக் கலிப்பா

தேமா, புளிமா என்னும் மாச்சீரை முதற்சீராக உடைய நாற்சீரடி, முதலசை நேரசையாயின் – தேமாவாயின்-பதினோரெழுத்தும்,முதலசை நிரையசையாயின்–புளிமாவாயின் – பன்னிரண் டெழுத்தும் பெற்று, இது ஓர் அரையடியாய், இத்தகைய அரையடி இரண்டு கொண்ட அடி நான்கு வருவன **கட்டளைக் கலிப்பா** எனப் படும். எழுத்தெண்ணும்போது ஒற்று நீக்கி எண்ண வேண்டும். இது கட்டளைக்கலித்துறைக்கும் ஒக்கும். எழுத்தெண்ணிப் பாடுவதால் இது இப்பெயர் பெற்றது. கட்டளை – அளவு.

**19. மாச்சீர் முதல நாற்சீ ரடியே**
**நேர்பதி னொன்றாய் நிரைபன் னிரண்டாய்**

எழுத்துடை யரையடி யிணைந்தடி நான்கு
கவினுற வருவது கட்டளைக் கலியே.

இதை மனப்பாடஞ் செய்க.

**காட்டு :**

" மனைவி மக்களும் மாண்டு மறைந்தனர்
வாழ்ந்த வீடுங் குடியு மிழந்தனன்
இனிய நட்பினர் யாவரு மேகினர்
ஏழை யாண்டியே காங்கியு மாயினேன்
எனையு மிந்நிலை கண்டனை யின்னுமிங்
கின்ன லேது மிழைத்திட வுள்ளதோ
உனையு மன்னையென் றேதி யழைத்திடேன்
உலகெ லாந்தருந் தேவிகா மாட்சியே "

—கவிமணி

'மனைவி......மறைந்தனர்' என்பது நிரையசையை முதலில் உடைய அரையடி. 'வாழ்ந்த......மிழந்தனன்' என்பது நேரசையை முதலில் உடைய அரையடி. முதலரையடியில் பன்னிரண் டெழுத்தும், இரண்டாவது அரையடியில் பதினொரெழுத்தும் இருத்தலை எண்ணியறிக. இது எண்சீர்க் கழிநெடிலடி நான்குடைய தெனினும், எழுத்தெண்ணிப் பாடுவதால், ஆசிரிய விருத்தம் ஆகாது.

## கலித்தாழிசை

குறளடி முதல் கழிநெடிலடி யீறாக அளவொத்த இரண்டடிகள் வருவன கலித்தாழிசை எனப்படும். இது வண்ண வோசையுடன் இருக்கும். இக் கலித்தாழிசைகளாலே பாட வேண்டும் என்பது பரணி என்னும் பனுவலின் இலக்கணம். வண்ணம் – சந்தம். குறள்வெண் செந்துறை வண்ணம்பட வருவதில்லை.

**காட்டு:** "அடப்படப்பொரு தமரர்தம்படை
படப்படப்ரசா பதிபடைக்கவே"
—தக்கயாகப் பரணி

இது குறளடி யிரண்டான் வந்த கலித்தாழிசை.

"பொருபுலி புலியொடு சிலைத்தபோல்
பொருபட ரொடுபடர் சிலைக்கவே
அரியினொ டரியினம் அடர்ப்பபோல்
அரசரு மரசரு மடர்க்கவே" —கலிங்கத்துப் பரணி

இதுஅறுசீர்க் கழிநெடிலடியான் வந்த கலித்தாழிசை.

"மருப்பொடு மருப்பெதிர் பொருப்பிவை யெனப்பொரு
மதக்கரி மருப்பி னிடையே
நெருப்பொடு நெருப்பெதிர் சுடர்ப்பொறி தெறித்தெழ
நிழற்கொடி தழற்க துவவே"
—தக்கயாகப் பரணி

இது எழுசீர்க் கழிநெடிலடியான் வந்த கலித் தாழிசை.

கலிங்கத்துப் பரணி, தக்கயாகப் பரணி முதலிய பரணிப் பனுவல்களில் கலித்தாழிசையின் வகைகளைப் பயின்றறிக.

**குறிப்பு:** மற்றைக் கலிப்பாக்களின் இலக்கணத்தை இரண்டாம் பாகத்தில் காண்க.

## கலித்துறை

நெடிலடி நான்கு வருவன கலித்துறை. நெடிலடி - ஐஞ்சீரடி.

**காட்டு:**

"எறிந்த வேலினைக் கண்டுமே விழித்தகண் ணிமைப்பின்
புறந்த ருதலிற் பிறிதிலை யாதலாற் புதல்வா!
பிறந்த நாளினும் பெரிதியா னுவந்திடப் பெயர்ந்து
சிறந்த வீரனாய் வருகவென் பாளொரு சினத்தாய்"

இக் கலித்துறை யடிகளில் முதற்சீரினும் ஐந்தாஞ் சீரினும் மோனை வந்துளது. கலித்துறை இவ்வாறே வர வேண்டும்.

"தாயோ துஞ்சாள், நோயறி யாவத் தாய்துஞ்சின்
நாயோ துஞ்சா, நிலவொடு பொல்லா நாய்துஞ்சின்
வாயோ துஞ்சாக் காவலர் துஞ்சின் மலர்துஞ்சும்
போயே தொலையென் றுளது முண்மைப் பொருளன்றே"

இது அவ்வாறே மோனை வந்த வேறுரோசை யுடைய கலித்துறை.

**குறிப்பு:** கலித்துறைகளைச் சிந்தாமணி, பெரியபுராணம் முதலிய தமிழ் நூல்களில் கண்டு பயில்க.

### கட்டளைக் கலித்துறை

எழுத்தெண்ணிப் பாடும் கலித்துறை கட்டளைக் கலித்துறை எனப்படும். எழுத்தெண்ணிப் பாடுவதால், இது அப் பெயர் பெற்றது.

கட்டளைக் கலித்துறையாவது – நெடிலடி நான்காய், அவ் வடிகளின் முதற்சீர் நான்கும் வெண்டளை பொருந்தி, கடையொரு சீரும் கருவிளங்காய், கூவிளங்காய்ச் சீர்களில் ஒன்றாக, நேரசையை முதலாக உடைய அடியொன்றுக்குப் பதினாறு எழுத்தும், நிரையசையை முதலாகவுடைய அடியொன்றுக்குப் பதினேழெழுத்தும் உடையதாய், ஏகாரத்தால் முடியும். எழுத் தெண்ணும் போது ஒற்றுநீக்கி எண்ணவேண்டும்.

**20. நேர்நிரை முதல நெடிலடி நான்காய்,**
**முதற்சீர் நான்கும் வெண்டளை பொருந்தி,**
**கடையொரு சீரும் விளங்கா யாகி,**

**நேர்பதி னாறாய் நிரைபதி னேழாய்**
**ஏகா ரத்தா லிறுங்கலித் துறையே.**

இதை நன்கு மனப்பாடம் செய்க.

ஐஞ்சீருடைய நெடிலடியின் முதற்சீர் நான்கும் பெரும்பாலும் ஈரசைச் சீராகவே வரும். சிறுபான்மை தேமாங்காய் புளிமாங்காய்ச் சீர்கள் வரும். விளங்காய்ச் சீர்கள் வரப்பெறா. ஈற்றுச்சீர் மிகச் சிறுபான்மை தேமாங்கனி புளிமாங்கனியாக வரும்.

தளை கொள்ளும்போது, வெண்பாவிற் போல ஓரடியின் இறுதிச்சீர் அடுத்த அடியின் முதற்சீரோடு வெண்டளை பொருந்தி வரவேண்டுமென்பதில்லை. அவ்வாறு கொள்ளின், நிரையசையை முதலாகவுடைய கட்டளைக் கலித்துறையில் காய்ச்சீர் முன் நிரை வந்து கலித்தளையாகுமென்க.

**காட்டு :**

"அள்ளிக் கொடுக்கின்ற செம்பொனு மாடையும் ஆதரவாக்
கொள்ளிக்கும் பட்ட கடனுக்கு மென்னைக் குறித்ததல்லான்
துள்ளித் திரிகின்ற காலத்தி லேயென் துடுக்கடக்கிப்
பள்ளிக்கு வைத்தில னேதந்தை யாகிய பாதகனே"

இது நேரசையை முதலாகவுடைய கட்டளைக் கலித்துறை. ஒவ்வோ ரடியிலும் பதினாறெழுத்து இருத்தலை எண்ணிப் பாருங்கள். '**கொடுக்கின்ற, கடனுக்கு, திரிகின்ற**' என்பன புளிமாங்காய்ச் சீர்கள். '**காலத்தி, னேதந்தை**' என்பன தேமாங்காய்ச் சீர்கள். முதலடியினும் ஈற்றடியினும் ஈற்றுச்சீர் கூவிளங்காய். இடையிரண்டடியினும் ஈற்றுச்சீர் கருவிளங்காய். முதற்சீர் நான்கும் வெண்டளை பிழையாது வருகிறதா என்று அலகிட்டுப் பாருங்கள். முதற்சீரினும் ஈற்றுச் சீரினும் மோனை வந்துளது.

" வலம்புரி போற்கொடை வாணன்றென் மாறை
மழைவளர்பூஞ்
சிலம்புறை சூர்வந்து தீண்டின போலொளி
தேம்பியிவ்வா
றுலம்புனை தோளுநின் னுள்ளமும் வாடி
யுருகிநின்று
புலம்புவ தென்னைகொல் லோசொல்ல வேண்டும்
புரவலனே "

இது நிரையசையை முதலாகவுடைய கட்டளைக் கலித்துறை. அடியொன்றுக்குப் பதினேழெழுத்து வந்திருத்தலை எண்ணி யறிக. நிரையசையில் இரண்டெழுத்துள்ளதால் ஓரெழுத்து அதிகமாயிற்று.

திருக்கோவையார், தஞ்சைவாணன் கோவை முதலிய கோவை நூல்களிலும், யாப்பருங்கலக்காரிகையிலும், கட்டளைக் கலித்துறைகளைப் படித்துப் பயிலுக.

## கலிவிருத்தம்

துள்ளலோசை யின்றி அளவடி நான்கு வருவன கலிவிருத்தம். பெரும்பாலும் இயற்சீரான் வரும்.

**காட்டு :**

" மூவர் மன்னர் முறையொடு முன்புதம்
ஆவி யென்ன அருமையிற் போற்றிய
நாவின் மீது நடம்பயில் நாணயத்
தாவில் நற்றமிழ்த் தாயினைப் போற்றுவாம் "

இது துள்ளலோசை யின்றி வந்திருத்தல் காண்க. இவ்வாறு கலிவிருத்தம் பொழிப்பு மோனையுடன் வர வேண்டும். வெவ்வேறு ஓசையையுடைய கலிவிருத்தங்களைக் காவிய நூல்களிற் பயிலுக.

## பயிற்சி

1. கலிப்பாவில் வாராத சீர்கள் யாவை?

2. கலிப்பா எத்தனை வகை தொகை பெறும்?

3. கலிப்பாவின் உறுப்புக்கள் யாவை?

4. சுரிதகம், தாழிசை—இவற்றின் வேறு பெயர்கள் யாவை?

5. எருத்து, அடுக்கியல், விட்டிசை—இவை எவ் வெவற்றின் மறு பெயர்கள்?

6. எண் என்பது என்ன? பேரெண், சிற்றெண் யாவை?

7. கொச்சகக் கலிப்பா, கலிவிருத்தம்—ஒற்றுமை வேற்றுமை என்ன?

8. கட்டளைக் கலிப்பாவின் இலக்கணம் என்ன?

9. எழுத் தெண்ணும்போது ஒற்றுக்களின் மதிப் பென்ன?

10. கலித்தாழிசையின் இலக்கணம் என்ன? அது எந்நூற்கு உரிமை யுடையது?

11. கட்டளைக் கலித்துறையின் இலக்கணம் யாது?

12. கட்டளைக் கலித்துறையின் ஓரடியில் நாம் தெரிந்து கொள்ளவேண்டிய தென்ன?

13. கட்டளைக் கலித்துறை, கட்டளைக் கலிப்பா— ஒற்றுமை வேற்றுமை என்ன?

## வஞ்சிப்பாவும் அதன் இனமும்

வஞ்சிப்பா: 1. குறளடி வஞ்சிப்பா
2. சிந்தடி வஞ்சிப்பா

என வஞ்சிப்பா இருவகைப்படும்.

இனம் : 1. வஞ்சித்தாழிசை
2. வஞ்சித்துறை
3. வஞ்சி விருத்தம்

என வஞ்சப்பாவின் இனம் மூன்று வகைப்படும்.

## வஞ்சிப்பா

குறளடியானும் சிந்தடியானும் வந்து, தனிச்சொல் லும், சுரிதகமும் பெறும் வஞ்சிப்பா. பெரும்பாலும் கனிச் சீர்களும் இருவகை வஞ்சித்தளையும் வரும். சிறுபான்மை பிற சீரும் தளையும் வரும்.

**காட்டு : குறளடி வஞ்சிப்பா**

" பூந்தாமரைப் போதலமர
தேம்புனலிடை மீன்றிரிதரும்
வளவயலிடைக் களவயின்மகிழ்
வினைக்கம்பலை மனைச்சிலம்பவும்
மனைச்சிலம்பிய மணமுரசொலி
வயற்கம்பலைக் கயலார்ப்பவும்
நாளும்
மகிழும் மகிழ்தூங் கூரன்
புகழ்த லானுப் பெருவண் மையனே"

நாளும் என்பது தனிச்சொல். இரண்டடி ஆசிரியச் சுரிதகத்தான் முடிந்தது. அலகிட்டுப் பாருங்கள்.

## சிந்தடி வஞ்சிப்பா

" கொடிவாலன குருநிறத்தன குறுந்தாளன
வடிவாளெயிற் றழலுளையன வள்ளுகிரன
பணையெருத்தி னிணையரிமா னணையேறித்
துணையல்லாத் துறவுநெறிக் கிறைவனாகி

எயினடுவ ணினிதிருந் தெல்லோர்க்கும்
மயில்படுவினைப் பத்திமையிற் செப்பினேன்
புணையெனத்
திருவுறு திருந்தடி திசைதொழ
விரிவுறு நாற்கதி வீடுநனி யெளிதே"

புணையென-தனிச்சொல். இதுவும் இரண்டடி ஆசிரியச் சுரிதகத்தான் முடிந்தது. பணையெருத்தி-கருவிளங்காய். னணையேறி-புளிமாங்காய். செப்பினேன்-கூவிளம்.

**குறிப்பு:** வஞ்சியடிகளைப் பட்டினப்பாலையிற் காண்க.

## வஞ்சித்தாழிசை

குறளடி நான்கு ஒருபொருள்மேல் மூன்றடுக்கி வருவன வஞ்சித்தாழிசை எனப்படும். இது ஒருபொருள் மேல் மூன்றடுக்கி யல்லது தனித்து வாராது. குறளடி நான்கு தனித்து வருவன வஞ்சித்துறை.

**காட்டு:**

"பாட்டாளர் நலம்பேணுத்
தேட்டாள ராய்வாழ்வார்
மாட்டாத மரமென்ன
நாட்டாரால் நகையுண்பர்.

எளியவர்க் கிரங்காமல்
ஒளியராய் உறவாழ்வார்
துளியிலா விசும்பென்ன
வெளியரால் இளிவுண்பர்.

உழவர்தம் உழைப்புண்டு
விழவராய் மிகவாழ்வார்
இழவராம் இவரென்னக்
கிழவரால் இழிவுண்பர்"

இவை ஒருபொருள்மேல் மூன்றடுக்கி வந்தமையால் வஞ்சித்தாழிசை. இருசீரடி யாகையால் மோனை வர வேண்டு மென்பதில்லை.

### வஞ்சித்துறை

" மைசிறந்தன மணிவரை
கைசிறந்தன காந்தளும்
பொய்சிறந்தன காதலர்
மெய்சிறந்திலர் விளங்கிழாய் "

இரு குறளடி நான்கு தனித்து வந்ததால் வஞ்சித் துறை. ஒரு பொருள்மேல் மூன்றுவரின் வஞ்சித்தாழிசை யாகுமாகையால் இது தனித்தே வரும்.

### வஞ்சி விருத்தம்

சிந்தடி நான்கு வஞ்சி விருத்தம்.

**காட்டு :** " அருவி யாடி யருஞ்சுனை
மருவி யாடி மணிக்கதிர்
இருவி யாடி யிளங்கிளி
ஒருவி யோடி யுவப்பரே "

இது சிந்தடி நான்கு வந்ததால் வஞ்சி விருத்தம். முதற் சீரிலும் மூன்றும் சீரினும் மோனை வந்துள்ளமை காண்க.

### பயிற்சி

1. வஞ்சிப்பா எத்தனை வகைப்படும் ?
2. வஞ்சிப்பாவின் உறுப்புக்கள் யாவை?
3. வஞ்சி விருத்தத்திற்கும் வஞ்சித்துறைக்கு முள்ள வேறுபாடு யாது ?
4. வஞ்சித்துறைக்கும் வஞ்சித்தாழிசைக்கும் உள்ள வேறுபாடென்ன ?

## நீங்கள் அறிந்த பாவும் பாவினமும்

பா :

1. குறள் வெண்பா
2. நேரிசைச் சிந்தியல் வெண்பா
3. இன்னிசைச் சிந்தியல் வெண்பா
4. நேரிசை வெண்பா } அளவியல் வெண்பா
5. இன்னிசை வெண்பா } அளவியல் வெண்பா
6. நேரிசைப் பஃறொடை வெண்பா
7. இன்னிசைப் பஃறொடை வெண்பா
8. நேரிசைக் கலிவெண்பா
9. இன்னிசைக் கலிவெண்பா
10. நேரிசை யாசிரியப்பா
11. இணைக்குற ளாசிரியப்பா
12. நிலைமண்டில ஆசிரியப்பா
13. அடிமறிமண்டில ஆசிரியப்பா
14. கொச்சகக் கலிப்பா
15. கட்டளைக் கலிப்பா
16. கலித்தாழிசை
17. குறளடி வஞ்சிப்பா
18. சிந்தடி வஞ்சிப்பா

இனம்:

19. குறள்வெண் செந்துறை
20. ஆசிரிய விருத்தம்
21. கலித்துறை
22. கட்டளைக் கலித்துறை
23. கலிவிருத்தம்
24. வஞ்சித்தாழிசை
25. வஞ்சித்துறை
26. வஞ்சி விருத்தம்

இவற்றின் இலக்கணத்தினை மற்றொருமுறை திருப்பிப் படித்து நன்கு அறிந்துகொள்ளுங்கள். தமிழ் இலக்கியங்களில் இச் செய்யுட்களைப் படித்துப் பயிலுங்கள். பயிற்சி மிகமிக இன்றியமையாத தாகும்.

# 3. புதிய செய்யுட்கள்

**தொ**ல்காப்பிய உரையாசிரியர்களுள் ஒருவரான **பேராசிரியர்,** கொச்சகக் கலிப்பாவின் இலக்கணங் கூறும் தொல்காப்பியச் செய்யுளியல் 149–வது சூத்திரத்தின்,

"யாப்பினும் பொருளினும் வேற்றுமை உடையது"

என்னும் அடியின் இலக்கணத்தினுல் **தாழிசை, துறை, விருத்தம்** என்னும் பாவினங்களை அமைத்துள்ளார். அவ்வடியின் **புறனடையாய்** அமைந்தவையே **கும்மி, சிந்து** முதலிய புதிய செய்யுட்கள். கலிப்பா இசைப்பாவாகையால் இப் புதிய செய்யுட்கள் யாவும் இசைப்பாடல்களே யாகும்.

## 1. கும்மி

கும்மியாவது – வெண்டளை பிழையாத ஓரெதுகையுடைய எழுசீர்க் கழிநெடிலடி இரண்டு வருதல். அடியின் முதற்சீரினும் ஐந்தாஞ்சீரினும் மோனை வரவேண்டும். இயற்சீர் வெண்டளையும் வெண்சீர் வெண்டளையும் அல்லாத வேறு தளைகள் வருதல் கூடாது. ஈற்றுச்சீர் பெரும்பாலும் விளங்காய்ச்சீராக வரும். இது வெண்பாவின் இனமாகும்.

அது **இயற்கும்மி, ஒயிற்கும்மி** என இரண்டு வகைப்படும். முற்கூறிய இலக்கணப்படி அமைவது இயற்கும்மி எனப்படும்.

**காட்டு :**

"தேவர் சபைதனில் தேவேந்தி ரன்வந்து
தேவரைப் பார்த்தவ னேதுசொல்வான்
பூவுல கையாளு மன்னர் தனிலொரு
பொய்யுரை யாதரைக் கண்டதுண்டோ"

—**அரிச்சந்திரக் கும்மி**

இது இயற்கும்மி. வெண்டளை பிழையாது வந்திருத்தலை அலகிட்டறிக. 'ஏதுசொல்வான், கண்டதுண்டோ' என ஈற்றுச்சீர் கூவிளங்காய்ச் சீராக வந்திருத்தல் காண்க.

இயற்கும்மியின் நாலாஞ்சீரின் முதலசையைப் பிரித்து, மூன்றாஞ் சீருடன் கூட்டி, அந் நாலாஞ்சீரி லுள்ள மற்ற அசையைத் தனிச்சொல்லாகக் கொள்வது பெருவழக்கு. அங்ஙனங் கொள்ளுங்கால், மூன்றாஞ்சீரினும் ஈற்றுச்சீரினும் இயைபுத்தொடை அமைதல் சிறப்புடைத்து.

**காட்டு :**

" நல்லபண் டங்களைக் கண்டறி யோமொரு
நாளும் வயிறார உண்டறியோம்
அல்லும் பகலும் அலைந்திடு வோம்பசி
யாற வழியின்றி வாடிடுவோம்"

—கவிமணி

இதை,

" நல்லபண் டங்களைக் கண்டறியோம்—ஒரு
நாளும் வயிறார உண்டறியோம்
அல்லும் பகலும் அலைந்திடுவோம்—பசி
யாற வழியின்றி வாடிடுவோம் "

என அவ்வாறு பிரித்துக் கூட்ட, '**வோம்**' என ஈற்றில் இயைபுத்தொடை அமைந்தவாறு காண்க.

அரிச்சந்திரக் கும்மி, ஞானக் கும்மி, வாலைக் கும்மி முதலிய கும்மி நூற்களில் இயற்கும்மிப் பாடல்களைப் படித்துப் பயிலுக.

### ஒயிற்கும்மி

இரண்டாவதடியின் முதல் நான்குசீர் முடுகி வருதல் ஒயிற்கும்மி எனப்படும். அம் முடுகியலடி முதலடியின் மோனை யுடையதாக வரும். அம் முடுகியலின் மோனையாக

அடுத்த அரையடியின் முதற்சீர் வரும். முடுகுசீர்களில் வெண்டளை வரவேண்டும் என்பதில்லை.

**காட்டு:**

" தென்பரங் குன்றினில் மேவுங் குருபர
தேசிகன் மேற்கும்மிப் பாட்டுரைக்க
சிகரத்திரு மகரக்குழை
திகழுற்றிடு முமைபெற்றிடு
தில்லை விநாயகன் காப்பாமே"

—முருகர் ஒயிற்கும்மி

இதில், முடுகியலின் முதற்சீர், முதலடியின் முதற் சீரின் மோனை பெற்றுள்ளமை (தெ-சி) காண்க. காப் பாமே-தேமாங்காய்ச் சீர். இது சிறுபான்மை வரும்.

" மாவும் பலாவுங்கொய் யாவுமா ரஞ்சியும்
வன்னப் பழம்பழுக்கும்—மகிழ்வாய்த்
தின்னச் சுவையிழுக்கும்—மலர்ந்த
பூவுங் கனியும் பொழியுஞ்செந் தேனங்கு
போவா ரடிவழுக்கும் "

இஃதொருவகை ஒயிற்கும்மி. தனிச்சீ ரொழிந்தவை வெண்டளை பிழையாமல் வந்திருத்தலை அறிக. 'தின்ன' என்பது, 'வன்ன' என்பதன் எதுகை எடுப்பு.

**ஓரடிக் கும்மி**

இனி, கும்மியின் இலக்கணம் அமையப்பெற்ற எழுசீர்க் கழிநெடிலடி ஒன்றே பொருள் முற்றி வரின், அது **ஓரடிக் கும்மி** எனப்படும்.

**காட்டு :** " ஆளுடன் ஆளு முகையாம லேநீங்கள்
ஆளுக் கொருமுழந் தள்ளிநில்லும் "

" வக்காவும் கொக்கும் வருகுது பார்நல்ல
வங்கார சாமி குளந்தேடி "

இவை ஒற்றைக் கும்மியடிகள். முதற்சீரினும் ஐந் தாஞ் சீரினும் மோனை யமைந்துள்ளது.

" பாட்டுக் குகந்த படியிரு கையையும்
ஆட்டியொய் யாரமாய் ஆடிடுவோம் "

இது முதற்சீரினும் ஐந்தாஞ்சீரினும் எதுகைத் தொடை அமைந்துள்ளது. சிறுபான்மை இவ்வாறும் வரும்.

### பயிற்சி

1. கும்மியின் இலக்கணம் யாது?

2. கும்மியின் ஓரடியில் எந்தெந்தச் சீர்களில் மோனை வரும்?

3. ஓரடியில் தனிச்சொல் அமைப்பதெப்படி? அப் போது அவ்வடியின் சிறப்பென்ன?

4. கும்மி எத்தனை வகைப்படும்?

5. ஓரடிக் கும்மி என்பது யாது?

## 2. சிந்து

ஓரெதுகை பெற்ற இரண்டடிகள் அளவொத்து வருதல் **சிந்து** எனப்படும். இரண்டே யன்றி நான்கடிகள் ஓரெதுகையால் வருதலும் உண்டு.

ஓரடியின் மோனைத்தொடை எடுப்பின் முன்னும் பின்னும் உள்ள அரையடி இங்கு அடி எனவே வழங்கப் பெறும்.

**காட்டு :** " பூவும் வேண்டாமே—பழமும்
பொரியும் வேண்டாமே
மேவு முள்ளன்பே—தேவி
விரும்பும் நல்லமுதாம் " —கவிமணி

இச் சிந்தில்.

பூவும் வேண்டாமே—குறளடி.
பொரியும் வேண்டாமே—குறளடி.
பழமும்—தனிச்சொல்.

இது குறளடி முதல் எல்லா அடியானும் வரும். தளை வரையறை இல்லை.

மோனைத்தொடை எடுப்பின் முன்னும் பின்னும் உள்ள அடிகள் ஒத்து வருதல்-**சமநிலைச் சிந்து** எனவும், ஒவ்வாது வருதல் – **வியநிலைச் சிந்து** எனவும் பெயர் பெறும்.

'பூவும் வேண்டாமே, பொரியும் வேண்டாமே' என்னும் இரண்டும் குறளடியாக வந்ததால் இது **சமநிலைச் சிந்து**.

"பத்தி யினாலே—இந்தப்
பாரினி லெய்திடு மேன்மைகள் கேளடி"

இது முதலடி குறளடியாகவும், அடுத்த அடி அளவடியாகவும் வந்ததால் **வியநிலைச் சிந்து**.

முதலடியின் ஈற்றில் தனிச்சொல் பெற்றும் பெறாதும் வரும். மேல் எடுத்துக்காட்டிய சிந்துகள் தனிச்சொற் பெற்று வந்துள்ளமை காண்க.

**சமநிலைச் சிந்து**

1. குறளடி இரண்டு வருதல்—இருசீரிரட்டை
2. சிந்தடி யிரண்டு வருதல்—முச்சீரிரட்டை
3. அளவடி யிரண்டு வருதல்—நாற்சீரிரட்டை
4. நெடிலடி யிரண்டு வருதல்—ஐஞ்சீரிரட்டை
5. கழிநெடிலடி யிரண்டு வருதல்—அறுசீரிரட்டை,

எழுசீரிரட்டை, எண்சீரிரட்டை என, அவ்வச் சீர்த் தொகைப் பெயர் பெறும்.

குறிப்பு : குறளடி என்றது ஓரடியின் மோனைத் தொடை எடுப்பின் முன்னும் பின்னும் உள்ள, அதாவது தனிச்சொல்லின் முன்னும் பின்னும் உள்ள அரை அடியை என்பதை நினைவில் வையுங்கள்.

**வியனிலைச் சிந்து**

1. குறளடியும் சிந்தடியும் வருதல்—இருமுச்சீ ரிரட்டை
2. குறளடியும் அளவடியும் வருதல்—இருநாற்சீ ரிரட்டை
3. சிந்தடியும் அளவடியும் வருதல்—முந்நாற்சீ ரிரட்டை
4. சிந்தடியும் குறளடியும் வருதல்—முவ்விருசீ ரிரட்டை
5. அளவடியும் குறளடியும் வருதல்—நாலிருசீ ரிரட்டை
6. அளவடியும் சிந்தடியும் வருதல்—நாமுச்சீ ரிரட்டை

எனப் பெயர் பெறும். இவ்வாறே பிறவும் பெயர்பெறும்.

இவை ஒவ்வொன்றும் விருத்தம் முதலிய பாவினங்கள் போல வெவ்வேறு ஓசையுடையதாக வரும். **சிந்து இசைப் பாடல்** ஆகும்.

**காட்டு : சமனிலைச் சிந்து**

" ஆதி பகவனையே—பசுவே
அன்பாய் நினைப்பாயேல்
சோதி பரகதிதான்— பசுவே
சொந்தம தாகாதோ "

—இடைக்காட்டுச் சித்தர்

" நஞ்சுண்ண வேண்டாமோ—அகப்பேய்
நாயகன் தாள்பெறவே
நெஞ்சு மலையாதே—அகப்பேய்
நீயொன்று சொல்லாதே "

—அகப்பேய்ச் சித்தர்

" சின்னஞ் சிறுகிளியே—கண்ணம்மா
செல்வக் களஞ்சியமே
என்னைக் கலிதீர்த்தே—புவியில்
ஏற்றம் புரியவந்தாய்"

—பாரதியார்

இவை இருசீரிரட்டை; தனிச்சொற் பெற்று வந்தன.

" ஆடுமயி லேநட மாடுமயிலே—எங்கள்
ஆதியணி சேடனைக்கொண் டாடுமயிலே
கூடுபோகு முன்னங்கதி கொள்ளுமயிலே—என்றும்
குறையாமல் மோனநெறி கூடுமயிலே"

—இடைக்காட்டுச் சித்தர்

" எல்லை யறியாப்பெருங் கடலே—நீதான்
இரவும் உறங்காயோ கடலே
அல்லும் பகலுமலை கடலே—உனக்
கலுப்பு மிலையோகருங் கடலே"

—கவிமணி

" ஓடி விளையாடு பாப்பா—நீ
ஓய்ந்திருக்க லாகாது பாப்பா
கூடி விளையாடு பாப்பா—ஒரு
குழந்தையை வையாதே பாப்பா"

—பாரதியார்

" ஊருக்கு நல்லது சொல்வேன்—எனக்
குண்மை தெரிந்தது சொல்வேன்
சீருக்கெல் லாமுத லாகும்—ஒரு
தெய்வந் துணைசெய்ய வேண்டும்"

—பாரதியார்

இவை வெவ்வே றோசையான் வந்த முச்சீரிரட்டை. இடையிரண்டு சிந்தும் ஓரிசை.

" முருகு சந்தனக் குழம்பு பூசுவார்—விரகத்தீயை
மூட்டி மூட்டி விசிறி வீசுவார்
கருகு தேயுடல் உருகு தேயென்பார்—விரிதற்பூவும்
கரியு தேமுத்தம் பொரியு தேயென்பார் "

—குற்றாலக் குறவஞ்சி

" எல்லோரும் ஒன்றென்னும் காலம் வந்ததே—பொய்யும்
ஏமாற்றுந் தொலைகின்ற காலம் வந்ததே—இனி
நல்லோர் பெரியரென்னும் காலம் வந்ததே—கெட்ட
நயவஞ்சக் காரருக்கு நாசம் வந்ததே "

—பாரதியார்

" நாதர்முடி மேலிருக்கும் நாக பாம்பே
நச்சுப்பல்லை வைத்திருக்கும் நல்ல பாம்பே
பாதலத்தில் குடிபுகும் பைகொள் பாம்பே
பாடிப்பாடி நின்றுவிளை யாடு பாம்பே "

—பாம்பாட்டிச் சித்தர்

இவை நாற்சீரிரட்டை. முதற் சிந்து வேறோசை. இரண்டாவது நாற்சீரிரட்டை ஈற்றில், 'இனி' என்னும் தனிச் சீர் பெற்றது. மூன்றாவது தனிச்சீர் பெறவில்லை.

" இருண்ட மேகஞ்சுற்றிச் சுருண்டு சுழியெறியுங்
கொண்டையாள்—குழை
ஏறி யாடிநங்கை சூறை யாடும்விழிக்
கெண்டையாள்
திருந்து பூமுருக்கி னரும்பு போலிருக்கு
மிதழினாள்—வரிச்
சிலையைப் போல்வளைந்து பிறையைப் போலிருக்கு
நுதலினாள் "

—குற்றாலக் குறவஞ்சி

" உலகு தொடங்கிய நாள்முத லாகநஞ் சாதியில்—புகழ்
ஓங்கிநின் றுரித் தருமனைப் போலெவர் மாமனே
இலகு புகழ்மனு வாதி முதுவர்க்கும் மாமனே—பொருள்
ஏற்றமு மாட்சியு மிப்படி யுண்டுகொல் மாமனே "

—பாரதியார்

இவை ஐஞ்சீரிரட்டை; வெவ்வே றோசையான் வந்தன.

" ஆதிக்கு முன்ன மநாதியு மென்னடி சிங்கி—அது
அந்தக் கருக்குழி முந்த விருளறை சிங்கா "

ஐஞ்சீரிரட்டை தனித்து வந்தது.

" முப்பொரு ளென்றுநீ முன்சொன்ன தாரடி சிங்கி—அது
அப்பனு மாயு மநாதையு மாமடா சிங்கா "

இது ஐஞ்சீரிரட்டை; எதுகைத்தொடையான் வந்தது.

" ஆசை கொண்டு பாரில் வீழ்ந்தாள்
நேச மாமென்பார்—விளை
யாடாள் பாடாள் வாடா மாலை
சூடாள் காணென்பார்
பேசொ ணாதோ மோச மென்ன
மோச மோவென்பார்—இது
பேயோ வென்பார் பித்தோ வென்பார்
மாய மோவென்பார் "

—குற்றாலக் குறவஞ்சி

இது அறுசீரிரட்டை. ஒவ்வோ ரரையடியும் முதற்சீரினும் ஐந்தாஞ்சீரினும் மோனைக்குப் பதில் எதுகை (ஆசை - நேச) பெற்றுள்ளது.

வியனிலைச் சிந்து

" ஓமெனப் பெரியோர்கள்—என்றும்
ஓதுவ தாய்வினை மோதுவதாய்
தீமைகள் மாய்ப்பதுவாய்—துயர்
தீர்ப்பது வாய்நலம் வாய்ப்பதுவாய் "

—பாரதியார்

இது இருமுச்சீ ரிரட்டை.

" பிள்ளைப் பிராயத்திலே—அவள்
பெண்மையைக் கண்டு மயங்கிவிட் டேனங்கு
பள்ளிப் படிப்பினிலே—மதி
பற்றிட வில்லை யெனினுந் தனிப்பட "

—பாரதியார்

இது இருநாற்சீ ரிரட்டை.

" தின்னப் பழங்கொண்டு வருவான்—பாதி
தின்கின்ற போதிலே தட்டிப் பறிப்பான்
என்னப்ப னென்னைய னென்றால்—அதை
எச்சிற் படுத்திக் கடித்துக் கொடுப்பான் "

—பாரதியார்

இது முந்நாற்சீ ரிரட்டை.

" முன்னை யிலங்கை யரக்கர் அழிய
முடித்தவில் யாருடைவில்—எங்கள்
அன்னை பயங்கரி பாரத தேவிநல்
ஆரிய ராணியின்வில் "

—பாரதியார்

இது நாலிருசீ ரிரட்டை; இரட்டையின் ஈற்றில் தனிச்சொற் பெற்றது.

" ஆட்டுக் கூட்டங்களை அண்டும் புலிகளை
ஓட்டியே யூதுகுழல்—கோனே
ஓட்டியே யூதுகுழல் "

—இடைக்காட்டுச் சித்தர்

இது பின்னடி மடக்கி வந்த நாலிருசீ ரிரட்டை. பின்னிருசீர் எதுகைத் தொடையான் வந்தது.

" அத்தின புரமுண்டாம்—இவ்
வவனியி லேயதற் கிணையிலையாம்
பத்தியில் வீதிகளாம்—வெள்ளைப்
பனிவரை போற்பல மாளிகையாம்
முத்தொளிர் மாடங்களாம்—எங்கும்
மொய்த்தளி சூழ்மலர்ச் சோலைகளாம்
நத்தியல் வாவிகளாம்—அங்கு
நாடு மிரதிநிகர் தேவிகளாம் "

—பாரதியார்

இது நாலடியான் வந்த இருமுச்சீ ரிரட்டை.

இன்னும்வேறுபட வருவனவெல்லாம் சித்தர் பாடல், குறவஞ்சி, பாரதியார் பாடல் முதலியவற்றில் படித்துப் பயிலுக.

இன்னும்,

1. காவடிச் சிந்து
2. தங்கச் சிந்து
3. நொண்டிச் சிந்து
4. வழிநடைச் சிந்து
5. ஆனந்தக் களிப்பு
6. தெம்பாங்கு

முதலியன வெல்லாம் இவ் விலக்கணத்தால் அமைந்த சிந்துகளேயாம். நம் முன்னோர்கள், அவற்றை யெல்லாம் நன்கு பாடிப் படித்துக் கருத்துணர்வோடு கவித் திறனும் பெற்று வந்தனர். அவற்றை யெல்லாம் திரட்டித் திருத்தமாக வெளியிட்டுத் தமிழை வளர்ப்பது தமிழறிஞர்கள் கடமையாகும். **நாடோடிப் பாடல்கள்** என்பனவும் சிந்துகளேயாகும். தற்கால இளங் கவிஞர்கள் அவற்றை யெல்லாம் கற்றுக் கவிபாடிப் பழகுதல் வேண்டும்.

அவற்றுள் ஒரு சில வருமாறு :

## 1. காவடிச் சிந்து

" தெள்ளுதமி ழுக்குதவு சீலன்—துதி
செப்பண்ணு மலைக்குமநு கூலன்—வளர்
செழியப் புகழ்விளைத்த
கழுகு மலைவளத்தைத்
தேனே—சொல்லு—வேனே "

—அண்ணாமலை ரெட்டியார்

இது முச்சீரிரட்டைக்குப் பின், முடுகும், தனிச்சீர் எடுப்பும் உடையன. 'சீலன் - கூலன், தேனே - வேனே' என இயைபுத்தொடை நன்கு அமைந்துள்ளமை காண்க. அண்ணாமலை ரெட்டியார் காவடிச் சிந்தினைப் படித்துக் காவடிச் சிந்தின் இலக்கணத்தை அறிக.

## 2. தங்கச் சிந்து

" மெய்ஞ்ஞானத் தங்கம் மேலான தங்கம்
அஞ்ஞானத் தங்கமெல்லாம்—என் தங்கமே
ஆகாத தங்கமடி "

இது நாலிருசீ ரிரட்டை எடுப்பு. எதுகைத் தொடையால் அமைந்தது. 'என் தங்கமே' என்பது தனிச்சொல்.

" செங்கரும்பை வாங்கித் திருக்கையிலே தாங்கி
அங்கசவே ளோட அவன்செயலைப் பாட
மங்கையர்கள் கூடி மணுளருட ணுடித்
தெங்கிளநீ ருண்பாரடி—என் தங்கமே
தெருவில் திரிவாரடி "

இது மூன்றடி நாலிருசீ ரிரட்டை எடுப்பு; ஓரெதுகையான் அமைந்தது.

## 3. நொண்டிச் சிந்து

"மாதவர் குலத்துதித்த—நல்
மாட்டிடையர் ஆச்சிசேதி கேட்டிடுவீரே
ஆதவன் மரபினர்கள்—நன்கு
அரசு புரியுமுயர்.புரிசைகளார்

காவிரிப்பூம் பட்டினமாம்—அதில்
கனத்த வணிகர்செல்வ இனத்துதித்த
மேவியமா சாத்துவனென்பார்—பெற்று
மேவளர்த்த மைந்தனென்பேர் கோவலனென்பார்"

—கோவல நாடகம்

இது இருமுச்சீ ரிரட்டை. இவ்வாறு எதுகைத் தொடையாய், முச்சீர் பொழிப்பெதுகையாய்த் தொடர்ந்து வரும். முச்சீர் பொழிப்பெதுகை யின்றியும் வரலாம்.

## 4. வழிநடைச் சிந்து

"கோபுர மீதுபுருச் சோடி—நம்மைக்
கூப்பிடுதே வாவெனக்
குமரனைக்கொண் டாடி
நூபுர வேதையவித் தோடி—கதிர்
நூலென விடந்தொறு
நுடங்கிடைநீ வாடி"

—வெள்ளகோவில் வழிநடைச் சிந்து

இது முந்நாற்சீ ரிரட்டை. ஒருவன், ஒருத்திக்கு வழியிலுள்ள காட்சிகளைக் கூறிக்கொண்டு நடப்பது போல் செய்வது.

## 5. ஆனந்தக் களிப்பு

"நீர்மேல் குமிழியிக் காயம்—இது
நில்லாது போய்விடும் நீயறி மாயம்

பார்மீதில் மெத்தவும் நேயம்—சற்றும்
பற்று திருந்திடப் பண்ணுமு பாயம் ".
—கடுவெளிச் சித்தர்

இது முந்நாற்சீ ரிரட்டை.

## 6. தெம்பாங்கு

" வாழையடி உன்கூந்தல்
வயிரமடி பற்காவி
ஏழையடி நானுனக்கு
இரங்கலையோ உன்மனது
நன்னுன நானு நனநனனு
தன்னுன தானு தனனதான தானு "
—இன்பரசத் தெம்பாங்கு

இது இருசீரிரட்டை. எதுகைத்தொடையான் வந்தது. 'நன்னுன' என்பது தெம்பாங்கு எடுப்பு. இஃதின்றியும் வரும்.

" சாரட்டு வண்டிக்காரா
சலங்கைபோட்ட மாட்டுக்காரா
மாட்டை யடிக்காதடா
வருகிறேனுன் கூண்டுக்குள்ளே "

இது முதலடியின் ஈற்றுச்சீர் மடக்காக, இரண்டாவதடி வந்தது. எதுகைத்தொடையான் வருவதே சிறப்பு.

வளையல் சிந்து, சேவற் பாட்டு, புருப் பாட்டு, குள்ளத்தாராச் சிந்து, கொலைச் சிந்து, ஏற்றப் பாட்டு, ஏசல், தாலாட்டு, ஒப்பாரி, உடுக்கைப் பாட்டு, கிளிக் கண்ணி, எக்காலக்கண்ணி, பலசரக்கு ஏலப்பாட்டு, லாவணி முதலியன வெல்லாம் சிந்துவகையே யாகும். எல்லாம் முற்கூறிய சிந்தின் இலக்கணத்தில் அமையும்.

**குறிப்பு:** ஒரு சிந்துப் பாட்டில் வரும் ஒவ்வொரு சிந்தும் **கண்ணி** எனப்படும்.

### பயிற்சி

1. சிந்தின் இலக்கணம் என்ன ?
2. சிந்து எத்தனை வகைப்படும் ?
3. சமனிலை, வியனிலை—பொருளென்ன ?
4. இருசீர் இரட்டை என்பது யாது ?

## வண்ணம்

ஓரடியின் ஒரு சீரின் ஓரசை என்ன எழுத்தாக வருகிறதோ, அவ்வாறே, அடுத்த அடியின் அதே சீரின் அவ்வசை அந்த எழுத்தாகவே வருவது - **வண்ணம்** எனப்படும். வண்ணம் – சந்தம்.

அதாவது, ஓரடியின் முதற்சீரின் முதலசை, குறில், நெடில், வலி, மெலி, இடை இவற்றில் ஒன்ருக வரின், அடுத்த அடியின் முதற்சீரின் முதலசையும் அவ்வெழுத்தே வருதல். இவ்வாறே மற்ற சீர்களும் அசைகளும் வருதல். முதலடியும் மூன்ருவதடியும் ஒரு மோனையாக வரவேண்டும். பலஅடிகள் வருதலும் உண்டு.

காட்டு :

" முத்தைத்தரு பத்தித் திருநகை
அத்திக்கிறை சத்திச் சரவண
முக்கட்பக வற்குச் சுருதியின்—முடிவாகி "

—அருணகிரியார் திருப்புகழ்

இதில், மூன்றடியினும் முதற்சீரில் முதலெழுத்துக் குறில், இரண்டாவது வல்லெழுத்து, மூன்ருவது குறில், நான்காவது வலி, ஐந்தாவது குறிலிணை ஆக வந்திருத்தல் காண்க.

இரண்டாஞ் சீர்களில் இரு குற்ருெற்றுக்கள். ஒற்று வல்லொற்று. மூன்ருஞ் சீர்களில் இரு குறிலிணைகள்.

தை, றை, கை — என்னும் ஐகாரங்கள் ஐகாரக் குறுக்கம். வலி, மெலி என்பன ஒற்றுக்களே. உயிர்மெய் யில், வல்லின உயிர்மெய், மெல்லின உயிர்மெய் என்ப தில்லை.

" மன்றலங் கொந்துமிசை
தந்தனந் தந்தவென
வண்டினங் கண்டுதொடர்—குழல்மாதர் "

—திருப்புகழ்

குறிலும் குறிலிணையும் மெல்லினமெய் பெற்று வந்தன.

" மருவே செறித்த
குழலார் மயக்கின்
மதன கமத்தின்—விரகாலே " —திருப்புகழ்

மூன்றடியினும் முதற்சீரின் முதல் குறிலிணை. அடுத் தது நெடில். இரண்டாஞ் சீரின் முதல் குறிலிணை. அடுத் தது வல்லொற்று. இறுதி குறில்.

அருணகிரிநாதர் திருப்புகழைப் படித்து வண்ணங் களின் வகைகளை அறிந்துகொள்க.

**பண்ணத்தி**

அரிச்சந்திர நாடகம், மார்க்கண்ட நாடகம் முதலிய நாடக நூல்கள், இசைப்பாடலும் உரைநடையும் ஒன்றன் பின் ஒன்று தொடர்ந்து வருவதாகும். இவற்றுள் இசைப் பாடலே முதன்மை யுடையதாகும். கீர்த்தனை என்னும் இசைப்பாடல்கள் போன்றனவே அவ் விசைப்பாடல்கள்.

தொல்காப்பியச் செய்யுளியலில் (180) கூறப்படும் **பண்ணத்தி** என்பது இத்தகைய உரைநடை கலந்த இசைப் பாடலைக் குறிப்பதே யாகும்.

பண் + அத்து + இ—பண்ணத்தி. பண் - இசை. அத்து - சாரியை. இ - பெயர் விகுதி. பண்ணத்தி —

பண்ணையுடைய பாடல் என்பது பொருள். எனவே, பண்ணத்தி என்பது – கீர்த்தனை என்னும் இசைப் பாடலைக் குறிப்பதே யாகும். பழந்தமிழ்ச் செல்வமாகிய அதனைப் போற்றுவது தமிழ்மக்கள் கடமை யாகும்.

அது – **பல்லவி, பல்லவி எடுப்பு, கண்ணி** என்னும் மூன்று உறுப்புக்களை யுடையது.

பல்லவம் – தளிர். இது தமிழ்ச்சொல். பல்லவி – தளிர்த்தல். பாட்டின் தொடக்கமாதலால் இது இப் பெயர் பெற்றது.

பல்லவி எடுப்பு – தளிர் முதிர்ந்து அரும்பி மலர்தல் போல, இசை முதிர்ந்து இன்பந் தோன்றி மிகுதலினால் இது இப்பெயர் பெற்றது.

கண்ணி – அம் மலரால் தொடுக்கப்பட்ட மாலை போல, இசைத் தொகுதியால் பொலிவுறுதலின் இப் பெயர் பெற்றது. கண்ணி – மாலை. கண்ணி ஒன்றுக்கு மேற்படின் **கண்ணிகள்** எனப் பெயர் பெறும்.

பல்லவி யாவது – ஓரடியின் தனிச்சொல்லுக்குப் பின், அடிமடக்காய் ஓரடி வரும். அல்லது அவ்வடி, மோனை எதுகைத் தொடை யமைய வரும். தனிச்சொல் பெறாது வருதலும் உண்டு.

பல்லவி யெடுப்பாவது – பல்லவியின் எதுகை யுடையதாய் வரும். பல்லவியை விட மிகுதியான சீர்கள் வரும். இஃதும் இரண்டடி மோனை அல்லது எதுகைத்தொடை யமைய வரும். பல்லவி, பல்லவி எடுப்பு இரண்டும் இயைபுத்தொடை யமைய வருதல் சிறப்பு.

கண்ணியாவது – இருசீரிரட்டை, முச்சீரிரட்டை முதலிய அடிகள் இரண்டு ஓரெதுகையாய் வரும். கண்ணியில் கட்டாயம் இயைபுத்தொடை வரவேண்டும்.

பல்லவி முதலிய மூன்றினும் முடுகியலும் வரும். பல்லவி எடுப்பு இல்லாமல், பல்லவியும் கண்ணிகளும் மட்டும் வருதலும் உண்டு.

பண்ணத்தி – தாளமும் அராகமும் பொருந்த வர வேண்டும். அராகம் – இசை. அது முதலெழுத்தை இழந்து ராகம் எனவும், அகர மிருந்த இடத்தில் இகரஞ் சேர்த்து **இராகம்** எனவும் வழங்கப்படுகிறது.

காட்டு :

பல்லவி

இதுநல்ல தருணம்—அருள்செய்ய
இதுநல்ல தருணம்

பல்லவி எடுப்பு

பொதுநல்ல நடம்வல்ல புண்ணிய ரேகேளும்
பொய்யதுஞ் சொல்கிலேன் மெய்யாக வேநாளும்—(இது)

கண்ணி

மதித்தமை யாதமத வழக்கெல்லாம் சாய்ந்தது
வருஞ்சிரமமென்னும் மயக்கமும் மாய்ந்தது
கொதித்த வுலகாசாரக் குதிப்பெல்லா மொழிந்தது
கொலையுங் களவுமற்றைப் புலையு மழிந்தது—(இது)

—இராமலிங்கர்

இப் பண்ணத்தியில், பல்லவி அடிமடக்காகவும், பல்லவி யெடுப்பு, பல்லவியின் எதுகையாகவும், பல்லவி முதலிய மூன்றும் இயைபுத்தொடை பொருந்தவும் வந்துள்ளமை காண்க.

பல்லவி

வருவா ரழைத்து வாடி—வடலூர் வடதிசைக்கே
வந்தால் மகிழ்வோங் கூடி

பல்லவி எடுப்பு

திருவார்பொன் னம்பலத்தே செழிக்குங்குஞ் சிதபாதர்
சிவசிதம் பரபோதர் தெய்வச்ச பாநாதர்—(வரு)

—இராமலிங்கர்

இப் பல்லவி மோனைத்தொடையால் அமைந்தது.

### பல்லவி

அய்யனே நடம் ஆடிய பொற்பாதா
ஆனந்தக் கைலாயனே

### பல்லவி எடுப்பு

துய்ய னேதிருச் சபைதனில் தாண்டவம்
தோகுசெம்தரி தாகுதித்திமி
திமிர்தமென்றொரு பாதந்தூக்கியே—(அய்)

—முத்துத்தாண்டவர்

இது பல்லவி எடுப்பு இரண்டாவதடி முடுகியலாக வந்தது.

### பல்லவி

மன்று ளாடியவா—ஈசா
மன்று ளாடியவா

### பல்லவி எடுப்பு

அன்று வெள்ளி யம்பலத்தில்
தொண்டர்கள் துயர மகற்றிட—(மன்று)

### கண்ணிகள்

கன்று மானைக் கரத்தில் தரித்தவா
கங்கை யோடு சடையை விரித்தவா
பண்டு முப்புரந் தன்னை யெரித்தவா

பதஞ்சலி முனிவர்கள் தொழவே
ததிங்கணத் தைத்தோ மெனவே—(மன்று)

வாடிய நாரைக்கு முத்தியைத் தந்தவா
வாதவூ ரடிகளை யாளாக்க வந்தவா
பாடிய பாஸ்கரன் பாடற் குகந்தவா

பண்ணவர் முனிவர்க ளாடக்
கண்ணனயன் தாளம் போட—(மன்று)

—பாஸ்கரதாசன்

இது பல்லவி - அடிமடக்காகவும், பல்லவியெடுப்பு—பல்லவியின் எதுகை பெற்று, எதுகைத்தொடையாக முடுகியலாகவும், கண்ணிகள் நான்காவதடி முடுகியலாக வும் வந்துள்ளது. கண்ணிகள் மோனை எதுகை இயைபுத் தொடைகள் நன்கு அமைந்துள்ளமை அறிக.

இன்னும் வேறுபட வருவனவெல்லாம் அரிச்சந்திர நாடகம், இராம நாடகம், கோவலன், வள்ளி முதலிய வரலாற்று நாடகங்கள், பாஸ்கரதாசன் கீர்த்தனை, உடுமலை முத்துச்சாமிக் கவிராயர் கீர்த்தனை, பூமிபாலக தாஸ் கீர்த்தனை, நந்தன் கீர்த்தனை, முத்துத்தாண்டவர் கீர்த்தனை முதலியவற்றில் படித்தறிக.

## பயிற்சி

1. பண்ணத்தியின் இலக்கணம் என்ன?

2. பல்லவி, பல்லவி எடுப்பு, கண்ணி—பொருளென்ன?

3. இசைப்பாடல் அல்லது பண்ணத்தி எவ்வாறு வரும்?

---

## 4. கவியரங்கம்

கவியரங்கம் என்பது - பெரும்புலவர்கள் முன்னிலையில், ஒருவர் தாம் பாடிய கவிகளைப் படித்துப் பொருள் கூறி, அப் புலவர்கள் கூறும் குற்றங் குறைகளைத் திருத்தி யமைத்துக்கொள்ளுதல் எனப்படும். இங்கு கவியரங்கம் – கவியரங் கேற்றுதல்.

இங்கு, வார இதழ்கள், மாத இதழ்கள், தனிக் கவி நூல்கள், பொங்கல் மலர்கள், ஆண்டு மலர்கள், வானொலி முதலியவற்றில் வெளிவந்த தற்காலக் கவிஞர்கள் கவிகள் சில அரங்கேற்றப் பட்டுள்ளன. ஏறக்குறைய எல்லா வகைப் பாக்களும் இடம் பெற்றுள்ளன.

எனவே, இத்தலைப்பு இளம் புலவர்களுக்குப் பழம் புலவர்களின் தமிழ்த்தொண்டினை நினைப்பூட்டி, பழந் தமிழ்ச் சங்கத்தை அகக்கண் முன் கொண்டுவந்து நிறுத்தி, தமிழுணர்ச்சியை உண்டாக்கி, தமிழ்ச் செய்யுள் இலக்கணமான சீர் வரையறை, தளை வரையறை, அடி வரையறை, மோனை எதுகைத்தொடை யமைப்பு, பாவகை, செய்யுளோசை முதலியவற்றைத் தெள்ளத் தெளியத் தெளிவித்து, சிறந்த யாப்பிலக்கண அறிவை உண்டாக்கும் என்பது திண்ணம்.

யாப்பின் அடிப்படையான எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை என்னும் செய்யுள் உறுப்புக்கள் ஆறனையும், மோனை எதுகைத்தொடைகளின் சிறப்பினையும், அவை வரும் இடங்களையும் நன்கு தெரிந்து கொண்டீர்கள்.

அவ் வுறுப்புக்களால் ஆக்கப்படும் குறள்வெண்பா, சிந்தியல் வெண்பா, நேரிசை வெண்பா, இன்னிசை வெண்பா, பஃறொடை வெண்பா, கலிவெண்பா, குறள்வெண் செந்துறை, நேரிசை யாசிரியப்பா, இணைக்

குறளாசிரியப்பா, நிலைமண்டில ஆசிரியப்பா, அடிமறி மண்டில ஆசிரியப்பா, ஆசிரிய விருத்தம், கொச்சகக் கலிப்பா, கட்டளைக் கலிப்பா, கலித்தாழிசை, கலித் துறை, கட்டளைக் கலித்துறை, கலிவிருத்தம், வஞ்சிப்பா, வஞ்சித் தாழிசை, வஞ்சித்துறை, வஞ்சி விருத்தம், கும்மி, சிந்து முதலிய செய்யுட்களின் இலக்கணங்களையும் ஒருவாறு அறிந்துகொண்டீர்கள்.

அச் செய்யுட்களின் இலக்கணத்தை இன்னொரு முறை திருப்பிப் படியுங்கள். நீங்கள் பாடியுள்ள கவிகள் அவ் விலக்கணப்படி அமைந்துள்ளனவா என்று பாருங் கள். இங்கு எடுத்துக்காட்டி விளக்கப்படும், யாப்பிலக் கணப்படி அமையப்பெறாத கவிகளின் குறைபாடுகளை நன்கு கவனித்துத் திருத்தம் பெறுங்கள். கவி பாடும் பழக்கம் இல்லாதவர்கள் எந்தெந்தக் கவிகள் எப்படி யெப்படி அமையவேண்டும் என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள்.

ஒரு நூலுக்கு உரை எழுதுவோர், தமக்கு முன்னர் அந்நூலுக்கு எழுதப்பட்ட உரையை எடுத்துக்காட்டி, அதன் பிழைபாட்டை விளக்கிச் செல்லுதலைத் தொல் காப்பியம், திருக்குறள் முதலிய பழந்தமிழ் நூல்களின் பழைய உரைகளில் காணலாம். ஒருவர் கருத்தை-கொள்கையை-மறுத்து நூல் செய்தலைப் பழந்தமிழ் இலக்கண நூல்களில் காணலாம்.

எனவே, குறைபாடுகளை எடுத்துக்காட்டி விளக்கந் தருதல் பழந்தமிழ்ப் புலவர் மரபே யாகும். அம் முன்னோர் மரபை மேற்கொண்டதே யன்றி, இது புதியன புகுத லன்று. பழங்காலக் கவியரங் கேற்றத்தை நினைவு கூர்க. மேலும், யாம் இங்கு மேற்கொண்டது யாப்புக் குறையைப் பற்றியதே யன்றிக் கருத்துக் குறையைப் பற்றிய தன்று.

நடுவு நிலைமையில் நின்று, யாப்புக் குறைபாடுகளை எடுத்துக்காட்டி, அக் குறைபாடுகளைத் திருத்தி யமைப்பதன் வாயிலாய், இளம் புலவர்களுக்குத் திருத்தமான யாப்பறிவையும் யாப்பிலக்கண உணர்ச்சியையும் உண்டாக்கி, தமிழ்ச் செய்யுள் மரபைச் சிதையாமல் காக்க வேண்டும் என்ற பெருநோக்குடன் இப்பணியை மேற்கொண்டதன்றி, ஒருவர் முயற்சியில் குறைகாண வேண்டும் என்ற எண்ணம் சிறிதும் நமக்கில்லை. தமிழ் வளர்ச்சி யொன்றே நமது குறிக்கோளாகும்.

## 1. வெண்பா

வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா என்னும் பாக்கள் நான்கனுள், வெண்பாப் பாடுதல் கடினம். காரணம், மற்றைப் பாக்களில் அதற்குரிய தளையல்லாத வேறு தளைகளும் வரலாம். ஆனால், வெண்பாவிலோ **இயற்சீர் வெண்டளையும் வெண்சீர் வெண்டளையும்** அல்லாத வேறு தளை எதுவும் வரக்கூடாது. அதாவது, **தளை தட்டாமல்** வெண்பாப் பாடவேண்டும். இது குறித்தே,

"காசினியில் பிள்ளைக் கவிக்கம் புலிபுலியாம்
பேசும் உலாவிற் பெதும்பைபுலி—ஆசு
வலவர்க்கும் வண்ணம் புலியாமற் றெல்லாப்
புலவர்க்கும் **வெண்பாப் புலி**"

என்றனர் ஒரு புலவர். பிள்ளைத்தமிழில் அம்புலிப் பருவம் பாடுதலும், உலாவில் பெதும்பைப் பருவம் பாடுதலும், வண்ணக்கவி பாடுதலும் கடினம். எல்லாப் புலவர்க்கும் வெண்பாப் பாடுதல் கடினம் என்பதாம்.

அம்புலி - நிலா. பெதும்பைப் பருவம் - பெண்கள் பருவம் ஏழனுள் ஒன்று.

தளை தட்டாமல், மோனை எதுகைத் தொடைகள் நன்கு அமைய, செப்பலோசை பொருந்தும்படி பாட

வேண்டும் வெண்பா. வெண்பா அடிகளில் முதற்சீரிலும் மூன்றுஞ்சீரிலும் மோனை வரவேண்டும். அதாவது, பொழிப்பு மோனை பொருந்த வேண்டும். சிறுபான்மை ஒரூஉ மோனையும் வரலாம்.

புகழேந்திப் புலவர் **நளவெண்பா** இவ்வாறு அமைந் திருப்பதினாலேயே 'வெண்பாவிற் புகழேந்தி' எனச் சிறப் பிக்கப்பட்டனர்.

**காட்டு :**

'' காமர் கயல்புரளக் காவி முகைநெகிழத்
தாமரையின் செந்தேன் தளையவிழப்—பூமடந்தை
தன்னாட்டம் போலும் தகைமைத்தே சாகரஞ்சூழ்
நன்னாட்டின் முன்னாட்டும் நாடு''

—நளவெண்பா - 12

இவ் வெண்பா, மோனையும் எதுகையும் வெண்டளை யும் செப்பலோசையும் நன்கு அமைந்திருத்தலை அறிக. அலகிட்டுப் பாருங்கள்.

'' உய்ந்தொழிவா ரீங்கில்லை ஊழிக்கட் டீயேபோல்
முந்தமருள் ஏற்றார் முரண்முருங்கத்—தந்தமரின்
ஒற்றினா லொற்றி உரவோர் குறும்பினைச்
சுற்றினர் போகாமற் சூழ்ந்து ''

—புறப்பொருள் வெண்பாமாலை-1 : 7

இவ் வெண்பாவும் அவ்வாறு அமைந்திருத்தலை அறிக.

வெண்பாப் பாட விரும்புவோர், நளவெண்பாவை ஓசையுடன் பலமுறை படித்தல் வேண்டும். அப்போது தலையாய வெண்பாக்கள் பாடும் புலமை தானே அமையும். மற்றும், புறப்பொருள் வெண்பாமாலை, தண்டி யலங்காரம், நாலடியார் போன்ற வெண்பா நூற்களையும் படிக்கவேண்டும். வெண்பாவின் இலக்கணம் அறியாதவர் வெண்பாப் பாடுதலை விட்டுவிட்டு, வேறு பாக்கள் பாடுதலே இலக்கியத் தொண்டாகும்.

" வெண்பாவைப் பாட விரும்புவோ ரீங்குநள
வெண்பாவைச் சால விருப்புடனே—பண்பாகப்
பன்முறையு நன்கு படித்தாற் சிறந்தவெண்பா
நன்முறையிற் பாடிவிடும் நா "

இவ் வெண்பாவையும் எடுத்துக்காட்டாகக் கொள்க. இவ் வெடுத்துக்காட்டு வெண்பாக்களை ஓசையுடன் நன்கு படித்தபின் கீழ் அரங்கேற்றும் வெண்பாக்களைக் கூர்ந்து பாருங்கள்.

## அரங்கேற்றம்

1. " துருப்பிடித்த வேலைத் தூரவெறி, இங்கேவா
உருப்படியாய்ப் பாட்டொன்று சொல்லு—
விருப்புடனே
கவியரங் கங்கூட்டிக் கன்னித் தமிழ்வளர்ப்பார்
செவிக்கமுத மாயொன்று சொல்லு "

இவ் வெண்பாவில்,

உருப்படியாய்—சொல்லு
செவிக்கமுத—சொல்லு

என இரண்டாவ தடியிலும் நான்காவ தடியிலும் மோனை அமையவில்லை. எதுகை அமைந்துள்ளது.

நே - ஆ

வே லைத் × தூ ரவெ றி
நேர் நேர் × நேர் நிரை நேர்
தே மா × கூ விளங் காய்

என மாமுன் நேர்வந்து நேரொன் றாசிரியத் தளையானது. வெண்பாவில் ஆசிரியத் தளை வரக்கூடாது.

க - த

இங் கே வா × உருப் படி யாய்
நேர் நேர் நேர் × நிரை நிரை நேர்
தே மாங் காய் × கரு விளங் காய்

க - த

விருப் புட னே × கவி யரங்
நிரை நிரை நேர் × நிரை நிரை
கரு விளங் காய் × கரு விளம்

க - த

தமிழ் வளர்ப் பார் × செவிக் கமு த
நிரை நிரை நேர் × நிரை நிரை நேர்
கரு விளங் காய் × கரு விளங் காய்

இம் மூன்றிடத்தும் காய்முன் நிரைவந்து கலித்தளை யானது. வெண்பாவில் கலித்தளை வரக்கூடாது. வெண்பாவில் இயற்சீர் வெண்டளையும், வெண்சீர் வெண்டளையும் அன்றி, வேறு தளை வரக்கூடாது என்னும் வெண்பாவின் இலக்கணம் இங்கே புறக்கணிக்கப்பட்டது.

இவ் வெண்பா, வெண்பாவுக் குரிய இலக்கணப்படி அமையவில்லை. எனவே, இது வெண்பா வன்று. ஈற்றடி சிந்தடியாகவும், ஏனையடிகள் அளவடியாகவும், முதல் இரண்டடியின் எதுகை பெற்ற தனிச்சீரை இரண்டாவ தடியின் ஈற்றில் பெற்று வரும் வேறு செய்யுளொன்று தமிழில் இன்மையின் இது ஒரு செய்யுளு மன்று.

**குறிப்பு :** நாலடியார் போன்ற பழந்தமிழ்ப் புலவர்கள் வெண்பாக்களின் சில அடிகள் மோனையின்றிச் செந்தொடையாக அமைந்துள்ளன வெனினும், வெண்பா மாலை முதலிய பிற்காலப் புலவர்கள் வெண்பாக்க ளெல்லாம் மோனைத்தொடை நன்கு அமைந்துள்ளமையான், வெண்பா மோனை அமையாது வருதல் கூடாது.

அவ் வெண்பாவை, தளை தட்டாமல் மோனைத் தொடை அமையும்படி திருத்திய திருத்தம் வருமாறு :

துருப்பிடித்த வேலதனைத் தூரவெறிந் தேவந்
துருப்படியாய்ப் பாட்டொன் றுரைப்பாய்—விருப்பாய்க்
கவியரங்கங் கூட்டிவளர் கன்னித் தமிழர்
செவியரங்க மாமென்று செப்பு.

அரங்கம்-இடம். இதைப் படித்தபின் இன்னொரு முறை அரங்கேற்றிய வெண்பாவைப் படித்துப் பாருங்கள்.

2. "கடைபோட்டார் நற்கொள்கை காணென்று கூறினர்
நடைபோட்டு மக்கள் நழுவினர்—கடைமூடித்
தலையீந்து தமிழாட்சி தருந்தீர சூரர்கள்
விலைபோந்த தென்சொல்லு வேன்"

இவ் வெண்பாவில் மோனையும் எதுகையும் நன்கமைந்துள்ளன. ஆனால், 14 தளைகளில் 6 தளைகள் தட்டுகின்றன. எனவே, இதில் வெண்பாவுக் குரிய தளையும் ஓசையும் அமையவில்லை.

நி - ஆ

கூ றினர் × நடை போட் டு
நேர் நிரை × நிரை நேர் நேர்
கூ விளம் × புளி மாங் காய்

நி - ஆ

நழு வினர் × கடை மூ டி
நிரை நிரை × நிரை நேர் நேர்
கரு விளம் × புளி மாங் காய்

க - த க - த

கடை மூ டித் × தலை யீந் து × தமி ழாட் சி
நிரை நேர் நேர் × நிரை நேர் நேர் × நிரை நேர் நேர்
புளி மாங் காய் × புளி மாங் காய் × புளி மாங் காய்

**க - த**

தமி ழாட் சி × தருந் தீ ர
நிரை நேர் நேர் × நிரை நேர் நேர்
புளி மாங் காய் × புளி மாங் காய்

**க - த**

சூ ரர் கள் × விலை போந் த
நேர் நேர் நேர் × நிரை நேர் நேர்
தே மாங் காய் × புளி மாங் காய்

நி - ஆ - நிரையொன் றாசிரியத்தளை.
க - த - கலித்தளை.

ஆசிரியத்தளையும் கலித்தளையும் வெண்பாவில் வருதல் கூடா. '**புல்லாது அயற்றளை**' என்பது யாப்பருங் கலக் காரிகை - 40.

'சூரர்கள்' என்னும் சீரிலுள்ள ரகர வொற்றை நீக்கி, "சூரகள்' எனக் கொள்ளினும், சூரகள் – நேர்நிரை - கூவிளம் ஆகி,

**நி - ஆ**

சூ ரகள் × விலை போந் த
நேர் நிரை × நிரை நேர் நேர்
கூ விளம் × புளி மாங் காய்

என, விளமுன் நிரைவந்து நிரையொன் றாசிரியத் தளை யாகும்.

'தலையீந்து தமிழாட்சி தருந்தீர சூரர்கள்'

என்பது கலியடி. அலகிட்டுப் பாருங்கள். வெண்பாவில். கலியடி வரக்கூடாது. எனவே, இது வெண்பா வன்று. தலைப்பில் வெண்பா வென்றும் பதிப்பிக்கப்பட்டுளது.

நேரிசை வெண்பாவுக்குரிய மோனை எதுகை எல்லாம் நன்கு அமைந்திருந்தும், வெண்பாவின் இன்றியமையாத இலக்கணமான–உயிர்நாடியான–தளை யமையாது -

தளை தட்டி, இது வெண்பா வல்லா வெண்பாவாகி விட்டது.

தளை தட்டாமல் இருந்தால் அருமையான வெண்பா. ஆனால், இப்போது வெண்பா வல்லாத தாயிற்று. இதனால்தான், '**எல்லாப் புலவர்க்கும் வெண்பாப் புலி**' என்றனர்.

இவ் வெண்பாவைப் படித்தபின், முன்னர்க் காட்டிய **நள** வெண்பாவையும், வெண்பாமாலை வெண்பாவையும் படித்துப் பாருங்கள். மறுபடியும் இவ் வெண்பாவை ஒரு முறை படித்துப் பாருங்கள்.

திருத்தம் வருமாறு :

கடைபோட்டு நற்கொள்கை காணென்று கூற
நடைபோட்டு மக்கள் நழுவக்—கடைமூய்த்
தலையீந்து கண்ட தமிழாட்சி வீரர்
விலைபோந்த தென்சொல்லு வேன்.

திருத்திய இவ் வெண்பாவைப் படித்தபின், அவ் வெண்பாவை ஒருமுறை படித்துப் பாருங்கள்.

3. "சொல்லினிலே கீரனென்றும் துணிவான மறம்புரியும்
வில்லினிலே சேரனென்றும் வீறுபெற்றுப்—பல்லாண்டு
வாழ்ந்துயர்ந்த தமிழ்நிலத்தார் வளங்கூறுங்
குறள்மலரே
ஆழ்ந்துணர்ந்த கலைமணியேநீ யாம்"

இவ் வெண்பாவில், மூன்ருவதடி முழுதுங் கலித்தளை யான் வந்த கலியடி. முதலடியில் பின்னிரண்டு தளையுங் கலித்தளை. ஈற்றடியின் முதற்றளை கலித்தளை. 14-ல் 6 கலித்தளை. அலகிட்டுப் பாருங்கள். காய்முன் நிரை வருவது - கலித்தளை.

'கலைமணியே நீ'—என்பது நாலசைச்சீர்.

வெண்பாவில் நாலசைச்சீர் வருதல் கூடாது. 'நீயாம்' என்பதை ஈற்றுச் சீராகக் கொள்ளின் மோனை

அமையாததோடு, நீயாம் - நேர்நேர் – தேமா ஆகிறது. வெண்பாவின் ஈற்றில் தேமாச்சீர் வருதல்கூடாது; **நாள், மலர், காசு, பிறப்பு** என்பவைதாம் வரவேண்டும்.

இதைத் திருத்தி யமைத்தால்,

சொல்லினிலே கீரனென்றும் தோய்ந்து மறம்புரியும்
வில்லினிலே சேரனென்றும் வீறுபெற்றுப்—பல்லாண்டு
வாய்ந்த தமிழர்வளம் வாய்த்த குறள்மலரே
ஆய்ந்த கலைமணிநீ யாம்

என்றமையும். இயல்பாக அமையுங் கவியே ஓசை நயத்துடனும் பொருட் செறிவுடனும் நன்கமையும்.

'தமிழர் வளம்' என்னும் சீரிலுள்ள ரகர வொற்றை நீக்கிக் கருவிளங்காய்ச் சீராகக் கொள்க. இதை வெண்பா வாக்குவதை விட,

சொல்லினிலே கீரனென்றும் துணிவான மறம்புரியும்
வில்லினிலே சேரனென்றும் வீறுபெற்றுப் பல்லாண்டு
வாழ்ந்துயர்ந்த தமிழ்நிலத்தார் வளங்கூறும்
குறள்மலரே
ஆழ்ந்துயர்ந்த கலைமணியே அறங்கூறப் பிறந்தனையே.

என அமைக்கின், இரு கலித்தாழிசைகள் ஆகும். ஆனால், முதலிரண்டடிகளில் பொருள் முற்றுப் பெறுமை யால் அது கலித்தாழிசை ஆகாது. நாலடியும் ஓரெதுகை பெறுமையால், இது கொச்சகக் கலிப்பாவும் அன்று. இவ்வாறு ஈற்றடியும் அளவடியாக இருக்கின், ஒரு கலிப் பாவின் நாலடித் தரவு எனக் கொள்ளலாம். ஈற்றடி சிந் தடியானதால் அவ்வாறு கொள்ளுதற்கும் இல்லை. இது செய்யு ளிலக்கணப்படி அமைந்த ஒரு செய்யுளன்று. வெண்பாவின் இலக்கணந் தெரியாமையே இவ் விடர்ப் பாட்டுக்குக் காரணமாகும்.

4. " எந்நாடும் ஈன்றிடா இன்குறளை ஈன்றுள்ள
இந்நாடே இன்பமிலா தேங்குவதா—செந்தமிழர்
கண்பெற்றும் பார்வையிலார் காட்சியிதைக்
காணிற்றீக்
கண்டானும் சிந்திடுமே கண்ணீர் "

இதில் மோனை நன்கமைந்துள்ளது. முதலடி **முற்று மோனை**. இரண்டாவதடி **கூழைமோனை**. மூன்ருவதடி **மேற்கதுவாய் மோனை**. ஆனால், 'செந்தமிழர்' என்ற தனிச்சீர் முதலிரண்டடிக் கேற்ற எதுகை யன்று.

ஈற்றில், 'கண்ணீர்'-நேர்நேர்-தேமா வருகிறது. இது வெண்பா விலக்கண மன்று. வெண்பாவின் ஈற்றில் தேமாச்சீர் வருதல் கூடாது.

திருத்தம் வருமாறு :

எந்நாடும் ஈன்றிடா இன்குறளை ஈன்றுள்ள
இந்நாடே இன்பமிலா தேங்குவதா—நந்நாடர்
கண்பெற்றும் பார்வையிலார் காட்சியிதைக் காணிற்றீக்
கண்பற்றுங் கண்ணீர்க் கடல்.

## 2. ஆசிரிய விருத்தம்

கழிநெடிலடி நான்கு கொண்டது ஆசிரிய விருத்தம். மிக எளிதில் பாடக்கூடியது ஆசிரிய விருத்தமே; எல்லாப் புலவராலும் கையாளப்படும் சிறப்புடையது.

1. " வழிந்துவரு மொலிப்பரப்பை வகுத்துவைத்த
மானுடத்தை
வாழ்த்தத்தா ளக்கட்டில்
கிழிந்தவுடன் குரலாகுய் சுவைத்தேனில் ஊற்றேவேய்ங்
குழலினிலே சீராக
எழுந்திருந்து இசையாகுய் எண்ணெழுத்தில்
எக்களிக்கும்
இயற்றமிழே சிறுகுழந்தை
அழுகையிலே ரீங்காரம் ஆகின்ருய் மகரந்தப்
புழுதிதிரு டுங்காற்றே "

இது அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம். இவ் வாசிரிய விருத்தத்தில் முதற்சீரினும் ஐந்தாஞ் சீரிலும் மோனை வரவேண்டும். முதலடியிலும், மூன்றாமடியிலும் அவ்வாறே மோனை வந்திருக்கிறது. ஏனை இரண்டடிகளி லும் மோனை அமையவில்லை. மேலும், ஓசையும் அவ் விருத்தத்திற் கேற்றவாறு அமையவில்லை.

'அழுகையிலே' என்பது, 'வழிந்துவரும், கிழிந்த வுடன், எழுந்திருந்து' என்னும் முதற்சீர்களுக் கேற்ற எதுகை யன்று. ஆசிரிய விருத்தத்தில் மோனையும் எது கையும் நன்கு அமையவேண்டும்.

**குறிப்பு**: மூன்றாமடியில், 'எழுந்து, இருந்து' என்பன குற்றியலுகரங்கள். **'கு சு டு து பு று'** என்னும் வல்லின உகரங்களில் ஒன்றை ஈற்றில் பெற்றுவரும் சொல் **குற்றியலுகரம்** எனப்படும்.

'எழுந்து+இருந்து+இசையானாய்-எழுந்திருந் திசை யானாய்' எனக் குற்றியலுகரம் உயிர் வரக் கெட்டுப் புணர் வதே தமிழ்ச் சொற்புணர்ச்சி முறையும், தமிழ்ச் செய் யுள் நடை மரபும் ஆகும். 'எழுந்திருந்து' எனக் கெட்டுப் புணர்ந்திருத்தல் காண்க. 'எழுந்திருந்து இசையானாய்' எனக் குற்றியலுகரம் உயிர்வரக் கெடாமல் இருப்பது தமிழ் ஒலி யியல்புக்கும், தமிழ்ச் செய்யுளிலக்கண மரபுக் கும் ஒத்ததல்ல. புணருமாறு:

எழுந்து + இருந்து
எழுந்த்உ + இருந்து
எழுந்த் + இருந்து

எழுந்திருந்து—எனக் காண்க.

**சீர்வகை யடி, கட்டளை யடி** என அடி இரு வகைப் படும். சீர்களைக் கொண்டு, இருசீர் குறளடி, முச்சீர் சிந்தடி எனப் பெயரிடுவது - சீர்வகை யடி. எழுத்துக்களின்

அளவைக் கொண்டு, 4 முதல் 6 எழுத்து வரை குறளடி, 7 முதல் 9 எழுத்து வரை சிந்தடி எனப் பெயரிடுவது - கட்டளை யடி. 'கட்டளை யடிகளில் குற்றியலுகரம் எழுத்தாக எண்ணப்படாது' என்பது தொல்காப்பியம் (செய். 44). எனவே, குற்றியலுகரம் உயிர்வரக் கெடாமலிருப்பது செய்யுள் நடையே யன்று. குற்றியலுகரம் உயிர்வரக் கெடாமல் நிற்கச் செய்யுளோசையுடன் பாட்டைப் படிக்கவும் முடியாது.

இசையில் குறில் நீண்டு ஒலித்தலான், இசைப் பாடல்களில், அடியின் இறுதியில் இயைபுத்தொடை நலத்துடன் குற்றுகரம் உயிர்வரக் கெடாமல் இருக்கலாம். இசைப் பாடலினும் அடியின் இடையில் குற்றுகரம் உயிர்வரக் கெட்டே புணர வேண்டும்.

**காட்டு :**

"ஊனுண்டு பாய்புலியும் கடுவாயும் உண்டு
உறுமியெதிர்ந் தோடிவரும் பன்றிகளும் உண்டு"

கவிமணி

இவ்விசைப் பாடலில், 'உண்டு' என அடியின் ஈற்றில் உள்ள உகரம், 'உறுமி' என உயிர்வர, 'உண்டு உறுமி' எனக் கெடாமல் இருப்பதை அறிக.

இதில், 'எதிர்ந்து + ஓடி — எதிர்ந்தோடி' என, 'எதிர்ந்து' என்னும் குற்றுகரம் அடியின் இடையில் உயிர்வரக் கெட்டுப் புணர்ந்திருத்தல் காண்க.

'இருந்தெழுந் தியன்றசைந் தியைந்த மைந்திருப்பரை'

என்னும் முடுகிசை யுடைய அடியை,

இருந்து எழுந்து இயன்று அசைந்து இயைந்து அமைந்து இருப்பரை - எனக் குற்றுகரம் உயிர்வரக் கெடாமல் எழுதினால், முடுகிசை அமையாமை அறிக.

'எழுந்திருந் திசையானுய்'

எனக் குற்றுகரத்தைக் கெடுத்துப் புணர்க்கின், 'எழுந் திருந்' என்னும் சீர் ஓசை குன்றுகிறது. 'விழுந்துவரும், கிழிந்தவுடன்' என்ற மற்ற அடிகளின் முதற் சீர்களுடன் சேர்த்துப் படித்துப் பாருங்கள்.

இவ் விருத்தத்தின் அடிகளில் உள்ள ஆறு சீர்களும் மூவசைச் சீர்களாகவே உள்ளன. அதனுல், இவ் விருத் தம் அகவலோசை யின்றிக் கலியோசை தட்டுகிறது. ஈற் றுச்சீர் இரண்டும் ஈரசைச்சீராக வரவேண்டும். கீழ்வரும் விருத்தத்தைப் படியுங்கள்.

"விளிந்துமயில் புறங்கொடுக்கும் மெல்லியலா
ளொருத்தியொடு
வேயும் பாகும்
சுளிந்துவருங் கடகளிற்றுச் சுவேதவா கனன்கடகத்
தோளின் மீது
தெளிந்தநறுங் கத்தூரிச் சேறுபடு விசிறியினீர்
சிந்துந் தோற்றம்
களிந்தகிரி மிசைக்கடவுட் காளிந்தி பரந்ததெனக்
கவினு மாதோ"

—வில்லிபாரதம், காண்டவதகனச் சருக்கம்-11

இவ் வறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம் போன் றதே அரங்கேற்றும் விருத்தமும். இவ்விருத்தம்போலவே தொடையும் நடையும் அமையவேண்டும் அவ் விருத்த மும். இரண்டையும் இன்னெரு முறை படித்துப் பாருங் கள். அவ் விருத்தத்தை இவ்வாறு தொடையும் நடை யும் அமையும்படி திருத்திஞல்,

"வழிந்துவரும் ஒலிப்பரப்பை வகுத்தமைத்த மானிடத்தை
வாழ்த்தத் தாளங்
கிழிந்தவுடன் குரலானுய் சுவைத்தேனில் தோய்ந்துகுரல்
கெழுமிச் சீராய்

எழுந்திருந்தின் னிசையானுய் எண்ணெழுத்தி லெக்களிக்கும்
இயலே நற்சேய்
அழுங்குரலில் ரீங்காரம் ஆகின்ருய் மகரந்தம்
அவிழ்க்குங் காற்றே''

என அமையும். இன்ெெரு முறை வில்லி விருத்தத்தையும் இத் திருத்தத்தையும் ஓசையுடன் படித்துப் பாருங்கள். எழுதும்போது இயல்பாக அமைவதே பொருட்பொலிவுடைய செய்யுளாகும். இத்தகைய இடர்ப்பாட்டுக்குக் காரணம் போதிய யாப்பறி வின்மையே யாகும். அக் கவிஞரின் மற்ற விருத்தங்களின் சில அடிகள் வருமாறு :

''போங்களடி மாப்பிள்ளையைப் பார்க்காதீர் எனப்பேதை
திரட்டும்பா வாடையைப்போல் ''

'' ஒணுனின் முதுகைப்போல் போராடும் நெற்ருளில்
மணியொதுக்கி விளையாடும்''

'' தழைச்சிறகு வேண்டாத பறவையுண்டோ என்பாதச்
சிலம்பரிசி யாக்கிவிட்டாய் ''

இவையும் மோனைத் தொடையும் நடையும் அமையாத அடிகளே. அவை அமையும்படி திருத்த முயலுக.

2. '' இருப்பிட மின்ப மென்றும் சேறதே சொர்க்க மென்றும்
வாழ்விலே கடமையொன்றைக் கடவுளே விதித்தா
ரென்றும்
போதனை செய்து வந்தாய் புதுமையைக் கொன்று வந்தாய்
பாசியின் நடுவே போந்து ரவிமதி முகங்கள் கண்டு
நீரிலோர் முத்த மிட்டு வெட்கியே பின்னும் மறைதல்
மீனுட்டு வாழ்வு என்ருய் ''

இது இன்ன செய்யுள் என்பது விளங்கவில்லை. தொல்காப்பியம், யாப்பருங்கலம், யாப்பருங்கலக் காரிகை ஆகிய எதினும் இதன் இலக்கணம் காணப்படவில்லை.

ஈற்றடி யொழிந்த ஏனை ஐந்தடிகளும் அறுசீர்க் கழி நெடிலடிகள். 'மீளுட்டு வாழ்வென்ருய்' எனப் புணர்த் தெழுதின், ஈற்றடி குறளடி யாகும். அறுசீர்க் கழிநெடிலடி ஐந்துபெற்றுக் குறளடியால் முடியும் செய்யுளொன்று தமிழில் இல்லை.

ஆசிரியப்பாவுக்கு அளவடி, சிந்தடி, குறளடி என் பவைதாம் உரியவை. ஆனல், முதலடியும் ஈற்றடியும் அளவடியாக – நாற்சீரடியாக – வரவேண்டும். பல அடி கள் கொண்ட ஆசிரியப்பாவில் இடையிடையே ஒன் றிரண்டு ஐஞ்சீரடி வரலாம். அறுசீரடியாகிய கழிநெடி லடி ஆசிரியப்பாவுக்குரிய தன்று. கழிநெடிலடி நான்கு கொண்டது ஆசிரிய விருத்தம். ஆனல், இது நாலடிக்கு மேல் வந்திருக்கிறது. எனவே, இது ஒரு தமிழ்ச் செய்யு ளன்று. **'எனக்குப் பிடித்த கவிகளில் இது ஒன்று'** என்கிருர் இதை எழுதிய கவிஞர்! 'கவி' என்னும் சொல் லுக்கு அவர் கொண்ட பொருள் என்னவோ நமக்கு விளங்கவில்லை. பொருட் பொலிவுங்கூட அவ்வளவு இருப்பதாகத் தெரியவில்லை.

'நீரிலோர் முத்தமிட்டு வெட்கியே பின்னும் மறைதல்'

என்ற அடி மோனைத்தொடை அமையாததோடு மற்றை அடிகள் போல ஓசையும் அமையவில்லை. உரைநடைக் குரிய எளிமை யின்மையால் இவ்வடி உரைநடையுமன்று; செய்யுள்நடையு மன்று.

முதலிலுள்ள நான்கடிகளை மட்டும் எடுத்துக் கொள் ளலாம். இவ் வறுசீர்க் கழிநெடிலடி நான்கு கொண்டது– அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம். இவ் விருத்தத் தில் 'இருப்பிடம்' என்னும் முதலடியின் முதற்சீரிலுள்ள எதுகையே ஏனை மூன்றடியின் முதற்சீரிலும் வரவேண் டும். இதில் அவ்வாறு வரவில்லை. இரண்டாமெழுத் தொன்றுதல்–எதுகை.

இவ் வறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தத்தில் முதற் சீரிலும் நான்காஞ் சீரிலும் மோனை வரவேண்டும். மூன்றுமடியில் மட்டும் 'போ-பு' என மோனை வந்திருக் கிறது. மற்றையடிகளில் மோனை வரவில்லை.

'இருப்பிடம் இன்பம் என்றும்'
'போதனை செய்து வந்தாய் புதுமையைக் கொன்று
வந்தாய்'

என்பன அல்லாத வெல்லாம் உரைநடைபோலவே உள் ளன. மோனையும் எதுகையும் அமையாவிடினும் அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தத்திற் குரிய ஓசை அமைந் துள்ளது.

**இத்தகைய பாட்டல்லாப் பாட்டுக்களைத் தமிழ் மக்களுக்கு ஒலிபரப்பும் நிலையில் உள்ளது தமிழ்நாட்டு வானொலி நிலையம்!**

எதுகையே இல்லாத இவ் வடிகளை அப்படியே பொருளமைவுடன் அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத் தமாகத் திருத்திஅமைப்பது இயலா தெனினும், இயன்ற மட்டிலும் எதுகையும் மோனையும் அமையத் திருத்தி யமைத்துள்ளோம். அது வருமாறு :

இருப்பிட மின்ப மென்றும் இனியசே றும்ப ரென்றும்
விருப்பொடு கடமை யொன்றை விதித்தனர் கடவு ளென்றும்
பொருப்பொடு புலமை தந்தாய் புதுமையைக் கொண்டு
வந்தாய்
பருப்படு பாசி போந்து பகல்மதி முகங்கள் கண்டே.

• உம்பர் - சொர்க்கம். பொருப்பு - மலை, நிலை. பருப் படு - பெரிய, மிக்க. பகல் — சூரியன்.

இவ் விருத்தத்தைப் படித்துவிட்டு மறுபடியும் கவி ஞர் கவியைப் படியுங்கள். எது பாட்டு என்பதை ஓர்ந்து பாருங்கள். கீழே கொடுக்கப்பட்டுள்ள அறுசீர்க் கழி நெடிலடி ஆசிரிய விருத்தத்தை ஓசையுடன் படித்து விட்

டுத் திருத்தியமைத்துள்ள விருத்தத்தையும் அவ்வாறே படித்துப் பாருங்கள்.

" திருக்கிளர் முகமும் வேர்வுஞ் சிறந்தசெம் பவள வாயும்
மருக்கிளர் மாலை மார்பும் மகரகுண் டலமுங் காதும்
சுருக்கிய மருங்குங் கண்டால் துடியிடை மடவா ராவி
இருக்கினு மிருக்கு நில்லா திறக்கினு மிறக்கு மன்றே"

—அரிச்சந்திரப் புராணம்

3. "தேங்கட்டும் இந்நாட்டுப் பொருளிங்கே
தேறட்டும் உயர் நிலைக்கு
ஓங்கட்டும் உலக நிலைக்கு
ஓடட்டும் முன்னேற்றந் தேடி
வாங்கட்டும் மிகதேவைப் பொருள்கள்
வாழட்டும் அதனுதவி கொண்டு
தாங்கட்டும் புகழ்பெரு கட்டும்
ஏறட்டும் நன்றாய் வாழட்டும்"

இக் கவியின் ஒவ்வோரடியும் ஒவ்வோரோசை யுடையதாய் உள்ளது. முதலடியின் ஈற்றுச்சீரான 'நிலைக்கு' என்னும் குற்றுகரத்தையும், இரண்டாவதடியின் மூன்றுஞ் சீரான 'நிலைக்கு' என்னும் குற்றுகரத்தையும் கெடுத்து,

உயர்நிலைக் கோங்கட்டும்
உலகநிலைக் கோடட்டும்

எனப் புணர்த்தெழுதினுல், முன்னிரண்டடிகளும் ஐஞ்சீரும், பின்னிரண்டடிகளும் அறுசீரும் உடையன வாகும். முடிவும் இல்லை. ஈற்றடியில் மோனை அமையவில்லை.

புணரிலக்கணம், செய்யுள் வகை, இன்ன செய்யுட்கு இன்ன அடி வரவேண்டும் என்னும் யாப்பிலக்கணம் தெரியாமையே இத் தவறுக்குக் காரணமாகும். திருத்தம் வருமாறு :

தேங்கட்டும் இந்நாட்டுப் பொருள்கள்
　　தேறட்டும் இங்கேயே மேன்மை
ஓங்கட்டும் உலகத்தி லொன்ருய்
　　ஓடட்டும் முன்னேற்றந் தேடி
வாங்கட்டும் மிகுதேவைப் பொருள்கள்
　　வாழட்டும் அதனுதவி கொண்டு
தாங்கட்டும் புகழ்நன்கு பெருகித்
　　தமிழ்நாடு வாழட்டுந் தானே.

4. "இயற்கையொளி யாய்நிற்குந் தனியாற்ற லுலகனைத்தும்
　　இயக்கு கின்ற
தனிக்கடவுள் எனவுரைத்துத் தம்வழக்கை நிலைநிறுத்தும்
　　சமயத் தோரே
மனித்தர்செயுந் தவத்தாலும் சமயநெறி வழக்காலும்
　　நினைத்த வண்ணம்
தனித்தபெரு மியற்கையது மாறிலதை யியற்கையெனச்
　　சாற்ற லுண்டோ"

இது அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம். 'வழிந்துவரும்' என்ற முன்காட்டிய விருத்தம் போன்றது. இவ் விருத்தத்தில் முதற்சீரிலும் ஐந்தாஞ்சீரினும் மோனை வரவேண்டும். மூன்ருமடி யொழிந்த ஏனை மூன்றடியிலும் மோனை அவ்வாறே அமைந்துள்ளது. மூன்ருமடியில், 'நினைத்த வண்ணம்' என்பது, **'மதித்த வண்ணம்'** என்றிருக்கலாம். சேர்த்துப் படித்துப் பாருங்கள்.

• முதலடி எதுகை அமையவில்லை. **'தனி, மனி'** என்பவற்றிற்குச் சிறிதும் தொடர்பில்லாது, **'இய'** என அமைத்ததன் காரணம் நமக்கு விளங்கவில்லை. 'உயிரெதுகை' எனின், அது பெரும்பாலும் ஆசிரிய அடியில் வருவதன்ருே? இது எதுகைத்தொடையின் இன்றியமையாமையை அறியாமையால் ஏற்பட்ட தவறேயாகும்.

தளையாவது, அலகிட்டுக் காணவேண்டி யிருப்ப தால் தெரியவில்லை எனலாம். 'தனி – இய' என்பதன் வேறுபாடுமா தெரியாது போகும்? அடியெதுகையைப் பொருட்கேற்பத் திருத்துவ தென்பது அவ்வளவு எளி தன்று. ஒருவாறு பொருளமைய,

'இனித்தவியல் பாய்நிற்கும்'

என அமைக்கலாம். இனித்த – மகிழ்ச்சியைத் தரும், நல்ல. இயல்பு-இயற்கை. இயல்பாக அமைவதே சிறந்த தொடையாகும்.

'இயற்கையொளி யாய்நிற்கும்'

என்னும் இடத்தில்,

'இனித்தவியல் பாய்நிற்கும்'

என்பதை அமைத்துப் பாட்டைப் படித்துப் பாருங்கள்.

5. "எல்லையில்லாத் தெய்வமேநீ போவாய் போவாய்
இன்றிடிலோ இவ்வுலகில் சாவாய் சாவாய்
முள்நிறைந்து நீபடைத்த கொடிய காட்டை
வளநாடாய்த் தொழிலாளர் மாற்றி விட்டார்
கொல்லவென நீபடைத்த விலங்கை யெல்லாம்
குழந்தைகளாய்த் தொழிலாளர் மாற்றி விட்டார்"

இவை எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தத்தின் மூன்றடிகள். இவ் விருத்தம் சிறந்த ஓசை நலத்துடன் உள்ளது. ஆனல், இரண்டாவ தடியில் மோனை எதுகை இரண்டும் அமையவில்லை. எண்சீர்க் கழிநெடிலடி ஆசி ரிய விருத்தத்தில் முதற்சீரினும் ஐந்தாஞ்சீரினும் மோனை வரவேண்டும். மற்ற இரண்டடிகளும் அவ்வாறே அமைந் துள்ளமை காண்க. இரண்டாமடியில் **'மு – வ'** என மோனை அமையாமை அறிக.

ல்–ள் – எதுகையாக அமைத்துள்ளனர். ஆனல்,
முள் + நிறைந்து—முண்ணிறைந்து

எனப் புணரும்போது எதுகை அமையாமையை நோக்கிற்றிலர். 'தமிழ்ச் சொற்களின் புணர்ச்சி மிகக் கடினமானது. புணர்ச்சியின்றிச் சொற்களைத் தனித் தனியாக எழுதுதலே ஏற்றதும் எளிதுமாகும்' என்னும் வெற்றுரையை நம்பியதே இவ் விடர்ப்பாட்டுக்குக் காரணமாகும்.

'முண்ணிறைந்து' என்பதில் உள்ள ஓசை யின்பம், 'முள் நிறைந்து' என்பதில் இல்லாமையை ஓசையுடன் படித்தறிக. திருத்தம் வருமாறு :

எல்லையிலாத் தெய்வமேநீ போவாய் போவாய்
இன்றிடிலோ இவ்வுலகில் சாவாய் சாவாய்
வல்லியகூர் முள்ளொடுநீ படைத்த காட்டை
வளநாடாய்த் தொழிலாளர் மாற்றி விட்டார்
கொல்லவென நீபடைத்த விலங்கை யெல்லாம்
குழந்தைகளாய்த் தொழிலாளர் மாற்றி விட்டார்.

இப்போது படித்துப் பாருங்கள். விருத்தங்களுக்கு அடியெதுகை மிகமிக இன்றியமையாதது. **வில்லி பாரதத்தில்** விருத்தங்களின் அமைப்பைப் படித்துப் பயிலுங்கள்.

6. " தமிழ்நாட்டின் வறுமையினு லிலங்கை சென்ருன்
தமிழகமும் அவனையாங்கு விரட்டிற் ருமே
தங்கணவர் செல்லுங்கால் குழந்தை தன்னைத்
தாலாட்டி யழுதவண்ணந் தரையில் வீழ்ந்தாள்
அம்மாவைக் கதறவிட்டே இலங்கை சென்ருன்
அங்கேயும் இன்பமில்லை வருந்தி ஞனே
திமிரான கழுதையெனத் தோட்டச் சீமான்
திட்டியே சுழற்றிஞர் சவுக்கை மேலே "

இது எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம். ஒவ்வோரடியும் மோனையுடனும் ஓசையுடனும் அமைந்துள்ளது. ஆனுல், இக் கவிஞர்க்கு எதுகை இன்னதென்ப

தும், அது எங்கு வரவேண்டும் என்பதும் தெரியவில்லை என்றே நினைக்க வேண்டியிருக்கிறது. முதலடியும் ஈற்றடியும் ஒரெதுகை. இடையடி யிரண்டும் தனித்தனியானது. பாட்டின் கருத்து மாருமல், பொருட் பொருத்த முற, அடியெதுகையைத் திருத்துதல் எளிதன்று. திருத்தம் வருமாறு:

தமிழ்நாட்டின் வறுமையினுல் இலங்கை சென்ருன்
தமிழகமும் ஆங்கவனை விரட்டிற் ருமே
தமிழ்விட்டான் செல்லுங்கால் குழந்தை தன்னைத்
தாலாட்டி அழுதவண்ணந் தரையில் வீழ்ந்தாள்
அமிழ்தூட்டி யலறவிட்டே யிலங்கை சென்ருன்
அங்கேயும் இன்பமில்லை வருந்தி ஞனே
திமிராட்டிக் கழுதையெனத் தோட்டச் சீமான்
திட்டியே சுழற்றினுன் சவுக்கை மேலே.

தமிழ்வீட்டான் - இனிமையான - இன்பந்தரும்-வீட்டுக்காரன். அமிழ்தூட்டி – தாய். திமிர் ஆட்டி - திமிர் பிடித்த.

**குறிப்பு :** ஆசிரிய விருத்தங்களில் பயிற்சி பெற, சித்தர் பாடல்கள், தமிழ் மருத்துவ நூல், வாகட நூல், பதிகங்கள், சதகங்கள், பிள்ளைத்தமிழ், தாயுமானவர் பாடல், அருட்பா முதலிய நூல்களைப் படிக்கவேண்டும்.

## 3. கொச்சகக் கலிப்பா

அளவடி நான்கு கொண்டது கொச்சகக் கலிப்பா. இது கலியடியானும், வெள்ளடியானும் வரும். கலித்தளையான் வருவது கலியடி. வெண்டளையான் வருவது வெள்ளடி. கலியடியில் சிறுபான்மை வெண்டளையும் வரலாம்.

1. " நந்தா விளக்கனைய நாயகமே நானிலத்தோர்
தந்தாய் தனியறத்தின் தாயே தயாநிதியே!
எந்தாய் இகல்வேந்த ரேறே யிறந்தனையே
அந்தோ! இனிவாய்மைக் காருளரே மற்றென்ருன் "

—கம்பரா. அயோத். கிளைகண்டு நீங்கு படலம் - 60

இக் கொச்சகம், வெண்டளை பிழையாமல் அமைந் திருத்தலை அலகிட்டறிக.

“ நீர்நிலையின் முதலையின்வாய் நிலகுலைந்த வொருகரிமுன்
ஓர்முறையுன் பெயர்விளிக்க உதவினைவந்
தெனவுரைப்பர் ;
ஆர்துயர வளக்கர்விழு மறிவிலியா னழைப்பதற்குன்
பேர்தெரியேன் ஆகிடினும் பிறகிடல்நின்
பெருந்தகையோ ”

இக் கொச்சகக் கலிப்பாக் கலித்தளையான் வந்திருத் தலை யறிக.

“ நந்தா விளக்கனைய நாயகமே எமைநீத்துப்
பொந்தார் புன்குரம்பை போக்கியிசை கொண்டனையோ
சிந்தா மணியே சிதையா வொளிப்பிழம்பே
மந்தா கினியாள்மண் ணுட்ட மறைந்தனையோ ”

கம்பர் கொச்சகம் போல் இஃதும் வெண்டளை பிழை யாமல் வரவேண்டும். ஆனால், இதில்,

க - த
நாயகமே × எமைநீத்து

நே - ஆ
பொந்தார் × புன்குரம்பை

எனக் கலித்தளையும், ஆசிரியத் தளையும் வந்துள்ளன. அதனால் ஓசை யமையாமையைக் கம்பர் கவியுடன் படித் தறிக. திருத்தம்:

“ நந்தா விளக்கனைய நாயகமே எந்நீத்துப்
பொந்தார் புலைக்குரம்பை போக்கியிசை கொண்டனையோ
சிந்தா மணியே சிதையா வொளிப்பிழம்பே
மந்தா கினியாளும் மண்ண மறைந்தனையே ”

மண்ண — நீராட்ட.

மேலும், இவர் பாடிய,

“ சரமளித்தாய் தென்னுப்ரிக் காவிறைக்குக் கதியிழந்த
சோத ரற்குக்
கரமளித்தாய் கரந்தனையோ களைப்பாறக் குளிர்யமுனைப்
பாங்க ரந்தோ ”

என்னும் அறுசீர்க் கழிநெடிலடிகளில் மோனை அமைய வில்லை. இவ்வடியில் முதற்சீரிலும் ஐந்தாஞ் சீரிலும் மோனை வரவேண்டும். திருத்தம் :

சரமளித்தாய் தென்னுப்ரிக் காவிறைக்குக் கதியிகந்த
சகோத ரற்குக்
கரமளித்தாய் கரந்தனையோ களைப்பாறக் குளிர்யமுனைக்
கரையி லந்தோ.

இத் தவறுகளுக்குக் காரணம் யாப்புப் பயிற்சி யின்மையோடு, செய்யுளோசையுடன் செய்யுட்களைப் படித்துப் பழகாமையுமே யாகும்.

2. “ திருக்குறளின் பெருமைதனைத்
தெரிந்துணர்ந்த வேற்றுநாட்டார்
பெருகுந்தம் மொழியென்றே
மொழிபெயர்த்துக் கொண்டார்கள்
அருகுள்ள சிறுநாட்டார்
தமிழ்தெரிந்து குறள்கற்றுர்
அருந்தமிழர் மட்டுமின்னும்
அதன்பெருமை யறிந்திலரே ”

இது கலியடியான் வந்த சொச்சகம். கொச்சகக் கலிப்பாவில் மோனை வரவேண்டும். இரண்டு மூன்று அடிகளில் மோனை அமையவில்லை. ‘வேற்றுநாட்டார்’ என்பது ஓசை தட்டுகிறது. ஆசிரிய விருத்தம்போல் எளிதில் பாடக்கூடியது கொச்சகம். அடிகளின் சிறப்புக்கு மோனையே காரணம் என்பதை நினைவில் இருத்துங்கள். திருத்தம் :

திருக்குறளின் பெருமையினைத்
 தெளிந்துணர்ந்த வெளிநாட்டார்
பெருஞ்சந்தம் மொழியென்றே
 பெயர்த்தமைத்துக் கொண்டார்கள்
அருகுள்ள சிறுநாட்டார்
 அறிந்துதமிழ்க் குறள்கற்றுர்
அருந்தமிழர் மட்டுமின்னும்
 அதன்பெருமை யறிந்திலரே.

3. "உலகத்து வரலா றுலகிற்கு வைத்துச் சென்ற
சிலசெய்தி கூறிடுவேன் செவிசாய்ப்பீ ரென்மக்காள்
பரந்தவிப் பாரினிலே பரவுகின்ற மக்களெல்லாம்
தலையாய தம்வாழ்வைத் தற்கொலை செய்கின்றுர்"

இது பலதளை விரவி வந்த கொச்சகம். இதில் முதலடி ஐஞ்சீரடி. மற்றவை அளவடிகள். கொச்சகத்தில் ஐஞ்சீரடி வரக்கூடாது. மூன்றுமடியில் எதுகை அமையவில்லை. ஈற்றடி ஓசை குன்றுகிறது. முதலடியினும் ஓசை யமையவில்லை. திருத்தம்:

உலகேய வரலாற்றை யுலகுக்கு வைத்துள்ள
சிலசெய்தி கூறிடுவேன் செவிசாய்ப்பீ ரென்மக்காள்
பலவாயிப் பாரினிலே பரவுகின்ற மக்களெல்லாம்
தலையாய தமவாழ்வைத் தற்கொலைசெய் கின்றனரே.

இரண்டையும் படித்துப் பாருங்கள்.

4. "அருளொன் றுண்டெண்ணி யழுதழுது
பெரும்பேறு பெறக்கூறும் பெரியோர் யாரும்
அரும்புமுல்லை வெண்பற்கள் நிறைந்த வாயால்
ஒருமுத்தம் பெற்றா ராஞல் அருளே வேண்டார்"

இதன் முதலடி சிந்தடியாகவும், ஈற்றடி நெடிலடியாகவும், ஏனை யிரண்டும் அளவடிகளாகவும் உள்ளன.

முதலடி,

' அருளொன்று உண்டெண்ணி அழுது அழுது '

என அளவடியாகப் பதிப்பிக்கப்பட்டுள்ளது. இது புண ரிலக்கணந் தெரியாமல் எழுதியதாகும். ஈற்றடியை,

'ஒருமுத்தம் பெற்றூரா னலருளே வேண்டார் '

என அலகிடின் அளவடியாகும். ஆனால், ஓசை வேறு படுகிறது. இப்பாட்டு ஏதோ பாட்டென்று எழுதிய பாட்டே யாகும். கொச்சகம் அல்லது விருத்தமாகக் கொள்ளலா மெனின், இரண்டாமடி தவிர ஏனை மூன்றடி களிலும் மோனை அமையவில்லை. முதற்சீரினும் மூன்றுஞ் சீரினும் மோனை வரவேண்டும்; பொழிப்பு மோனை. எனவே, இது ஒரு செய்யுளன்று. முதலடி யொழிந்த ஏனை மூன்றடியும் எண்சீர்க் குரிய ஓசை யுடையனவே யன்றி அளவடிக்குரிய ஓசை அமையவில்லை. அத் திருத் தம் வருமாறு :

பெரும்பேறு பெறக்கூறும் பெரியோர் யாரும்
  பிறைமுல்லை வெண்பற்கள் நிறைந்த வாயால்
அரும்பேறு பெறுவாரேல் அருளே வேண்டார்
  அறமென்று மனைவாழ்வை யடைவா ரன்றே.

என எண்சீரடிக் கலித்தாழிசையாக அமைதல் காண்க.

## 4. கட்டளைக் கலித்துறை

கட்டளைக் கலித்துறையின் இலக்கணத்தைத் திருப் பிப் படியுங்கள். திருக்கோவையார், தஞ்சைவாணன் கோவை முதலிய கோவை நூல்களெல்லாம் கட்டளைக் கலித்துறையால் பாடியவையே யாம். யாப்பருங்கலக் காரிகையும் கட்டளைக் கலித்துறை நூலே. ஒருகாலத்தே கட்டளைக் கலித்துறைக்கிருந்த பெருமை சொல்லுந் தரத்த தன்று. எதை யெடுத்தாலும் கட்டளைக் கலித்துறை

யாலேயே பாடி வந்தனர். பிற்காலக் கவிஞர்கள் தனிப் பாடல்களில் பெரும்பான்மை கட்டளைக் கலித்துறையே.

"தூற்று தலரை மறைப்பவர்க் கேகுறை சொல்லுகுற்றம்
ஏற்று தொழியென யெம்பெரு மாட்டிசென் றேற்றவர்க்கு
மாற்று தருள்செங்கை வாணன்றென் மாறையில் வந்து நெஞ்சம்
போற்று துறைய வென்சொன்ன தீங்கு பொறுத்தருளே"
—தஞ்சைவாணன் கோவை

இதில், அடியொன்றுக்கு 17 எழுத்திருத்தலை எண்ணிப்பாருங்கள். ஒற்றுக்களை நீக்கி யெண்ணுக.

"வருங்குன்ற மொன்றுரித் தோன்றில்லை யம்பல வன்மலையத்
திருங்குன்ற வாண ரிளங்கொடி யேயிட ரெய்தலெம்மூர்ப்
பருங்குன்ற மாளிகை நுண்களப பத்தொளி பாயநும்மூர்க்க
கருங்குன்றம் வெண்ணிற மேய்க்குங் கனங்குழைக் காரிகையே"
—திருக்கோவையார்

இதில், அடியொன்றுக்கு 16 எழுத்திருத்தலை எண்ணியறிக. இவ் விரண்டு கட்டளைக் கலித்துறையிலும் வந்திருப்பதுபோல் **முதற் சீரினும் ஈற்றுச் சீரினும் மோனை வரவேண்டும்.**

"முகத்தினிற் குட்டிக் கராப்பௌடர் பூசி மினுமினுக்கி
நகத்தினிற் செஞ்சாயம் நாசுக்காப் பூசியோர் நற்கரத்தில்
பகட்டான வளையலும் பார்ப்பதற் கேயோர் கைதனிலே
சொகுசான கர்ச்சீப்புங் கொண்டபெண் ணேயுன் பேருசொல்லே"

இதில்,

முகத்தினில்—மினுமினுக்கி
சொகுசான—பேருசொல்லே

என மோனை யமையவில்லை. மூன்றுமடியிலுங்கூட மூன்றுஞ் சீரில் மோனை வந்திருக்கிறதே யன்றி ஐந்தாஞ்சீரில்

மோனை வரவில்லை. நான்காமடியில் எதுகையும் ஓசையுடன் அமையவில்லை.

கட்டளைக் கலித்துறை அடிகளில் இறுதிச்சீரொழிந்த ஏனை நான்கு சீரும் வெண்டளை பிழையாது வரவேண்டும். வேறு தளைகள் வரக்கூடா. இதில்,

க - த

பகட் டா ன × வளை யலும்
நிரை நேர் நேர் × நிரை நிரை
புளி மாங் காய் × கரு விளம்

நே - ஆ

கே யோர் × கை தனி லே
நேர் நேர் × நேர் நிரை நேர்
தே மா × கூ விளங் காய்

நே - ஆ

ணே யுன × பே ருசொல் லே
நேர் நேர் × நேர் நிரை நேர்
தே மா × கூ விளங் காய்

எனக் கலித்தளையும் ஆசிரியத் தளையும் வந்திருக்கின்றன. கட்டளைக் கலித்துறையில் கலித்தளையும் ஆசிரியத் தளையும் வருதல் கூடா.

**குறிப்பு**: கட்டளைக் கலித்துறை யடியின் இறுதிச் சீர் காய்ச்சீர் ஆனதால் நிரையசையை முதலாகவுடைய கலித்துறையில் மட்டும் ஈற்றுச்சீர்க்கும் அடுத்த அடியின் முதற் சீர்க்கும் கலித்தளை வரும். திருக்கோவைக் கலித்துறையிற் காண்க.

இது, நிரையசையை முதலாக வுடைய கட்டளைக் கலித்துறை. நிரையசையை முதலாக வுடைய அடியொன்றுக்கு 17 எழுத்து வரவேண்டும். ஆனால், இதன் ஈற்றடியில் 16 எழுத்து வருகிறது. எண்ணிப் பாருங்கள்.

இக் கட்டளைக் கலித்துறையில், பாட்டின் இன்றி யமையாத உறுப்பான மோனை அமையவில்லை; தளை தட்டுகிறது; எழுத்துக் குறைகிறது. எனவே, இது கட்டளைக் கலித்துறையன்று; கட்டளைக் கலித்துறை போன்ற கட்டளைக் கலித்துறையே.

மேலும், **குட்டிக்கரா, பௌடர், கர்ச்சீப்பு, நாசுக்கு** எனத் தமிழ்மொழிக் கொவ்வாத அயற்சொற்கள் பல வந்துள்ளன. இப் பாட்டைப் படித்தபின் திருக்கோவை, தஞ்சைவாணன் கோவைப் பாட்டுக்களை ஒருமுறை படித்துப் பாருங்கள். திருத்தம் வருமாறு :

முகத்தினிற் குட்டிக் கராப்பௌடர் பூசி முகமினுக்கி
நகத்தினிற் செஞ்சாயம் நாசுக்காப் பூசியோர் நற்கரத்தில்
உகத்தினி லாடும் வளையது மற்றோர் ஒளிமலர்க்கை
அகத்தினிற் கர்ச்சீப்புங் கொண்டபெண் ணேபெயர்
யாதுசொல்லே.

உகம் – இணை. உகத்தினில் ஆடும் - இணைந்தாடும். அகம் – உள், இடம்.

இக் கலித்துறையில் உள்ள அயற்சொற்களை நீக்கினால்,

முகத்தினிற் பொற்சுண்ணம் பூசிநன் றாக முகமினுக்கி
நகத்தினிற் செஞ்சாயம் நன்றாகப் பூசியோர் நற்கரத்தில்
உகத்தினி லாடும் வளையலு மற்றோர் ஒளிர்மலர்க்கை
அகத்தினிற் குட்டையுங் கொண்டபெண் ணேபெயர்
யாதுசொல்லே.

பொற்சுண்ணம்–முகப்பொடி, மணத்தூள். குட்டை-கைக்குட்டை. 'நற்கரத்தில்' என்பது 'நற்கையினில்' என்றிருக்கலாம். இயல்பாக அமைவதே இனிய பாட்டாகும்.

## 5. கும்மி

மிக எளிதாகப் பாடும் பாக்களில் கும்மியும் ஒன்று. கும்மியின் இலக்கணத்தைத் திருப்பி ஒருமுறை படியுங்கள்.

காட்டு :

“ அத்தி முகவனைப் பெற்ற மனோன்மணி
ஆதி பராபரை தாள்போற்றி
சத்திய வாய்மை தவறு வரிச்சந்திரன்
தாரணி யாண்ட கதையுரைப்பேன் ”

—அரிச்சந்திரக் கும்மி.

இக் கும்மி வெண்டளை பிழையாமல் அமைந்திருத்தலை அறிக.

1. “செந்தமிழ் நாட்டில் வாழ்பவரே அனைவரும்
சேருவீர் ஒன்றுகப் போரிடவே
பைந்தமிழ்ப் பண்பினைக் காத்திட வேயிந்தப்
பாரில் சிந்துவோம் இரத்தத்தை ”

இக் கும்மியில்,

நே - ஆ க - த
நாட்டில் × வாழ்பவரே × அனைவரும்

நே - ஆ
ஒன்றுய்ப் × போரிடவே

நே - ஆ நி - ஆ
பாரில் × சிந்துவோம் × இரத்தத்தை

என ஆசிரியத்தளையும் கலித்தளையும் வந்துள்ளன. முடிவும் இல்லை. காரணம் கும்மியின் இலக்கணம் தெரியாமையே யாகும். திருத்தம் வருமாறு :

செந்தமிழ் நாட்டினில் வாழ்பவ ரேயாரும்
சேருவீ ரொன்றுகப் போரிடவே
பைத்தமிழ்ப் பண்பினைக் காத்திட வேயிந்தப்
பாரில் குருதியைச் சிந்திடுவோம்

இரண்டையும் படித்துப் பாருங்கள்.

2. " பணமூட்டை யாவுங் கரையவேண் டுமதைப்
பரமவே ழைக்குப் பகிர்தல்வேண்டும்
உணவூட்டிப் பசியை ஒடுக்கவேண்டும் யாரும்
உலகில் சமமென்ப தோங்கவேண்டும் "

இக் கும்மியில்,

நி - ஆ
கரையவேண் × டுமதை

க - த
உணவூட்டிப் × பசியை

என ஆசிரியத் தளையும் கலித்தளையும் வந்துள்ளன. அலகிட்டுப் பாருங்கள்.

'டுமதை

என்பதில் உள்ள டுகரத்தை (டு) விட்டிசையாகக் கொண்டு,

டு மதை
நேர் நிரை
கூ விளம்

என அலகிடின்,

நி - ஆ
டு மதைப் × பர மவே
நேர் நிரை × நிரை நிரை
கூ விளம் × கரு விளம்

என அடுத்த சீருடன் நிரையொன் றாசிரியத்தளை ஆகிறது. இவ்விடர்ப்பாடு யாப்பறிவுக் குறைவால் ஏற்பட்டதே.

விட்டிசைத்தலாவது – ஓசை அறுத் திசைத்தல்.

**காட்டு :**

" கோலமாய்ச் சீவிச் சிணுக்கெடுத் துமலர்க்
கூந்தலிற் சூட்டி யழகுசெய்வோம் " —கவிமணி

'துமலர்' என்பதில் உள்ள, 'து', 'ம' என்பதனோடு சேர்ந்து 'தும'–நிரையசை யாகாமல், 'து' பிரிந்திசைத்து நேரசை யாதல்.

து மலர்
நேர் நிரை
கூ விளம்

" அன்னப்பால் காணாத ஏழைகட் குநல்ல
ஆவின்பால் எங்கே கிடைக்கு மம்மா" —கவிமணி

இதிலும், 'கு நல்ல' என்பதில், 'கு' விட்டிசைத்து கு நல் ல-தேமாங்காய் ஆயிற்று. 'தும', 'குந' என்பவற்றை நிரையசையாக-குறிலிணையாக–கொள்ளின்,

| நி - ஆ | | | | க - த | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| சினுக் | கெடுத் | × | தும | லர் | ஏ | ழை | கட் | × | குநல் | ல |
| நிரை | நிரை | × | நிரை | நேர் | நேர் | நேர் | நேர் | × | நிரை | நேர் |
| கரு | விளம் | × | புளி | மா | தே | மாங் | காய் | × | புளி | மா |

எனத் தளை தட்டுதலோடு, அடுத்த அடியின் முதற்சீரோடும் தளை தட்டுதலை அறிக. திருத்தம் வருமாறு:

பணமூட்டை யாவுங் கரையவேண் டுமதைப்
பாரினி லேழைக்குப் பங்கவேண்டும்
உணவூட்டி யின்மையை ஓட்டவேண்டும் யாரும்
உலகில் சமமென்ப தோங்கவேண்டும்.

## 6. சிந்து

சிந்தின் இலக்கணத்தைத் திருப்பிப் பாருங்கள்.

1. " ஊராள்வோர் எந்தமிழர் என்போம் ஆனால்
உருப்படியாய்த் தமிழ்வளர வகையே யில்லை
வேற்றாரின் மொழிக்கெல்லாம் எமது நாட்டில்
வேண்டுமட்டும் வளர்ச்சியுண்டு கொடுமை யையோ.

பட்டினிச் சாவிற்கோர் எல்லேஇல்லே இந்தப்
பல்வளம் ஓங்கிடுந் தென்னர் நாட்டில்
ஆட்சி யமைச்சர்கள் செய்வதெலா மெங்கும்
அஸ்திவாரக் கல்லிடும் அன்புத் தொண்டே.

தமிழ்நா டென்றிட்ட இன்பநாட் டையுயிர்
ஈந்தேனும் பெற்றிட உறுதி செய்வோம்
அமிழ்தான பொதுவுடைமைக் கொள்கை யெல்லாம்
அமைந்திட்ட திருநாட்டை விரைவில் காண்போம்''

இவற்றுள் முதற்கண்ணி ஓரோசையாகவும், ஏனே யிரண்டும் வேரோசையாகவும் உள்ளன. இரண்டாவது கண்ணி கும்மிப் பாட்டைப்போல் உள்ளது. ஆனல், கும்மிப் பாட்டில் இரண்டு எழுசீரடிதான் வரும். இது எண்சீரடியாக உள்ளது. மூன்ருவது கண்ணியின் முதலடி கும்மியோசையும், இரண்டாவதடி முதற்கண்ணியின் ஓசையும் அமைந்துள்ளன. படித்துப் பாருங்கள். இரண்டாவது கண்ணியில், 'அஸ்திவாரக் கல்லிடும் அன்புத் தொண்டே' என்பது ஓசை தட்டுகிறது.

முதல் இரண்டு கண்ணிகளில் எதுகை அமையவில்லே.

ஊராள்வோர்—வேற்ருரின்
பட்டினி—ஆட்சி

என்பன எதுகை யாகா. எதுகையில் இரண்டாவதெழுத்து ஒன்றி வருவதோடு, முதலெழுத்தும் குறிலுக்குக் குறிலும், நெடிலுக்கு நெடிலுமாக அளவொத்து வர வேண்டும். 'ப' என்னும் குறிலுக்கு, 'ஆ' என நெடில் வந்திருத்தல் சரியன்று.

இனி, முதலெழுத்து அளவொத்தலோடு, **'பட்டி அட்டி'** என்பன போல மூன்ருவதெழுத்தும் ஒத்து வருதலே சரியான எதுகையாகும். வண்டமிழில் என்ன எதுகைச் சொற்களுக்கா தட்டுப்பாடு?

மூன்றாவது கண்ணியில், 'தமிழ்நாடு - ஈந்தேனும்' என மோனை அமையவில்லை. எனவே, இவ் - எதுகை மோனை ஓசை அமையாததோடு, ஒருவகைப் பாக்களாகவும் இல்லை. திருத்தம் வருமாறு :

ஊராள்வோர் எந்தமிழர் என்போம் ஆனால்
உருப்படியாய்த் தமிழ்வளர வகையே யில்லை
பாராள்வோர் மொழிக்கெல்லாம் எமது நாட்டில்
பலவகையில் வளர்ச்சியுண்டு கொடுமை யையோ.

தமிழ்தானம் முயிருயிரைத் தந்தே யேனும்
தமிழ்நாட்டைப் பெற்றிடவே உறுதி செய்வோம்
அமிழ்தான பொதுவுடைமைக் கொள்கை யெல்லாம்
அமைந்திட்ட தமிழ்நாட்டை விரைவில் காண்போம்

இவை சிந்து. இவற்றைக் கலித்தாழிசையாகவும் கொள்ளலாம். இனி,

ஊராள்வோர் எந்தமிழர் என்போம் ஆனால்—இங்கு
உருப்படியாய்த் தமிழ்வளர வகையே யில்லை.
தமிழ்தானம் முயிருயிரைத் தந்தே யேனும்—நாம்
தமிழ்நாட்டைப் பெற்றிடவே உறுதி செய்வோம்.

எனத் தனிச்சொற் பெற்றும் வரும்.

பட்டினிச் சாவிற்கோர் எல்லையில் லையிந்தப்
பல்வள மோங்கிடுந் தென்னாட்டில்
அட்டியி லாதுநம் ஆள்வோர்செய் தொண்டோ
அடிப்படைக் கல்நாட் டரும்பணியே.

இது கும்மி. திருத்தியமைத்துள்ள பாட்டுக்களைப் படித்துவிட்டு, மறுபடியும் கவிஞர் பாட்டுக்களைப் படித்துப் பாருங்கள்.

2\. "காலையிலே பூங்கொடிதன் தலையைத் தூக்கிக்
காட்டினிலே வண்டொன்றுங் காணு தேங்கக்
களிவண்டு அங்கொன்று வந்து சேரக்
காதலரே கூறுங்கள் ஏனின் னேரம்?

என்றுகொடி சொல்லிடப்பொய் சொல்லும் வண்டு
வீட்டைவிட் டோடியுனைப் பார்க்க வந்தேன்
வீதியிலே என்தம்பி என்னைப் பார்த்து
விருந்துண்ண வாருங்கள் என்றான் தோழி"

இச் சிந்துகள் எதுகை இன்னதென்றே தெரியாமல் பாடப்பட்டன வாகும். அதோடு பாவகையும் தெரிந்த தாகத் தெரியவில்லை.

களிவண்டு—அங்கொன்று—களிவண்டங்கொன்று

'களிவண் டங்கொன்று வந்து சேர'

எனக் குற்றுகரத்தைக் கெடுத்துப் புணர்க்க, அவ்வடி ஓசை குன்றுகிறது. திருத்தம் வருமாறு:

காலையிலே பூங்கொடியின் தலையைத் தூக்கிக்
காட்டினிலே வண்டொன்றுங் காணு தேங்கச்
சோலையிலே யிருந்தோராண் சுரும்பர் போதச்
சுருக்காகக் கூறுங்கள் ஏனின் னேரம்?

என்றுகொடி சொல்லிடப்பொய் சொல்லும் வண்டர்
இல்லினைவிட் டோடியுனைப் பார்க்க வந்தேன்
மன்றினிடை என்தம்பி என்னைப் பார்த்து
வாருங்கள் விருந்துண்ண என்றான் தோழி!

3\. "வள்ளிக் கொடியிலே துத்திப்பூப் பூப்பானேன் சிங்கி
—காதில்
வங்காளத் தாரிட்ட சிங்காரக் கொப்படா சிங்கா.

பொன்னிட்ட மேலெல்லாம் மின்வெட்டிப்
பார்ப்பதேன், சிங்கி—இந்த
வன்னப் பணிகளின் மாணிக்கக் கல்லடா சிங்கா.'
—குற்றாலக் குறவஞ்சி

இது சிங்கன் சிங்கி உரையாடற் சிந்து. முதற் கண்ணி மோனைத் தொடையாகவும், இரண்டாவது கண்ணி எதுகைத் தொடையாகவும் அமைந்துள்ளன. 'சிங்கி, சிங்கா' என்னும் விளிப்பெயர்கள் அல்லாதவை வெண்டளையான் அமைந்துள்ளன. அலகிட்டுப் பாருங்கள்.

1. ஆகாயங் கட்டிய கொட்கை யோமலை கண்ணு?
அசைகின்ற பூமியின் கொப்புளத் தான்மலை கண்ணே.
2. முத்தம் ஒட்டினுல் உதடு களைப்பாகும் கண்ணு!
நித்திரை செய்வதால் விழிகள் வீணுகுமோ கண்ணே?
3. காதல ராலிந்தத் தோட்டங் கசங்காதோ கண்ணு?
குளிர்ந்த பனித்துளி யாலேகல் லுடையுமோ கண்ணே?
4. பகல்நிறக் கண்டு போலே—பேசும்
நாக்கை வசமாக்கும் பழம்போலே—இனிப்புத்தாராய்.

இவை, மேற்காட்டிய குறவஞ்சிக் கண்ணிகளைப் போலப் பாடியவை யாகும்.

முதற்கண்ணி குறவஞ்சிக் கண்ணிகள் போலவே அமைந்துள்ளது. இரண்டாவது கண்ணி தளைதட்டுகிறது. அலகிட்டுப் பாருங்கள். மூன்றுவது கண்ணியில் மோனை அல்லது எதுகை அமையவில்லை. நான்காவது கண்ணி சரியாக அமையவில்லை. தனிச்சொல்லும் வரவில்லை. குறவஞ்சிக் கண்ணியின் இலக்கணம் சரியாகத் தெரிந்ததாகத் தெரியவில்லை. திருத்தம் வருமாறு :

உ. முத்தம் கொடுத்தால் உதடு களைப்பாகும் கண்ணு—நாம்
நித்திரை செய்வதால் கண்கள்வீ ணுகுமோ கண்ணே.

3. காதல ராலிந்தத் தோட்டம் கசங்காதோ கண்ணு—மேற்
காலும் பனித்துளி யாற்கல் லுடையுமோ கண்ணே.

4. தேக்குங்கற் கண்டுபோல் பேசுங்கண் ணேயிங்கு
வாராய்—என்
நாக்கை வசமாக்கும் நற்பழம் போலின்பந் தாராய்.

இதைப் படித்தபின் கவிஞர் பாட்டை ஒருமுறை படித்துப் பாருங்கள்.

## 7. புணர்ச்சி

தமிழ் மொழியின் இனிமைக்குத் தமிழ்ச் சொற்களின் புணர்ச்சியே சிறந்த காரணமாகும். பொன்னும் மணியும் அழகுறப் பொருந்தினாற் போலத் தமிழ்ச்சொற்கள் ஒன்றோடொன்று ஓசையின்பமும் பொருட்பொலிவும் பொருந்தப் புணர்ந்துள்ளன. தேனும் பாலும் கலந்தாற் போன்றது தமிழ்ச் சொற்களின் புணர்ச்சி யின்பம். காதலர் களின் உள்ளப் புணர்ச்சியே போன்றது கன்னித் தமிழ்ச் சொற்களின் புணர்ச்சி!

அந்த பையன் என்பதைவிட, அந்தப் பையன் என்பது ஓசை யின்பமும் பொருள் விளக்கமும் உடையதன்றோ? கோல் தொடி என்பதைவிட, கோற்றொடி என்பது இன்சுவையும் எடுப்போசையும் அமைந்ததன்றோ? நிலம் வரி என்பதை விட, நிலவரி என்பது இன்னோசையும் தெளிபொருளும் உடையதல்லவா? எனவே, தோன்றல் திரிதல் கெடுதல் என்னும் மூவகைப் புணர்ச்சியும் தமிழ் மொழியின் இனிமைக்கும் பொருட் பொலிவுக்கும் முதற்காரணமாய் அமைந்துள்ளன வென்பது தெளிவு.

பெயர் சொல் - உன் பெயர் என்ன சொல். பெயர்ச் சொல் - பொருளைக் குறிக்கும் சொல். வினை சொல் - ஏதாவதொரு தொழில் சொல். வினைச்சொல் - பொருளின் தொழிலைக் குறிக்கும் சொல். பொருள் பெயர் - பொருளும் பெயரும்; உம்மைத்தொகை. பொருட்பெயர்-

பொருளைக் குறிக்கும் பெயர். நாட்டு புகழ்-புகழை நிலை நாட்டு; வினைத்தொகை. நாட்டுப் புகழ் - ஒரு நாட்டின் புகழ். பொருத பார்-போர் செய்த நாடு; பெயரெச்சத் தொடர். பொருதப் பார் - நீ போர் செய்யப் பார்; வினையெச்சத் தொடர். தாய் சென்றாள்-தாய் போனாள்; எழுவாய்த் தொடர். தாய்ச் சென்றாள் - ஒருத்தி தாவிச் சென்றாள்; வினையெச்சத் தொடர். பல் குச்சி - பல குச்சி; பண்புத் தொகை. பற்குச்சி-பல் விளக்கும் குச்சி; இரண்டன் உருபும் பயனும் உடன்றொக்க தொகை. கறி காய் - கறியும் காயும்; உம்மைத் தொகை. கறிக்காய் - முதிராத காய் - கறிக்கு ஏற்ற காய்; நான்கன் உருபும் பயனும் உடன்றொக்க தொகை. ஓடா குதிரைகள் – குதிரைகள் ஓடா. ஓடா – எதிர்மறைப் பலவின்பால் வினை முற்று. ஓடாக் குதிரைகள் - ஓடா (ஓடாத) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்.

இவ்வாறு புணர்ச்சியால் பொருளும் இலக்கண அமைப்பும் மாறுபடுவதால், தமிழ்ச்சொற் புணர்ச்சியின் இன்றியமையாமை பெறப்படும். இவ்வாறே புணர்ச்சி யால் யாப்பு வேறுபாடும் உண்டாகும். அது வருமாறு:

1. "அறிஞர் பலரின் அரிய கருத்து
அறியாமை நீக்கி யறிவும்—திறமுமன்பும்
நல்குமே நாட்டு நடப்புங் குறள்மலர்
நல்மணம் வீசிட நன்று"

மேலாகப் பார்த்தால் இது ஒரு நல்ல வெண்பாவே. ஆனால், இது இன்றியமையாப் புணர்ச்சி புறக்கணிக்கப் பட்டு வெண்பாவாக்கப்பட்டுள்ளது. இவ் வெண்பாவைப் புணர்ச்சி யின்பந் தோன்ற எழுதினால்,

அறிஞர் பலரின் அரிய கருத்
தறியாமை நீக்கி யறிவும்—திறமுமன்பும்
நல்குமே நாட்டு நடப்புங் குறள்மலர்
நன்மணம் வீசிட நன்று.

முதலடியில், 'கருத்' என நிரையசை சீராக வந்துளது. வெண்பாவின் ஈற்றிலன்றி இடையில் அசைச் சீர் வருதல் கூடாது. இதை எவ்வாறு அடுத்த சீருடன் தளை கொள்வது ? அலகிட்டுப் பாருங்கள்.

'அரியகருத்' - நிரைநிரைநேர் – கருவிளங்காயாகக் கொள்ளின், அடுத்தது தறி - நிரை வந்து கலித்தளையாகிறது. முதலடி சிந்தடியாகிறது.

**'ல்'** என்பது 'ஞ ந ம' என்னும் மெல்லெழுத்துவரின் **'ன்'** ஆகத் திரியும். அவ்வாறே,

நல்+மணம்—நன்மணம் எனத் திரிவதே புணர்ச்சியின்பமும் விதியும் ஆகும். அவ்வாறு திரியவே, பின்னிரண்டடிகள் எதுகை யமையாமை அறிக.

இவ் விடர்ப்பாட்டுக்குக் காரணம், புணர்ச்சி யிலக்கணம் தெரியாமையும், 'புணர்ச்சி கூடாது' என்னும் தப்பான கூற்றை நம்பியதுமே யாகும். திருத்தம் :

அறிஞர் பலரின் அரிய கருத்தை
அறியாமை நீக்கி யறிவும்—திறமுமன்பும்
நல்குமே நாட்டு நடப்புங் குறள்மலர்
பல்குமே யின்பம் பயின்று.

2. " கடல்கடந்த நாட்டினரும் தமக்கு ஏற்ற
கலையாக்கி மொழிபெயர்த்துப் பயனும் பெற்றார்
அடலார்ந்த தமிழர்நாம் நமக்கு ஏற்ற
அருங்குறளை வாழ்க்கையிலே உணர்ந்தோ மில்லை "

இவ் வெண்சீர்க் கழிநெடிலடிகள்,

தமக்கு+ஏற்ற—தமக்கேற்ற
நமக்கு+ஏற்ற—நமக்கேற்ற

எனக் குற்றுகரங் கெட்டுப் புணரின், இருசீர் ஒருசீராகி, சீர்குறைந்து, ஓசைதட்டிப் பா வேறுபடுதல் காண்க.

தமக்கு வாய்த்த
நமக்கு வாய்த்த

எனத் திருத்திப் படியுங்கள்.

3. "கடலிலே ஒருகாணி கேட்பார்—வானக்
காற்றிலே போகவொரு வழிதாரு மென்பார்
உடலிலே உயிருள்ள மட்டும்—எங்கள்
உரிமைக்கு உதிரத்தைச் சொட்டிடுவோ மென்பார்"

"வள்ளுவனை உலகுக்கு ஈவோம்—அவன்
வாக்கென்று கேட்டாலே வாயூமை யாவோம்"

இச் சிந்துக் கண்ணிகள் நன்கு அமைந்துள்ளன. ஆனால்,

உரிமைக்கு × உதிரத்தை—உரிமைக் குதிரத்தை
உலகுக்கு × ஈவோம்—உலகுக் கீவோம்

எனப் புணர்த்தெழுதின் ஓசை குன்றுகிறது. புணர்த்திப் படித்துப் பாருங்கள். செய்யுளின் இடையில் குற்றுகரம் உயிர்வரக் கெடாமல் இருப்பது செய்யுள்நடை யன்று.

திருத்தம் :

உடலிலே உயிருள்ள மட்டும்—அவன்
உரிமைக்கிங் குதிரத்தைச் சொட்டிடுவோ மென்பார்
வள்ளுவனை யுலகினுக் கீவோம்—அவன்
வாக்கென்று கேட்டாலே வாயூமை யாவோம்.

4. "ஆம்தமிழர் நல்வாழ்வும் அரசும் வளம்பலவும்
நாம்தமிழை நன்றாக நவிலுங்கால்—போம்பிறவும்
பொய்யர்கள் கற்பனைகள் புரட்டுகளும் மிரட்டுகளும்
மெய்யறமாந் திருக்குறளை விளம்பு"

இவ் வெண்பாவில்,

நல்வாழ்வும் × அரசும்
நன்றாக × நவிலுங்கால்
கற்பனைகள் × புரட்டுகளும்
புரட்டுகளும் × மிரட்டுகளும்
மெய்யறமாம் × திருக்குறளை × விளம்பு

என்னும் ஆறிடத்தில் தளை தட்டுகிறது. அலகிட்டுப் பாருங்கள்.

மேலும்,

'ஆந்தமிழர் நல்வாழ்வும் அரசும் வளம்பலவும்
நாந்தமிழை நன்றாக நவிலுங்கால்—போம்பிறவும்'

எனப் புணர்ச்சி யின்பந் தோன்ற எழுதின், 'போம் பிற வும்' என்னும் தனிச்சீரில் முதல் இரண்டடியின் எதுகை அமையவில்லை.

ஆம் தமிழர்
நாம் தமிழை

எனப் புணர்ச்சி நீக்கி ஓசையுடன் படிக்க முடியாமை யைப் படித்தறிக. பேசும்போது கூட அவ்வாறு பேசுதல் கடினமே. எனவே, இது நேரிசை வெண்பா வன்று. ஆறு கலித்தளைகள் வருவதால் இன்னிசை வெண்பாவு மன்று. திருத்தம் வருமாறு:

ஆந்தமிழர் வாழ்வும் அரசும் வளம்பலவும்
நாந்தமிழை நன்றாய் நவிலுங்கால்—தீந்தொழியும்
பொய்யர்கள் கூறும் புரட்டு மிரட்டுகளும்
மெய்யற மாங்குறளை வேய்.

வேய்தல் - சூடுதல். 'மேவு' எனவும் முடியலாம்.

**குறிப்பு :** கவியரங்கத்தின் அரங்கேற்றத்தை நன்கு கருத்தூன்றிப் படியுங்கள். நல்ல யாப்பறிவு உண்டாகும்.

மேலும், மற்ஞெரு முறை யாப்பிலக்கணத்தை முதலி லிருந்து திருப்பிப் படியுங்கள். பயிற்சிகளை நன்கு கவ னித்து மனத்தில் நன்கு பதியும்படி செய்து கொள்ளுங் கள்.

நீங்கள் படிக்கும் ஒவ்வொரு பாட்டையும் ஓசை யுடன் படிப்பதோடு, அது என்ன செய்யுள் என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள்.

படிக்கும் பாட்டுக்களில் அமைந்துள்ள மோனை எதுகை முதலிய தொடைகளை நன்கு கவனித்துப் படியுங் கள்.

வெண்பா, கட்டளைக் கலித்துறைகளைக் கட்டாயம் அலகிட்டுப் பாருங்கள்.

இம்முறைகளைக் கட்டாயம் மேற்கொண்டு சிறந்த கவிஞர்களாகத் திகழ்வீர்களாக.

---

# இரண்டாம் பாகம்

யாப்பதிகாரம் என்னும் இந்நூலின் முதற் பாகத்தில் கூறப்படாத செய்யுள் உறுப்புக்களின் இலக்கணமும், செய்யுட்களின் இலக்கணமும் ஈங்குக் கூறப்படுகின்றன. முதற்பாகம் இரண்டாம் பாகங்களின் பொருளடக்கத்தைப் பாருங்கள்.

## 1. உறுப்பியல்

### 1. சீர்

அசைச்சீர், மாச்சீர், விளச்சீர், காய்ச்சீர், கனிச்சீர் என்னும் ஓரசைச்சீர், ஈரசைச்சீர், மூவசைச்சீர்களின் இலக்கணம் முதற்பாகத்தில் கூறப்பட்டது. அச்சீர்களே பாடலுட் பயின்று வருவன. நாலசைச்சீரும் உண்டு. அது மிகச் சிறுபான்மையாக அருகி வரும்.

**நாலசைச் சீர் - 16**

• நாலசைச்சீராவது - மாச்சீர் விளச்சீர் முன்னர், **தண்பூ, தண்ணிழல், நறும்பூ, நறுநிழல்** வருதல். தேமா புளிமா கருவிளம் கூவிளம் என்னும் ஈரசைச்சீர் நான்கனோடும், தண்பூ தண்ணிழல் நறும்பூ நறுநிழல் என்னும் நான்கையும் உறழ்ந்தால் நாலசைச்சீர் $(4 \times 4)$ பதினாறாகும். அவையாவன :

### வரலாறு

| | |
|---|---|
| 1. தேமாந் தண்பூ | 9. தேமாந் தண்ணிழல் |
| 2. புளிமாந் தண்பூ | 10. புளிமாந் தண்ணிழல் |
| 3. கருவிளந் தண்பூ | 11. கருவிளந் தண்ணிழல் |
| 4. கூவிளந் தண்பூ | 12. கூவிளந் தண்ணிழல் |
| 5. தேமா நறும்பூ | 13. தேமா நறுநிழல் |
| 6. புளிமா நறும்பூ | 14. புளிமா நறுநிழல் |
| 7. கருவிள நறும்பூ | 15. கருவிள நறுநிழல் |
| 8. கூவிள நறும்பூ | 16. கூவிள நறுநிழல் |
| இவை எட்டும் பூச்சீர் எனப்படும். | இவை எட்டும் நிழற்சீர் எனப்படும். |

தண்பூ முதலிய நான்கும், தேமா முதலிய நான்குமே யாகும். இவை இரண்டும் ஈரசைச்சீர்களே. இரண்டு ஈரசைச்சீர்கள் சேர்ந்து ஒரு நாலசைச்சீர் ஆனது.

### வரலாறு

தண்பூ—நேர்நேர்—தேமா
நறும்பூ—நிரைநேர்—புளிமா
நறுநிழல்—நிரைநிரை—கருவிளம்
தண்ணிழல்—நேர்நிரை—கூவிளம்

**அலகிடல்**

1. நேர்நேர் நேர்நேர்—தேமாந் தண்பூ
2. நிரைநேர் நேர்நேர்—புளிமாந் தண்பூ
3. நிரைநிரை நேர்நேர்—கருவிளந் தண்பூ
4. நேர்நிரை நேர்நேர்—கூவிளந் தண்பூ

மற்ற நறும்பூ, தண்ணிழல், நறுநிழல்களையும் இவ்வாறே அலகிடுக.

## 2. தளை

தளை கொள்ளும்போது, பூச்சீர் - காய்ச்சீர் போலவும், நிழற்சீர்-கனிச்சீர் போலவும் தளை கொள்ளப்படும்.

அதாவது,

காய்முன் நேர் வருதல்—வெண்சீர் வெண்டளை
பூமுன் நேர் வருதல்—வெண்சீர் வெண்டளை

காய்முன் நிரைவருதல்—கலித்தளை
பூமுன் நிரை வருதல் — கலித்தளை

கனிமுன் நிரை வருதல்—ஒன்றிய வஞ்சித்தளை
நிழல்முன் நிரை வருதல்×ஒன்றிய வஞ்சித்தளை

கனிமுன் நேர் வருதல்—ஒன்றாத வஞ்சித்தளை
நிழல்முன் நேர் வருதல்—ஒன்றாத வஞ்சித்தளை

எனக் கொள்ளவேண்டும்.

**குறிப்பு** : பூமுன் நேர் வருதல் வெண்சீர் வெண்டளை எனினும், வெண்பாவில் நாலசைச்சீர்கள் வரப்பெறா; ஏனைப் பாக்களில் வரும்.

**காட்டு :**

"மாதவர் குலத்துதித்த—நல்ல
மாட்டிடையர் ஆச்சிசேதி **கேட்டிடுவீரே**"

"மேவியமா சாத்துவானென்பார்—பெற்று
மேவளர்த்த மைந்தனென்பேர் **கோவலனென்பார்**"

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| கேட் | டிடு | வீ | ரே | கோ | வல | னென் | பார் |
| நேர் | நிரை | நேர் | நேர் | நேர் | நிரை | நேர் | நேர் |
| கூ | விளந் | **தண்** | பூ | கூ | விளந் | தண் | பூ |

ஏனையவற்றை இலக்கியங்களில் வருமிடத்துக் காண்க.

இந் நாலசைச்சீருடன் சீர்கள்,

| | |
|---|---|
| அசைச்சீர் | பூச்சீர் |
| மாச்சீர் | நிழற்சீர் |
| விளச்சீர் | |
| காய்ச்சீர் | |
| கனிச்சீர் | |

என ஏழு வகைப்பட்டன.

**குற்றியலிகரம்**

'நாடு + யாது—நாடியாது' எனக் குற்றியலுகரத்தின் முன் யகரம் வரின், அவ்வுகரம் இகரமாகத் திரியும். இது **குற்றியலிகரம்** எனப்படும்.

செய்யுளில் தளை தட்டினல் குற்றியலிகரம் அலகு பெருது; ஒற்றேபோல் கொள்ளப்படும்.

**காட்டு :**

" சிறுநன்றி **யின்றிவர்க்கியாம்** செய்தக்கால் நாளைப்
பெருநன்றி பின்னும் பெரிதென்—றுறுநன்றி
தானவாய்ச் செய்வதுந் தானமன் றென்பவே
வானவா முள்ளத் தவர் "

இவ் வெண்பாவில்,

'இன்றிவர்க்கியாம்'–நேர் நிரை நிரை–கூவிளங்கனி. வெண்பாவில் கனிச்சீர் வரக்கூடாது. இவர்க்கு+யாம்–இவர்க்கியாம் என்பது குற்றியலிகரம். எனவே, குற்றியலிகரத்தைக் கெடுத்து ஒற்ருக்கி அலகிடின், இன்றிவர்க்யாம்–நேர் நிரை நேர்–கூவிளங்காய்ச் சீராகும்.

தளை தட்டாத விடத்துக் குற்றியலிகரம் அலகு பெறும். அதாவது உயிர்மெய்க் குறிலாகவே கொள்ளப்படும்.

**காட்டு :**

" குழலினி தியாழினி தென்பதம் மக்கள்
மழலைச்சொல் கேளா தவர் "

இதில், இனிது+யாழ்—இனிதியாழ் - என்பது குற்றியலிகரம்.

நே - ஆ

குழ லினி × தியா ழினி
நிரை நிரை × நிரை நிரை
கரு விளம் × கரு விளம்

வெண்பாவில் ஆசிரியத்தளை வரக்கூடாது. இதை,

வெ - வெ

குழ லினி தி × யா ழினி
நிரை நிரை நேர் × நேர் நிரை
கரு விளங் காய் × கூ விளம்

இவ்வாறு பிரித்தலகிடின் தளை தட்டவில்லை. இங்கு குற்றியலிகரம் குறில்போல நேரசையாதல் காண்க.

அளபெடை

தளை தட்டினவிடத்துக் குற்றியலிகரம்போல அளபெடையும் அலகு பெறாது; தளை தட்டாவிடத்து அலகு பெறும்.

**காட்டு :**

" உப்போஒ வெனவுரைத்து மீள்வாள் ஒளிமுறுவற்
கொப்போநீர் வேலையுல கு "

இதில்,

க - த

உப் போ ஒ × வென
நேர் நேர் நேர் × நிரை
தே மாங் காய் ×

எனத் தளை தட்டுகிறது. வெண்பாவில் கலித்தளை வருதல் கூடாது. எனவே, அளபெடையை நெட்டெழுத்தே

போல் கொண்டு, உப்போ–நேர்நேர்–தேமாச் சீராக அலகிடின், மா முன் நிரை வந்து இயற்சீர் வெண்டளையாதல் காண்க.

" ஓஒதல் வேண்டும் ஒளிமாழ்கு செய்வினை
ஆஅது மென்னு மவர் " (குறள்)

வெ - வெ

ஓ ஒ தல் × வேண் டும்
நேர் நேர் நேர் × நேர் நேர்
தே மாங் காய் × தே மா

இங்கு தளை தட்டாததால், அளபெடை அலகுபெற்றது.

**குறிப்பு** : நெடில் அளபெடுத்தல் நேர்நேர் – தேமாவாகவும், குறினெடில் அளபெடுத்தல் நிரைநேர் - புளிமாவாகவும் கொள்க.

| | |
|---|---|
| பா அல் | படா அ |
| நேர் நேர் | நிரை நேர் |
| தே மா | புளி மா |

## 3. தொடை

**இனவெதுகை**

வல்லின மெல்லின மெய்களுள், ஓரின மெய்யில் அதற்கதுவே யன்றி வேறு மெய் எதுகையாக வரின் **இனவெதுகை** எனப்படும். இது சிறுபான்மை.

**காட்டு :**

" தக்கார் தகவிலர் என்ப தவரவர்
எச்சத்தால் காணப் படும் " (குறள்)

தக்கார்–எச்சத்தால். க்–ச்–வல்லின வெதுகை.

" தன்சீர் தனதொன்றின்
வெண்சீர் விகற்பம் "

தன்–வெண்-மெல்லின வெதுகை.

**ஆசெதுகை**

எதுகையாக வரும் எழுத்துக்கு முன் 'ய் ர் ல் ழ்' என்னும் நான்கில் ஒன்று வரின், அது **ஆசெதுகை** எனப் படும். ஆசு–பற்று-முதலெழுத்தையும் இரண்டாவ தெழுத்தையும் பற்றி நிற்கும் எழுத்து.

காட்டு :

" எந்நன்றி கொன்ருர்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு "

எங்–செங் - எதுகை. ய் – ஆசு. இது யகரவொற் றிடைவந்த ஆசெதுகை.

" மாக்கொடி யானையும் மௌவற் பந்தரும்
கார்க்கொடி முல்லையும் கலந்து மல்லிகை "

இது ரகரவொற் றிடைவந்த ஆசெதுகை.

" ஆவே றுருவின வாயினும் ஆபயந்த
பால்வே றுருவின வல்லவாம் "

இது லகரவொற் றிடைவந்த ஆசெதுகை.

**குறிப்பு** : லகர மெய், வல்லின மெல்லின மெய்க ளோடு மயங்காதாகையால், உயிரெதுகையிலேயே ஆசாக வரும்.

" வாழ்கின்றே மென்று மகிழன்மின் வாழ்நாளும்
போகின்ற பூளையே போன்று "

இது ழகரவொற் றிடைவந்த ஆசெதுகை.

## பயிற்சி

1. நாலசைச் சீர்கள் யாவை?

2. காய்ச்சீர்போலத் தளை கொள்ளப்படும் நாலசைச்சீர் எது?

3. தளை தட்டியவிடத்து அலகு பெரு எழுத்துக்கள் யாவை?

4. இனவெதுகை, ஆசெதுகை—எடுத்துக்காட்டுத் தந்து விளக்குக.

5. லகரமெய் எவ்வெழுத்துக்களின் முன் ஆசாக வராது? ஏன்?

---

# 2. செய்யுளியல்

## 1. வெண்டாழிசை

சிந்தியல் வெண்பா ஒரு பொருள்மேல் மூன்றடுக்கி வருதல் **வெண்டாழிசை** எனப்படும்.

**காட்டு :**

" அன்னாய் அறங்கொல் நலங்கிளர் சேட்சென்னி
ஒன்னா ருடைபுலம் போல நலங்கவர்ந்து
துன்னான் துறந்து விடல் "

" ஏடி யறங்கொல் நலங்கிளர் சேட்சென்னி
கூடா ருடைபுலம் போல நலங்கவர்ந்து
நீடான் துறந்து விடல் "

" பாவா யறங்கொல் நலங்கவர் சேட்சென்னி
மேவா ருடைபுலம் போல நலங்கவர்ந்து
காவான் துறந்து விடல் "

சிந்தியல் வெண்பா ஒருபொருள்மேல் மூன்றடுக்கி வந்ததால் இது வெண்டாழிசை.

குறிப்பு : வெண்டளை பிழைத்து வரும் சிந்தியல் வெண்பா வெண்டாழிசை யெனல் பொருந்தாது. சிந்தியல் வெண்பாவை ஏன் வெண்டளை பிழையப் பாட வேண்டும்? சிதைந்த சிந்தியல் வெண்பா வெண்டாழிசை யெனின், சிதைந்த அளவியல் வெண்பாவை எந்த இனத்திற் சேர்ப்பது ?

## 2. வெண்டுறை

மூன்றடி முதல் ஏழடிகாறும் வந்து, பின்னர்ச் சில அடிகள் குறைந்து வருவது **வெண்டுறை** எனப்படும்.

முன்னர்ச் சில அடிகள் ஓரோசையாகவும், பின்னர்ச் சில அடிகள் வேறோரோசையாகவும் வருதலும் உண்டு. இவை முறையே **ஓரொலி வெண்டுறை**, **வேற்றொலி வெண்டுறை** எனப் பெயர்பெறும்.

**காட்டு :**

" தாளாள ரல்லாதார் தாம்பல ராயக்கால் என்னும் என்னும்
யாளியைக் கண்டஞ்சி யானைதன் கோடிரண்டும்
பீலிபோற் சாய்ந்துவிழும் பிளிற்றியாங் கேபோலும் "

இது மூன்றடியாய், ஈற்றடி யிரண்டும் இரண்டு சீர் குறைந்து வந்த ஓரொலி வெண்டுறை.

" குழலிசைய வண்டினங்கள் கோழிலைய செங்காந்தட்
குலைமேற் பாய
அழலெரியின் மூழ்கினவா லந்தோ வளியவென்
றயல்வாழ் மந்தி
கலுழ்வனபோல் நெஞ்சயர்ந்து கல்லுருவி தூஉம்
நிழல்வரை நன்னாடன் நீப்பனோ வல்லன் "

இது நான்கடியாய், ஈற்றடி யிரண்டும் இரண்டு சீர் குறைந்து வந்த வேற்றொலி வெண்டுறை.

'கலுழ்' – என்பது இடையின உயிரெதுகை.

" கல்லாதார் நல்லவையுட் கல்லேபோற் சென்றிருந்தால்
கருமம் யாதாம்
இல்லாதார் செல்வரைக்கண் டிணங்கியே யேமுற்று
லியைவ தென்னும்
பொல்லாதார் நன்கலன்கள் மெய்புதைப்பப் பூண்டாலும்
பொலிவ தென்னும்
புல்லாதார் பொய்க்கேண்மை புனைந்துரைத்தா
லாவதென்னே
அல்லாதார் பொய்யாவ தறிபவே லமையாதோ "

இது ஐந்தடியாய், ஈற்றடி யிரண்டும் இருசீர் குறைந்து வந்த வேற்றொலி வெண்டுறை. முதல் மூன்றடியும் ஓரோசையாகவும், பின்னிரண்டடியும் வேறோசையாகவும் இருத்தலை ஓசையுடன் படித்தறிக.

## 3. வெளி விருத்தம்

மூன்றடியானும் நான்கடியானும் வந்து, அடிதோறும் அடிமுடிவிடத்து ஒரே தனிச்சொற் பெற்று வருவது **வெளி விருத்தம்** எனப்படும்.

**காட்டு :**

" கொண்டல் முழங்கினவால் கோபம் பரந்தனவால்
—என்செய்கோயான்
வண்டு வரிபாட வார்தளவம் பூத்தனவால்
—என்செய்கோயான்
எண்டிசையுந் தோகை யிருந்தகவி யேங்கினவால்
—என்செய்கோயான் "

இது மூன்றடியான், அடிதோறும் அடிமுடிவிடத்து, 'என்செய்கோ யான்' என்னும் தனிச்சொற் பெற்று வந்த வெளிவிருத்தம்.

"பண்ணு நின்றே பண்ணில மென்பார்—ஒருசாரார்
உண்ணு நின்றே உண்ணில மென்பார்—ஒருசாரார்
எண்ணு நின்றே எண்ணில மென்பார்—ஒருசாரார்
மண்ணு நின்றே மண்ணில மென்பார்—ஒருசாரார்"

இது நான்கடியாய், அடிதோறும் அடிமுடிவிடத்து, 'ஒரு சாரார்' என்னும் தனிச்சொற் பெற்றுதந்த வெளி விருத்தம். 'என்பார்' என்பதுடன் அடி முடிகிறது. தனிச்சொல்லை விட்டுப் படித்துப் பாருங்கள்.

## 4. ஆசிரியத் தாழிசை

மூன்றடியாய்த் தம்முள் அளவொத்து வருவன ஆசிரியத் தாழிசை எனப்படும். ஒருபொருள்மேல் மூன்றடுக்கி வருவது சிறப்புடைத்து.

காட்டு :

"என்று மிளமையும் இயல்பு மினிமையும்
ஒன்றி யுலகிடை யுயர்ந்து விளங்கிடும்
தென்றமிழ் போலொரு செம்மொழி யுண்டுகொல்"

இது தனித்து வந்த ஆசிரியத் தாழிசை.

"கன்று குணிலாக் கனியுகுத்த மாயவன்
இன்றுநம் ஆனுள் வருமே லவன்வாயில்
கொன்றையந் தீங்குழல் கேளாமோ தோழி;

பாம்பு கயிறுக் கடல்கடைந்த மாயவன்
ஈங்குநம் மானுள் வருமே லவன்வாயில்
ஆம்பலந் தீங்குழல் கேளாமோ தோழி;

கொல்லையஞ் சாரற் குருந்தொசித்த மாயவன்
எல்லிநம் மானுள் வருமே லவன்வாயில்
முல்லையந் தீங்குழல் கேளாமோ தோழி"

இது ஒருபொருள்மேல் மூன்றடுக்கி வந்த ஆசிரியத் தாழிசை.

## 5. ஆசிரியத்துறை

நான்கடியாய் ஈற்றயலடி குறைந்து வருவதும், நான் கடியாய் ஈற்றயலடி குறைந்து இடைமடக்காய் வருவதும், நான்கடியாய் இடையிடை குறைந்து வருவதும், நான்கடி யாய் இடையிடை குறைந்து இடைமடக்காய் வருவதும் என ஆசிரியத்துறை நான்கு வகைப்படும்.

காட்டு :

" கரைபொருகான்யாற்றங் கல்லதரெம்முள்ளி வருதிராயின்
அரையிருள் யாமத்தே யடுபுலி யேறஞ்சி யகன்றுபோக
நரையுரு மேறஞ்சு நுங்கைவேல் நும்மை
வரையர மங்கையர் வவ்வுத லஞ்சுதும் வாரலையோ "

இது நான்கடியாய் ஈற்றலயடி குறைந்துவந்த ஆசிரியத்துறை.

" வண்டுளர் பூந்தார் வளங்கெழு செம்பூட்சேய்
வடிவே போலத்
தண்டளிர்ப்பூம் பிண்டித் தழையேந்தி மாவினவித்
தணந்தோன் யாரே
தண்டளிர்ப்பூம் பிண்டித்
தழையேந்தி வந்துநும்
பண்டைப் பதிவினவிப் பாங்கு படமொழிந்து
பகர்ந்தோ னன்றே "

இது நான்கடியாய் ஈற்றயலடி குறைந்து இடைமடக் காய் வந்த ஆசிரியத்துறை.

" சங்க முழங்குந் தமிழ்நாடன் றன்னைத்
திங்கள் முகத்துத் தெரிவையர் கண்டு திளைக்கவான்

கங்குல் புகுந்து கருமுகில் தன்னை
எங்கண் அகற்றி யிருந்தனை வாழி வெண்டிங்காள் ''

இது நான்கடியாய் இடையிடை குறைந்து வந்த ஆசிரியத்துறை.

'' இரங்கு குயின்முழவா இன்னிசையாழ் தேனு
அரங்க மணிபொழிலா ஆடும் போலும் இளவேனில்,
அரங்க மணிபொழிலா வாடுமே யாமாயின்
மரங்கொல் மணந்தகன்றூர் வாய்மையென் செய்த
திளவேனில் ''

இது நான்கடியாய் இடையிடை குறைந்து இடமடக்காய் வந்த ஆசிரியத்துறை.

**கலிப்பா**

கலிப்பாவின் இலக்கணம் முதற்பாகத்தில் கூறப்பட்டுள்ளது. திருப்பி ஒருமுறை படியுங்கள்.

**தரவு தாழிசைகளின் அடியளவு**

தரவிற் சுருங்கி வரும் தாழிசை. ஒரு தரவு, மூன்று தாழிசை வரும். சுரிதகம் - தரவின் அளவை ஒத்தும் பாதியும் வரும். சுரிதகம் – வெண்பாவாகவும், ஆசிரியமாகவும் வரும்.

தரவின் சிறுமை மூன்றடி; பெருமை பன்னிரண்டடி. தாழிசை சிறுமை இரண்டடி ; பெருமை நான்கடி.

| தரவு | தாழிசை | சுரிதகம் |
|---|---|---|
| 3—12 | 2—4 | 3—12 |
| 12 | 4 | 12—6 |
| 8 | 4 | 8—4 |
| 4 | 3 | 4—3 |
| 3 | 2 | 3 |

எண் அடிகளின் தொகையினைக் குறிக்கும்.

**அம்போதரங்கம்—எண்:** இரண்டடி இரண்டு—பேரெண்.
ஓரடி நான்கு—அளவெண்.
முச்சீர் எட்டு (4)—இடையெண்.
இருசீர் பதினாறு (8)—சிற்றெண்.

எட்டும், பதினாறும்—முறையே நான்கும் எட்டும் ஆகவும் வரும்.

**மற்றொரு முறை**

இரண்டடி இரண்டு—தலையெண்.
ஓரடி நான்கு—இடையெண்.
இருசீ ரெட்டு—கடையெண்.
ஒருசீர் பதினாறு—சிற்றெண்.

அடி என்பது - அளவடி.

## 1. நேரிசை ஒத்தாழிசைக் கலிப்பா

ஒரு தரவும், மூன்று தாழிசையும், தனிச்சொல்லும், சுரிதகமும் வருதல் - நேரிசை ஒத்தாழிசைக் கலிப்பா எனப்படும்.

**காட்டு :**

"வாணெடுங்கண் பனிகூர வண்ணம்வே றுய்த்திரிந்து
தோணெடுந் தகைதுறந்து துன்பங்கூர் பசப்பினளாய்ப்
பூணெடுங்கு மகங்கண்டும் பொருட்பிரிதல் வலிப்பரோ"

இது மூன்றடித் தரவு.

சூருடைய கடுங்கடங்கள் செலற்கரிய வென்பவாற்
பீருடைய நலந்தொலையப் பிரிவரோ பெரியவரே ;

சேணுடைய கடுங்கடங்கள் செலற்கரிய வென்பவால்
நாணுடைய நலந்தொலைய நடப்பரோ நலமிலரே ;

சிலம்படைந்த வெங்கானஞ் சிலரிலவே யென்பவாற்
புலம்படைந்த நலந்தொலையப் போவாரோ புலமிலரே,

இவை மூன்றும் இரண்டடித் தாழிசை.

எனவாங்கு---தனிச்சொல்.

அருளெனு மிலராய்ப் பொருள்வயிற் பிரிவோர்
பன்னெடுங் காலமும் வாழியர்
பொன்னெடுந் தேரொடுந் தானையிற் பொலிந்தே"

இது மூன்றடி ஆசிரியச் சுரிதகம்.

இக் கலிப்பா - மூன்றடித் தரவு, தரவிற் சுருங்கித் தாழிசை இரண்டடியில் மூன்று, தரவோ டொத்த சுரிதகமும் வந்தமை காண்க.

## 2. அம்போதரங்க ஒத்தாழிசைக் கலிப்பா

ஒரு தரவும், மூன்று தாழிசையும், அம்போதரங்கமும், தனிச்சொல்லும், சுரிதகமும் வருதல்-அம்போதரங்கவொத்தாழிசைக் கலிப்பா எனப்படும்.

**காட்டு :**

" கெடலரு மாமுனிவர் கிளர்ந்துடன் தொழுதேத்த
கடல்கெழு கனைசுடரிற் கலந்தொளிரும் வாலுளைஇ
அடலவிர் உடல்செங்க ணரிமாவாய் மலைந்தனை
தாரொடு முடிபிதிரத் தமனியப் பொடிவாங்க
நீரென விழிகுருதி நிலமுழுது முடனனைப்பக்
கூருகிரான் மார்பிடந்த கொலைமலி தடக்கையோய்!

இது ஆறடித் தரவு.

முரசதிர் வியன்மதுரை முழுவதூஉந் தலைபணிப்பப்
புரைதொடித் திரடிண்டோட் போர்மலைந்த மறமல்லர்
அடியொடு முடியறுப்புண் டயர்ந்தவர் நிலஞ்சேர
பொடியெழ வெங்களத்துப் புடைத்ததுநின் புகழாமோ ;

கலியொலி வியனுலகங் கலந்துடன் நனிநடுங்க
வலியிய லவிராழி மாறெதிர்ந்த மருட்சோர்வு
மாணுதா ருடம்போடு மறம்பிதிர வெதிர்கலக்கிச்
சேணுரு மிருவிசும்பிற் செகுத்ததுநின் சினமாமோ ;

படுமணி யினநிரைகள் பரிந்துட னிரிந்தோடக்
கடுமுர ணெதிர்மலைந்த காரொலி யெழிலேறு
வீறினெடு மருப்பொசிய வீழ்ந்துதிறம் வேறுக
ஏறுமலி பெருந்தொழுவி னிறுத்ததுநின் இகலாமோ !

இவை மூன்றும் நான்கடித் தாழிசை.

இலங்கொலி மரகத மெழின்மிகு வியன்கடல்
வலம்புரித் தடக்கையின் மாஅல் நின்னிறம்.
விரியிணர்க் கோங்கமும் வெந்தெரி பசும்பொனும்
பொருகளி றதுவட்டோய் புரையு நின்னுடை.

இவை நாற்சீ ரீரடி இரண்டம்போதரங்கம் (பேரெண்).

கண்கவர் கதிர்முடி கனலுஞ் சென்னியை ;
தண்சுடர் உறுபகை தவிர்த்த வாழியை ;
ஒலியியல் லுவண மோங்குங் கொடியினை ;
வலிமிகு சகட மாற்றிய வடியினை.

இவை நாற்சீ ரோரடி நான்கம்போதரங்கம் (அளவெண்).

போரவுணர்க் கடந்தோய் நீஇ ;
புணர்மருதம் பிளந்தோய் நீஇ ;
நீரகல மளந்தோய் நீஇ ;
நிழறிகழும் படையோய் நீஇ.

இவை முச்சீ ரோரடி நான்கம்போதரங்கம் (இடையெண்).

ஊழி நீஇ ; உலகு நீஇ ;
உருவு நீஇ ; அருவு நீஇ ;
ஆழி நீஇ ; அருளு நீஇ ;
அறமு நீஇ ; மறமு நீஇ.

இவை இருசீ ரோரடி எட்டம்போதரங்கம் (சிற்றெண்).

எனவாங்கு—தனிச்சொல்.

அடுதிற லொருவநிற் பரவுது மெங்கோன்
தொடுகழற் கொடும்பூட் பகட்டெழின் மார்பிற்
கயலொடு கலந்த சிலையுடைக் கொடுவரி
புயலுறழ் தடக்கைப் போர்வே லச்சுதன்
தொன்றுமுதிர் கடலுலக முழுதுடன்
ஒன்றுபுரி திகிரி யுருட்டுவோ னெனவே "

இது ஆறடி ஆசிரியச் சுரிதகம்.

## 3. வண்ணக வொத்தாழிசைக் கலிப்பா

ஒரு தரவும், மூன்று தாழிசையும், அம்போதரங்கம், அராகம், தனிச்சொல், சுரிதகமும் வருதல் - வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பா எனப்படும்.

காட்டு :

" விளங்குமணிப் பசும்பொன்னின்
விசித்தமைத்துக் கதிர்கான்று
துளங்குமணிக் கணைகழற்காற்
றுறுமமலர் நறும்பைந்தார்ப்
பரூஉத்தடக்கை மதயானைப்
பணையெருத்தின் மிசைத்தோன்றும்
குரூஉக்கொண்ட மணிப்பூணேய்
குறையிரந்து முன்னாட்கண்

மாயாத வனப்பினையாய்
மகிழ்வார்க்கு மெல்லார்க்கும்
தாயாகித் தலையளிக்குந்
தண்டுறை யூரகேள் ;

இது ஆறடித் தரவு.

காட்சியாற் கலப்பெய்தி யெத்திறத்துங் கதிர்ப்பாகி
மாட்சியார்க் கறியாத மரபொத்தாய்க் கரவினாற்
பிணிநலம் பெரிதெய்திப் பெருந்தடந்தோள் வனப்பழிய
அணிநலந் தனியேவந் தருளுவது மருளாமோ ;

அன்பினா லமிழ்ந்தலைஇ யறிவினாற் பிறிதின்றிப்
பொன்புனை பூணுகம் பசப்பெய்தப் பொழிலிடத்துப்
பெருவரைத்தோ ளருளுதற் கிருளிடைத் தமியையாய்க்
கருவரைத்தோள் கதிர்ப்பிக்குங் காதலுங் காதலோ ;

பாங்கனையே வாயிலாப் பல்காலும் வந்தொழுகும்
தேங்காத கரவினையுந் தெளியாத விருளிடைக்கட்
குடவரைவேய்த் தோளிணைகள் குளிர்ப்பிப்பான் றமியையாய்த்
தடமலர்த்தா ரருளுநின் றகுதியுந் தகுதியோ ;

இவை மூன்றும் நாலடித் தாழிசை.

தாதுறு முறிசெறி தடமல ரிடையிடை
தழலென விரிவனபொழில் ;
போதுறு நறுவிரை புதுமலர் தெரிதரு
புதுநெய்தல் விரிவனகழி ;
தீதுறு திறமறு கெனநனி முனிவன
திசையொடு பிணைவனதுறை ;
மூதுறு மொலிகலி நுரைதரு திரையொடு
முதுதொடர் புடையதுகடல் ;

இவை நான்கும் அராகம்.

கொடுந்திற லுடையன சுறவேறு கோட்பதனால்
இடுங்கழி யிராவருதல் வேண்டாவென் றிசைத்திலரே :
கருநிறத் துறுதொழிற் கராம்பெரி துடைமையால்
இருநிறத் தொருகானில் இராவார லென்றிலமோ ;

இவை நாற்சீரீரடி இரண்டம்போதரங்கம் (பேரெண்).

நாணொடு கலந்தற்றாற் பெண்ணரசி நலத்தகையே ;
துஞ்சலு மொழிந்தற்றாற் றொடித்தோளி தடங்கண்ணே ;
அரற்றொடு கழிந்தன்றா லாரிருளு மாயிழைக்கே ;
நயப்பொடு கழிந்தன்றால் நனவது நன்னுதற்கே.

இவை நாற்சீரோரடி நான்கம்போதரங்கம் (அளவெண்).

அத்திறத்தா லசைந்தன தோள்.
அலர்தற்கு மெலிந்தன கண்.
பொய்த்துரையாற் புலர்ந்தது முகம்.
பொன்னிறத்தாற் போர்த்தன வகம்.
அழலினா லசைந்தது நகை.
அணியினா லொசிந்த திடை.
குழலினால் நிமிர்ந்தது முடி.
குறையினாற் கோடிற்று நிறை.

இவை முச்சீரோரடி எட்டம்போதரங்கம் (இடையெண்).

உட்கொண்ட தகைத்தொருபால்.
உலகறிந்த வலத்தொருபால்.
கட்கொண்ட றுனித்தொருபால்.
கழிவெய்தும் படித்தொருபால்.
பரிவுறூஉந் தகைத்தொருபால்.
பரிவுறூஉம் பசப்பொருபால்.
இரவுறூஉந் துயரொருபால்.

இளிவந்த வெளிற்றொருபால்.
மெலிவுறூஉந் தகைத்தொருபால்.
விளர்ப்புவந் தடைந்தொருபால்.
பொலிவுசென் றகன்றொருபால்.
பொறைவந்து கூர்ந்தொருபால்,
காதலிற் கதிர்ப்பொருபால்.
கட்படாத் துயரொருபால்.
ஏதில்சென் றணைந்தொருபால்.
இயனுணிற் செறிவொருபால்.

இவை இருசீரோரடிப் பதினரம்போதரங்கம் (கடையெண்).

எனவாங்கு — தனிச்சொல்.

இன்னதிவ் வழக்க மித்திற மிவணலம்
என்னவு முன்னுட் டுன்னு யாகிக்
கலந்தவ ணில்லைமை யாயினு நலந்தகக்
கிளையொடு கெழீஇய தளையவிழ் கோதையைக்
கற்பொடு காணியம் யாமே
பொற்பொடு பொலிகநும் புணர்ச்சி தானே''

இது ஆறடிச் சுரிதகம் : தரவோ டொத்து வந்தது.

## 4. வெண்கலிப்பா

கலிவெண்பாவே போல் கலித்தளை தட்டு வருவது. வெண்கலிப்பா எனப்படும்.

**காட்டு :**

''வாளார்ந்த மழைத்தடங்கண் மதிமுகத்தே வம்பவிழக்
கோளார்ந்த பூணுகங் குழைபுரளக் கோட்டெருத்தின்
மாலைதாழ் கூந்தலார் வரன்முறையான் வந்தேத்தச்
சோலைதாழ் பிண்டிக்கீழ்ச் சூழ்ந்தவர்தஞ் சொன்முறையான்

மனையறமுந் துறவறமும் மன்னவர்க்கும் விண்ணவர்க்கும்
வினையறுக்கும் வகைதெரிந்து வீடெடுத்துரைக்கும்
தொன்மைசால் சுழிகுணத்தெந் துறவரசைத் தொழுதேத்த
நன்மைசால் வீடெய்து நாடு''

இது பெரும்பாலும் கலித்தளையான் வந்தமையால் வெண்கலிப்பா.

## 5. தரவுகொச்சகக் கலிப்பா

கொச்சகம் – பாட்டு. பெண்கள் சேலையின் ஒரு பகுதியைப் பல அடுக்காக அல்லது மடிப்பாகக் கொய்து உடுப்பதனைக் **கொச்சகம்** என்பர். அதுபோல அடுக்கி வரும் பாட்டுக் கொச்சகம் எனப்பட்டது.

கொச்சகக் கலிப்பாவில், தரவும் தாழிசையும் சிலவும் பலவும் அடுக்கிவந்து, தரவிணைக் கொச்சகம், சிஃறாழிசைக் கொச்சகம், பஃறாழிசைக் கொச்சகம் எனப் பெயர் பெறும். அப்பெயரே தனித்துவரும் தரவுக்கும் ஆனது. தனித்து வரும் தரவு ஓரெதுகையுடைய நாள் கடியான் வரும். முதற் பாகத்தில் காண்க.

பெண்கள் சேலையைக் கொய்து உடுக்கும் கொச்சகம் என்பது இக்காலத்தே **கொசுவம்** என வழங்குகிறது. இது கொச்சகம் என்பதன் திரிபே யாகும்.

சேலையின் ஒரு பகுதியைக் கொய்து அதைப் பின் புறம் அல்லது முன்புறம் வைத்து, அதன் மேலே சேலையைச் சுற்றி உடுப்பதால், சேலைக்கு உள்ளே உள்ள அது கொச்சகம் எனப்பட்டது.

கொய்து + அகம் — கொய்தகம். அகம் – உள், உள்ளே. 'கொய்து' என்பது தொழிலாகு பெயராய்க் கொய்யப்பட்ட சேலையின் அப்பகுதிக்கானது. கொய்தகம் என்பதே, கொய்து+அகம் - கொய்தகம் – கொய்சகம்- கொச்சகம் எனத் திரிந்தது. நைந்தது – நஞ்சது;

தீய்ந்தது – தீஞ்சது என்பது போல, தகரத்திற்குச் சகரம் போலி. கொச்சகம் என்பது - கொச்சுவம் எனத் திரிந்தது.

ஒரு தரவும் தனிச்சொல்லும் சுரிதகமும் வருதல் - தரவு கொச்சகக் கலிப்பா எனப்படும்.

**காட்டு :**

" குடநிலைத் தண்புறவிற் கோவல ரெடுத்தார்ப்பத்
தடநிலைப் பெருந்தொழுவிற் றகையேறு மரம்பாய்ந்து
வீங்குமணிக் கயிறொரீஇத் தாங்குவனத் தேறப்போய்த்
தேங்குசிறு முயலிரியச் சிறுமுல்லை முறுவலிப்ப ;

இது நாலடித் தரவு.

எனவாங்கு—இது தனிச்சொல்.

ஆனொடு புல்லிப் பெரும்புதன் முனையும்
கானுடைத் தவர்தேர் சென்ற வாறே "

இது ஆசிரியச் சுரிதகம்.

## 6. தரவிணைக் கொச்சகக் கலிப்பா

இரண்டுதரவும் தனிச்சொல்லும் சுரிதகமும் வருதல்

**காட்டு :**

" வடிவுடை நெடிமுடி வானவர்க்கும் வெலற்கரிய
கடிபடு நறும்பைந்தார்க் காவலர்க்குங் காவலனுங்
கொடிபடு மணிமாடக் கூடலார் கோமானே ;

இது மூன்றடித் தரவு.
எனவாங்கு— இது தனிச்சொல்.

துணைவளைத்தோ ளிவள்மெலியத் தொன்னலந் தொடர்புண்
கிணைமலர்த்தா ரருளுமே லிதுவிதற்கோர் மாறென்று [டாங்
துணைமலர்த் தடங்கண்ணார் துணையாகக் கருதாரே ;

இது தரவு.
அதனால்— இது தனிச்சொல்.

செவ்வாய்ப் பேதை யிவடிறத்
தெவ்வா றுங்கொலிஃ தெண்ணிய வாறே''

இது ஆசிரியச் சுரிதகம்.

இது இடையிடை தனிச்சொற் பெற்றுவந்த தரவிணைக் கொச்சகம். இணை - இரண்டு.

## 7. சிஃறாழிசைக் கொச்சகக் கலிப்பா

சில தாழிசைகள் வருதல். தாழிசையாற் பெயர் கொடுக்கினும் முதலில் தரவும் வரப்பெறும்.

காட்டு :

''பரூஉத்தடக்கை மதயானைப் பணையெருத்தின் மிசைத் தோன்றிக்
குரூஉக்கொண்ட வெண்குடைக்கீழ்க் குடைமன்னர் புடை சூழப்
படைப்பரிமான் றேரினொடும் பரந்துலவு மறுகினிடைக்
கொடித்தானை யிடைப்பொலிந்தான் கூடலார் கோமானே ;

இது நாலடித் தரவு.
ஆங்கொருசார்—இது தனிச்சொல்.

உச்சியார்க் கிறைவனாய் உலகெலாங் காத்தளிக்கும்
பச்சையார் மணிப்பைம்பூட் புரந்தரனைப் பாவித்தார்
வச்சிரங் காணாத காரணத்தான் மயங்கினரே ;

இது தாழிசை.
ஆங்கொருசார்—இது தனிச்சொல்.

அக்கால மணிநிரைகாத் தருவரையாற் பனிதவிர்த்து
வக்கிரனை வடிவழித்த மாயவனைப் பாவித்தார்
சக்கரங் காணாத காரணத்தாற் சமழ்த்தனரே ;

இது தாழிசை.
ஆங்கொருசார்—இது தனிச்சொல்.

மால்கொண்ட பகைதணிப்பான் மாத்தடிந்து மயங்காச் செங்
கோல்கொண்ட சேவலங் கொடியவனுப் பாவித்தார்
வேல்கொண்ட தின்மையால் விம்மிதராய் நின்றனரே ;

இது தாழிசை.
அஃதான்று—இது தனிச்சொல்.

கொடித்தேர்த் தோன்றல் கொற்கைக் கோமான்
நின்புக ழொருவன் செம்பூட் சேஎய்
என்றுநனி யறிந்தனர் பலரே யேனும்
ஐவரு ளொருவனென் றறிய லாகா
மைவரை யானை மடங்கா வென்றி
மன்னவன் வாழியென் றேத்தத்
தென்னவன் வாழி திருவொடும் பொலிந்தே"

இது ஏழடி ஆசிரியச் சுரிதகம்.

இதில் தாழிசைகளின் இடையிடையே தனிச்சொல் வந்தது. நேரிசை ஒத்தாழிசைக் கலிப்பாவின் தாழிசைகளின் இடையிடையே தனிச்சொல் வாராமையால் இது இப்பெயர் பெற்றது. தரவினு மிக்கு வந்தது சுரிதகம். தரவோ டொத்து வரவேண்டுமென்பது ஒத்தாழிசைக் கலிக்கே யாம்.

## 8. பஃறாழிசைக் கொச்சகக் கலிப்பா

பல தாழிசைகள் வருதல் பஃறாழிசைக் கொச்சகக் கலிப்பா எனப்படும். தாழிசையின் இடையிடையே தனிச்சொற் பெற்றும் பெறாதும் வரும். எடுத்துக்காட்டு கலித்தொகையில் காண்க.

## 9. மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா

முன்னர்க் கலிப்பாக்களுக் கோதிய இலக்கணத்தில் மாறி அல்லது மயங்கி வருதல் - மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா எனப்படும்.

காட்டு :

"மணிகிளர் நெடுமுடி மாயவனுந் தம்முனும்போன்
றணிகிளர் நெடுங்கடலுங் கானலுந் தோன்றுமால்
நுரைநிவந் தவையன்ன நொய்ப்பறைய சிறையன்னம்
இரைநயந் திறைகூரு மேமஞ்சேர் துறைவகேள் ;
மலையென மழையென மஞ்செனத் திரைபொங்கிக்
கலையெனக் காற்றெனக் கடிதுவந் திசைப்பினும்
விழுமியோர் வெகுளிபோல் வேலாழி யிறக்கலா
தெழுமுந்நீர் பரந்தொழுகு மேமஞ்சேர் துறைவகேள் ;

இவை யிரண்டும் நான்கடித் தரவு.

கொடிபுரையு நுழைநுசுப்பிற் குழைக்கமர்ந்த திருமுகத்தாள்
தொடிநெகிழ்ந்த தோள்கண்டுந் துறைவலனே யென்றியால்.

கண்கவரு மணிப்பைம்பூட் கயில்கவைய சிறுபுறத்தாள்
தெண்பனிநீ ருகக்கண்டுந் தெரிந்திலனே யென்றியால்.

நீர்பூத்த நிரையிதழ்க்க ணின்ஞெசிந்த புருவத்தாள்
பீர்பூத்த நுதல்கண்டும் பிரியலனே யென்றியால்.

கனைவரலாற் றிருகரைபோல் கைநில்லா நுண்ணெகிழ்ந்து
நினையுமென் நிலைகண்டும் நீங்கலனே யென்றியால்.

வீழ்சுடரி னெய்யேபோல் விழுமநோய் பொறுக்கலாத்
தாழ்தருமென் னிலைகண்டுந் தாங்கலனே யென்றியால்.

கலங்கவிழ்ந்த நாய்கன்போற் களைதுணை பிறிதின்றிப்
புலம்புமென் னிலைகண்டும் போகிலனே யென்றியால்,

இவையாறும் இரண்டடித் தாழிசை.

அதனால்—இது தனிச்சொல்.

அடும்பயி லிறும்பி னெடும்பனை மிசைதொறுங்
கொடும்புற மடலிடை யொடுங்கின குருகு.

செறிதரு செருவிடை யெறிதொழி லிளையவர்
நெறிதரு புரவியின் மறிதருந் திமில்.

அரசுடை நிரைபடை விரைசெறி முரசென
நுரைவரு திரையொடு கரைபொரு கடல்.

அலங்கொளி யவிர்சுட ரிலங்கொளி மலர்தொறுங்
கலந்தெறு காலொடு புலம்பின பொழில்.

இவை நான்கும் இரண்டடி அராகம்.

விடாஅது சுழலுமென் வெள்வளையுந் தவிர்ப்பாய்மன்
கெடாஅது பெருகுமென் கேண்மையு நிறுப்பாயோ.

ஒல்லாது சுழலுமென் ஒள்வளையுஞ் செறிப்பாய்மன்
நில்லாது பெருகுமென் நெஞ்சமு நிறுப்பாயோ.

தாங்காது கழலுமென் தகைவளையுந் தவிர்ப்பாய்மன்
நீங்காது பெருகுமென் நெஞ்சமு நிறுப்பாயோ.

மறவாத வன்பினேன் மன்னிற்கு மாறுரையாய்
துறவாத தமருடையேன் துயர்தீரு மாறுரையாய்.

காதலார் மார்பின்றிக் காமக்கு மருந்துரையாய்
ஏதிலார் தலைசாய யானுய்யு மாறுரையாய்.

இணைபிரிந்தார் மார்பின்றி யின்பக்கு மருந்துரையாய்
துணைபிரிந்த தமருடையேன் துயர்தீரு மாறுரையாய்.

இவை ஆறும் இரண்டடித் தாழிசை.

எனவாங்கு—இது தனிச்சொல்.

பகைபோன் றதுதுறை ; பரிவா யினகுறி ;
நகையிழந் ததுமுகம் ; நனிநா ணிற்றுளம் ;
தகையிழந் தனதோள் ; தலைசிறந் ததுதுயர் ;
புகைபரந் ததுமெய் ; பொறையாயிற் றென்னுயிர்.

இவை இருசீரோரடி எட்டம்போதரங்கம் (சிற்றெண்).

அதனால்—இது தனிச்சொல்.

இணையது நினையா லினையது பொழுதால்
நினையல் வாழி தோழி தொலையாப்
பனியொடு கழிக வுண்கண்
என்னொடு கழிகவித் துன்னிய நோயே"

இது நாலடி ஆசிரியச் சுரிதகம்.

இது தரவு இரண்டும், தாழிசை ஆறும், தனிச்சொல்லும், அராகம் நான்கும், மீண்டும் ஆறு தாழிசையும், தனிச்சொல்லும், இருசீரோரடி எட்டம்போதரங்கமும், தனிச்சொல்லும், நான்கடி ஆசிரியச் சுரிதகமும் பெற்று, கலிக்கோதப்பட்ட உறுப்புக்கள் மிக்கும் குறைந்தும் பிறழ்ந்தும் உறழ்ந்தும் மயங்கியும் வந்தமையான், மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா எனப்பட்டது. இன்னும் வேறுபட வருவனவெல்லாம் கலித்தொகையில் காண்க.

## 10. உறழ்கலிப்பா

இது வினாவிடையாக வரும். சுரிதகம் பெற்றும் பெறாமலும் வரும். இடையிடை கொச்சகங்கள் (வெண்பா) வரும். 'ஒரூஉநீ எங்கூந்தல்' (கலி–87), 'நலமிக நந்திய' (கலி–113) என்னும் கலிப்பாக்கள் உறழ் கலி யாகும்.

## இனம்

### கலித்தாழிசை

இரண்டடியும் பலவடியும் வந்து, ஈற்றடி மிக்கு, ஏனைய அடிகள் தம்முள் ஒத்தும் ஒவ்வாதும் வருதல் – **கலித்தாழிசை** எனப்படும். இது கலிப்பாவின் இனம்.

காட்டு :

" கொய்தினை காத்துங் குளவி யடுக்கத்தெம்
பொய்தற் சிறுகுடில் வாரனீ யைய நலம்வேண்டின்"

இது இரண்டடியாய் ஈற்றடி மிக்கு வந்த கலித்தாழிசை: முதலடி நாற்சீரடி. இரண்டாவதடி ஐஞ்சீரடி.

"வாள்வரி வேங்கை வழங்குஞ் சிறுநெறியெங்
கேள்வரும் போதில் எழால்வாழி வெண்டிங்காள்
கேள்வரும் போதில் எழாலாய்க் குறுலியரோ
நீள்வரி நாகத் தெயிறே வாழி வெண்டிங்காள்"

இது ஈற்றடி மிக்கு ஏனையடி மூன்றும் ஒத்து வந்த கலித்தாழிசை. மூன்றாவதடி இடைமடக்கு.

"பூண்ட பறையறையப் பூத மருள
நீண்ட சடையா னாடுமே;
நீண்ட சடையா னாடு மென்ப
மாண்ட சாயல் மலைமகள் காணவே காணவே"

இது ஈற்றடி மிக்கு, இரண்டாமடி குறைந்து, முதலடியும் மூன்றாமடியும் ஒத்துவந்த கலித்தாழிசை.

**குறிப்பு**: முதற் பாகத்தில் கூறிய கலித்தாழிசை வேறு, இது வேறு. இது கலிப்பாவின் இனம். அது அளவொத்த இரண்டடி வருவது. அது பரணிப் பனுவல் பாடுதற்குரிய தாழிசை. பிற பொருள் பற்றியும் பாடலாம். அது இரண்டடியாகவே வரும். இது இரண்டடியும் பலவடியும் வரும்.

### பயிற்சி

1. கலிப்பாவின் இலக்கணம் என்ன?
2. கலிப்பாவின் உறுப்புக்கள் எவை?
3. கலிப்பா எத்தனை வகைப்படும்?
4. தரவு தாழிசைகளின் அடியளவு என்ன?
5. வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பாவின் உறுப்புக்களை வரிசையாகக் கூறுக.
6. தரவு கொச்சகத்தின் இலக்கணம் என்ன?
7. கொச்சகம் என்பதன் பொருள் என்ன?
8. கலித்தாழிசை எவ்வாறு வரும்?
9. பரணி பாடும் தாழிசைகளுக்கும் கலிப்பாவின் இனமான கலித்தாழிசைக்கும் உள்ள வேறுபாடு என்ன?

## மருட்பா

வெண்பா முதலாக ஆசிரியம் ஈறாக ஒரு பா வருதல்-**மருட்பா** எனப்படும். மருட்பாவில் ஆசிரிய அடி இரண்டாய், அதுவும் ஈற்றயலடி சிந்தடியாய் வரும். வெண்பாவடியும் ஆசிரியவடியும் ஒத்து வருவன **சமநிலை மருட்பா** எனவும், ஒவ்வாது வருவன **வியநிலை மருட்பா** எனவும் பெயர் பெறும்.

**குறிப்பு:** மருட்பாவில் வரும் வெண்பா இன்னிசை வெண்பாவாக இருக்கினும், வெண்பா முடியும் இடத்தில், அதாவது வெண்பாவின் ஈற்றடியின் இறுதியில், அவ்வடியின் எதுகை பெற்ற தனிச்சீர் வரும்.

**காட்டு :**

" திருநுதல் வேரரும்புந் தேங்கோதை வாடும்
இருநிலஞ் சேவடியுந் தோயும்—அரிபரந்த
சேயித ழுண்கணு மிமைக்கும்
ஆகு மற்றிவ ளகலிடத் தணங்கே "

இது வெள்ளடியும் ஆசிரியவடியும் ஒத்து வந்தமையால் சமநிலை மருட்பா

" பலமுறையும் ஓம்பப் படுவன கேண்மின்
சொலன்முறைக்கட் டோன்றிச் சுடர்மணித்தே ரூர்ந்து
நிலமுறையி னுண்ட நிகரில்லார் மாட்டும்
சிலமுறை யல்லது செல்வங்கள் நில்லா
இலங்கு மெறிபடையு மேற்றமு மன்பும்
துலங்குதங் கல்வியும் தோற்றமு மேனைப்
பொலன்செய் புனைகலனே டிவ்வாற னுலும்
விலங்கிவருங் கூற்றை விலக்கலு மாகா
அனைத்தாதல் நீயிருங் கண்டீர்—நினைத்தக்க
கூறிய வெம்மொழி பிழையாது
தேறிநீ ரொழுகிற் சென்றுபயன் றருமே "

இது வெள்ளடி ஒன்பதும் ஆசிரியவடி இரண்டும் வந்தமையால் வியனிலை மருட்பா. வெள்ளூருகள் இன்னிசை வெள்ளடிகள். 'அனைத்தாதல்' என்பதன் எதுகை பெற்ற 'நினைத்தக்க' என்னும் தனிச்சீர் வந்தமை காண்க.

---

## இறுதிப் பயிற்சி

கீழ்வரும் வினாக்கட்குச் சரியான விடை தெரிந்து கொள்க.

### முதற்பாகம்

**1· உறுப்பியல்**

1. செய்யுள் உறுப்புக்கள் யாவை?
2. நேரசை, நிரையசை எழுத்துக்கள் எவை?
3. தனிக்குறில் எங்கெங்கு எவ்வெவ்வசையாக வரும்?
4. மாச்சீர், காய்ச்சீர்—ஒற்றுமை வேற்றுமை என்ன?
5. விளச்சீர் போன்ற சீர் எது?
6. சீர் பதினாறு, சீரின் வகை ஆறு—யாவை?
7. காசு, பிறப்பு—இவற்றின் பிறப்பிடம் எவை?
8. காசு, பிறப்பு—செய்யுளின் இடையில் வரின் எவ்வாறு அலகு பெறும்?
9. வெண்பாவின் ஈற்றில் வரும் சீர்கள் எவை?
10. தளை என்பது யாது? அது எத்தனை வகைப்படும்?
11. தளைகட்கு ஒப்புமை கூறுக.
12. இயற்சீர் வெண்டளை போன்ற தளைகள் எவை?
13. தளை தட்டும்போது ஐகாரம் எவ்வாறு அலகிடப் பெறும்? தளை தட்டும்போது ஆய்தம் எவ்வாறு அலகிடப் பெறும்?
14. தமிழ்மக்களே—இதைக் கருவிளங்காய் ஆக அலகிடுக. அவ்வாறு அலகிடுதலின் பெயர் என்ன?
15. அடி என்பது யாது? அது எத்தனை வகைப்படும்?
16. தொடை என்பது யாது? அது எத்தனை வகைப்படும்?

17. தொடைக்கும் தளைக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமை என்ன ?
18. இயைபுத்தொடைக்கும் மற்ற தொடைகளுக்குமுள்ள வேறுபாடென்ன ?
19. இயைபுத்தொடை பெரும் பான்மை எப் பாடலில் வரும் ?
20. இனமோனை எழுத்துக்கள் யாவை ?
21. இனமோனையில் உயிர்மெய் எவ்வாறு வர வேண்டும் ?
22. மோனையும் எதுகையும் எங்கெங்கு பயின்று வரும் ?
23. சீர்மோனை என்பது என்ன ?
24. எதுகையில் முதலெழுத்தும் மூன்றுவ தெழுத்தும் எவ்வாறு வரவேண்டும் ?
25. செந்தொடையின் இலக்கணம் யாது ?
26. உறழ்ச்சித்தொடை என்பது என்ன ? அது எத்தனை வகைப்படும் ?
27. கடையிணை, கடைக்கூழை, பொழிப்பு—இவற்றின் எதிர்த்தொடைகள் எவை ?

## 2. செய்யுளியல்

28. பாவும் பாவினமும் யாவை ? வரிசையாக எழுதுக.
29. செப்பலோசை, துள்ளலோசை—யாவை ?
30. தூங்கலோசை எப்பாவுக் குரியது ?
31. வெண்பாவின் இலக்கணம் என்ன ?
32. வெண்பாவில் வாராச் சீரும் தளையும் எவை ?
33. வெண்பா எத்தனை வகைப்படும் ?
34. நேரிசை, இன்னிசை வெண்பாக்களின் இலக்கணம் என்ன ?
35. பஃறொடை வெண்பா, கலிவெண்பா—அடியளவென்ன ?
36. ஓரடி முக்கால், மூவடி முக்கால்—எவற்றைக் குறிக்கும் ?
37. குறள்வெண் செந்துறை எவ்வாறு வரும் ?
38. ஆசிரியப்பா எத்தனை வகைப்படும் ?

39. நிலைமண்டில, அடிமறிமண்டில ஆசிரியப் பாக்களின் ஒற்றுமை வேற்றுமை என்ன?
40. ஆசிரியப்பா எவ்வாறு முடியும்?
41. ஆசிரியப்பாவின் முதலிலும் ஈற்றிலும் வரும் அடி எது?
42. கழிநெடிலடி நான்கு கொண்டது என்ன?
43. பதினைன்குசீர்க் கழிநெடிலடி என்பது யாது?
44. இனிய ஓசை பெறாத கழிநெடிலடிகள் யாவை?
45. கலிப்பாவில் வாராச் சீர்கள் யாவை?
46. கலிப்பா எத்தனை வகைப்படும்?
47. கலிப்பாவின் உறுப்புகள் எவை?
48. அராகம், அம்போதரங்கம்—குறிப்பெழுதுக.
49. அடக்கியல், எருத்து—என்ன?
50. அளவெண், இருசீ ரெட்டு—யாவை?
51. கொச்சக் கலிப்பா, கலிவிருத்தம்—ஒற்றுமை வேற்றுமை என்ன?
52. கட்டளைக் கலிப்பாவின் இலக்கணம் யாது?
53. கட்டளைக் கலிப்பா, கட்டளைக் கலித்துறை அடிகளில் எவ்வாறு எழுத்தெண்ணப்படும்?
54. கலித்தாழிசையின் இலக்கணம் என்ன? அதனை லேயே பாடப்படும் பனுவல் எது?
55. கலித்துறை, கலிவிருத்தம்,—அடி வேறுபாடு யாது?
56. கட்டளைக் கலித்துறையின் இலக்கணம் என்ன?
57. முறையே 11, 12, 16, 17 எழுத்துக்கள் வரும் கட்டளை அடிகள் எவை?
58. வஞ்சிப்பாவின் உறுப்பும் வகையும் யாவை?
59. வஞ்சித் தாழிசைக்கும் துறைக்கும் உள்ள வேறுபாடு என்ன?
60. குறளடி நான்கு, சிந்தடி நான்கு வரும் பாவினங்கள் யாவை?
61. இதுகாறும் நீங்கள் அறிந்த பாவையும் பாவினத்தையும் வரிசையாக எழுதுக.

## 3. புதிய செய்யுட்கள்

62. கும்மி, சிந்து—இவை கொள்வதற்கு இலக்கணம் யாது?

63. கும்மியின் இலக்கணம் என்ன? அது எத்தனை வகைப்படும்?
64. சிந்தினில், 'அடி' என்பது எதை?
65. முச்சீரிரட்டை, இருமுச்சீரிரட்டை என்பன யாவை?
66. சமனிலை, வியனிலைச் சிந்துகட்குள்ள வேறுபாடென்ன?
67. சிந்தின் வகைகள் யாவை?
68. எவை எல்லாம் சிந்தில் அடங்கும்?
69. வண்ணம் என்பது யாது? வண்ணப் பாக்களாலேயே செய்யப்பட்ட நூல் எது?
70. பண்ணத்தி என்பது என்ன? விளக்கந் தருக.
71. பல்லவி, பல்லவி எடுப்பு, கண்ணி—பொருள் விளக்கந் தருக.

## 4. கவியரங்கம்

72. கவியரங்கம் என்பது யாது?
73. இங்கு எவ்வாறு கவியரங்கேற்றப்பட்டுள்ளது?
74. இக் கவியரங் கேற்றம் இளங்கவிஞர்க்குச் செய்யும் நன்மைகள் யாவை?
75. "பொன்னார் மேனியின்மேல்
வைத்திட்ட வொளியதனால்
தன்னேரில் லாதபசு மயில்"
இக் குறள் வெண்பாவை அரங்கேற்றுக.

# இரண்டாம் பாகம்

## 1. உறுப்பியல்

76. நாலசைச் சீர்கள் யாவை?
77. தண்பூ—இது எச்சீர் போன்றது?
78. பூச்சீர், நிழற்சீர்கள் எவ்வாறு தளை கொள்ளப்படும்?
79. தளை தட்டும்போதும் தட்டாதபோதும் குற்றியலிகரமும் அளபெடையும் எவ்வாறு அலகிடப் பெறும்?
80. இனவெதுகை, ஆசெதுகை—எடுத்துக்காட்டுத் தருக.
81. லகரமெய் எம்மெய்களோடு மயங்காது? அதனால் அது எங்கு ஆசாக வரும்?

## 2. செய்யுளியல்

82. வெண்டாழிசையின் இலக்கணம் என்ன? எதை வெண்டாழிசை எனல் பொருந்தாது? ஏன்?
83. வெண்டுறையின் வகையினைக் கூறுக.
84. அடிதோறும் அடிமுடிவிடத்துத் தனிச்சொற் பெற்றுவரும் பாவினம் எது?
85. ஆசிரியத்தாழிசை யாது? அது எவ்வாறு வரும்?
86. ஆசிரியத்துறை நான்கு வகைப்படும். அவை யாவை?
87. தரவு தாழிசைகளின் அடியளவு என்ன?
88. ஒத்தாழிசைக் கலிப்பா எத்தனை வகைப்படும்? ஒவ்வொன்றின் இலக்கணத்தை வரைக.
89. வெண்கலிப்பாவுக்கும் கலிவெண்பாவுக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமை என்ன?
90. கொச்சகம்—குறிப்பு வரைக.
91. தரவு. தரவிணைக் கொச்சகக் கலிப்பாக்களின் உறுப்புக்கள் யாவை?
92. சிஃறாழிசை, பஃறாழிசைக் கொச்சகக் கலிப்பாக்கள் எவ்வாறு வரும்?
93. மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா—பெயர்க் காரணம் என்ன?
94. வினா விடையாக வரும் கலிப்பா எது?
95. கலித்தாழிசையின் இலக்கணம் என்ன? இதற்கும், முதற்பாகத்தில் கூறப்பட்ட கலித்தாழிசைக்கும் உள்ள வேறுபாடென்ன?
96. மருட்பா என்பது யாது? அது எத்தனை வகைப்படும்?
97. பாவும் பாவினமும் கும்மியும் சிந்துவகையும் வந்துள்ள நூல்களைக் குறிப்பிடுக.
98. பாவும் பாவினமும் கும்மியும் சிந்தும் வண்ணமும் பணத்தியும் பாடிப் பழகுக.

—✶—